THE SUDAROLI
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
# சுடர் ஒளி
30.00
பக்க்ங்கள் -28
வார சஞ்சிகை
ஒகஸ்ட் 29- செப்ரெம்பர் 04, 2012
August 29 - September 04, 2012

# சுப்பாரின் கொல்லைக்குள்ளே...





## அற்புதமும் ஆபத்தும்!






## பணிப் புறக்கணிப்பும் பாதிப்புறும் கல்வியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புக்குரிய சகல DFCC வர்தன வங்கி சேமிப்புக் கணக்கு வைப்பாளர்களுக்குமான அறிவித்தல்

**DFCC Vardhana Bank**
Your Most Caring and Trusted Bank

இல. 73, டபிள்யூ.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2, இலங்கை.
தொலைபேசி: +94 11 237 1371
ஃபெக்ஸ்: +94 11 237 1372
மின்னஞ்சல்: info@dfcc.lk
இணையத்தளம்: www.dfcc.lk

மதிப்புக்குரிய வாடிக்கையாளரே,

உங்கள் விசுவாசத்திற்கும் நீங்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் பிரதியுபகாரமாக, உங்கள் சேமிப்பு வைப்புக்களுக்கான வட்டி வீதங்களை அதிகரிக்கவும் எமது மற்றைய சகல சேவைகள் தொடர்பிலும் விசேட சலுகைளை வழங்கவும் DFCC வர்தன வங்கியின் தலைவர், சபைப் பணிப்பாளர்கள் மற்றும் முகாமைப் பீடத்தினர் தீர்மானித்துள்ளனர் என்பதனை எமது மதிப்புக்குரிய சகல "சேமிப்பு" வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நாட்டிலுள்ள உறுதிமிக்கதும் சிறப்புற நிர்வகிக்கப்படுவதுமான வணிக வங்கிகளுள் DFCC வர்தன வங்கியும் ஒன்றாகும் என்பதனை AA- என்ற ஃபிச் ரேட்டிங் லங்கா தர மதிப்பீடு உறுதிப்படுத்துவதனால், நீங்கள் பாடுபட்டுச் சம்பாதித்த பணம் எப்போதும் பாதுகாப்பாக இருக்கும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அதனை DFCC வர்தன வங்கியில் முதலீடு செய்யலாம்.

வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் மிகச் சிறந்த சேவையை வழங்குவதே DFCC வர்தன வங்கியின் கொள்கையாகும். எம்மிடம் வைப்பிலிடப்பட்டுள்ள, உங்கள் கடின உழைப்பினால் பெறப்பட்ட பணத்திற்கு அதியுயர் வருமதியினை அளிப்பதே ஆண்டுதோறும் எமது நடைமுறையாக இருந்து வந்துள்ளது. தற்போது, நாம் உங்கள் சேமிப்பு வைப்புக்களுக்கான வட்டி வீதங்களை சுயமாகவே அதிகரித்துள்ளோம். முன்னொருபோதும் இல்லாத வகையிலான இத்தகைய எமது முற்போக்கு நடவடிக்கை, உங்கள் சேமிப்புக்களுக்கு மிகச் சிறந்த வருமானம் கிடைக்கும் என்பதை நீங்கள் உறுதியாக நம்புவதற்கான ஆதாரம் எனலாம்.

நீங்கள் தொடர்ச்சியாக எம்மீது வைத்துள்ள விசுவாசத்திற்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில், "உங்களுக்கு அதிநட்புறவான வங்கி" என்ற முறையில், நாம் உங்களுக்கு மிகச் சிறந்த சேவைகளையே எப்போதும் தொடர்ந்து வழங்குவதற்கு முயற்சி செய்வோம் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

வெவ்வேறு பிரிவு வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, பொருத்தமான சில புதிய கவர்ச்சிகர சேமிப்புத் திட்டங்களை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம் என்பதையும் இச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அவை பற்றி மேலும் அறிந்துகொள்ள அருகிலுள்ள DFCC வர்தன வங்கிக் கிளைக்கு வருகை தருமாறு அல்லது தொடர்புகொள்ளுமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். உங்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள விசேட நன்மைகளின் முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

உங்கள் நம்பிக்கைக்குரிய,

லக்ஷ்மன் சில்வா
பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
DFCC வர்தன வங்கி

DFCC வங்கியின் உப நிறுவனம்

## மெகா போனஸ், வர்தன ஜூனியர் மற்றும் வர்தன ஜூனியர் + வாடிக்கையாளர்களுக்கான மேலதிக நன்மைகள்

### அதிகரித்த வட்டி வீதங்கள்

| கணக்கு | தொகை | மறுசீரமைக்கப்பட்ட வீதங்கள் | முன்னர் |
|---|---|---|---|
| Mega போனஸ் சேமிப்புக் கணக்கு | 1,000.00 - 49,999.99 | = 5.00 % | (4.00%) |
| | 50,000.00 - 249,999.99 | = 6.00 % | (5.50%) |
| | 250,000.00 - 449,999.99 | = 7.00 % | (6.75%) |
| | 500,000.00 - 999,999.99 | = 8.50 % | (8.50%) |
| | 1,000,000.00 and above | =10.00 % | (8.50%) |
| Vardhana Junior | 1,000.00 - 4,999.99 | = 5.00 % | (4.50%) |
| | 5,000.00 - 99,999.99 | = 5.50 % | (5.00%) |
| | 100,000.00 and above | = 7.00 % | (5.00%) |
| Vardhana Junior + | 100,000.00 - 149,999.99 | = 8.25 % | (8.25%) |
| | 150,000.00 - 249,999.99 | = 8.50 % | (8.50%) |
| | 250,000.00 - 449,999.99 | = 8.75 % | (8.75%) |
| | 500,000.00 and above | =10.50 % | (9.00%) |

### விசேட சலுகைகள்

- "ரண்வரம்" தங்க அடகுக்கு, வழமையான வட்டியைவிட ஆண்டுக்கு 0.05% குறைவான சலுகை வட்டி
- "வர்தன சந்தெல்ல" வீடமைப்புக் கடனுக்கு, வழமையான வட்டியைவிட ஆண்டுக்கு 0.50% குறைவான சலுகை வட்டி
- தனிப்பட்ட கடன்களுக்கு, வழமையான வட்டியைவிட ஆண்டுக்கு 0.50% குறைவான சலுகை வட்டி
- "வர்தன லீசிங்" குத்தகைக்கு, வழமையான வட்டியைவிட ஆண்டுக்கு 0.50% குறைவான சலுகை வட்டி
- அதிகரித்த நாளாந்த ATM மீளப்பெறுகை உச்சவரம்பு – வழக்கத்தைவிட ரூ.10,000/- அதிகம்.
- புதிய நடைமுறைக் கணக்குகளுக்கு 3 மாத காலத்திற்கு ஆகக்கூடியதாக 5 காசோலைப் புத்தகங்கள் இலவசம் (ஏனைய தகுதி நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் வேளையில் மாத்திரம்)
- தெரிவு செய்யப்பட்ட DFCC வர்தன வங்கி அல்லாத ATM கள் உட்பட 500 க்கு மேற்பட்ட ATMகளில் கட்டணமின்றிப் பணத்தை மீளப்பெறலாம்.

விசேட சலுகைகளைப் பெறுவதற்கு:-

* தொடர்ச்சியான 6 மாதங்களுக்கு ரூபா.15000/-ஐ குறைந்தபட்ச மாதாந்தக் கணக்கு மீதியாகப் பேணுதல் வேண்டும்.
* VJ மற்றும் VJ+ கணக்குகளைப் பொறுத்தவரையில் கணக்கு மீதி ரூபா.15000/- ஆக அதிகரிக்கப்படல் வேண்டும்.

**HOTLINE: (011) 266 3 888**

இணையத்தளம்: www.dfcc.lk

DFCC
# வர்தன் வங்கி
உங்களுக்கு அதிநட்புறவான வங்கி

வர்தன வங்கி பிட்ச் ரேட்டிங் லங்காவினால் AA-(lka) தரம் வழங்கப்பட்டுள்ளது

(குறித்த நேரத்திற்கு பணத்தை வழங்கத்தக்க உறுதிநிலையையும் நிரூபிக்கும் சான்றாக அமைகிறது)

DFFC வர்தன வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் வங்கியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பரின் கொல்லைக்குள்ளே...

• சந்திரசேகர ஆசாத்

'சுற்றிச் சுற்றிச் சுப்பரை கொல்லைக்குள்' என்று தமிழில் ஒரு கிராமத்து பழமொழி வழக்கில் உண்டு. ஒரு விடயத்திலிருந்து ஆரம்பித்து எங்கெங்கோ போவது போல போக்குக் காட்டி விட்டு மீண்டும் மீண்டும் தொடங்கிய இடத்துக்கு வருவதையே இப் பழமொழி நையாண்டித்தனமாகச் சுட்டிக் காட்டுகிறது. இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களும் அவருடைய அமைச்சர்களும் இந்தச் சுப்பரின் கொல்லைக்குள் சுற்றிச் சுற்றி வரும் நாடகத்தைக் கனகச்சிதமாகத் தொடர்ந்து அரங்கேற்றி வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் பேரழிவுகளுக்குப் பின்பு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமையைக் கொண்டாடும் முகமாக இடம்பெற்ற வெற்றி விழாவில் ஜனாதிபதி அவர்கள் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்துடன் மேலதிகம் சேர்த்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதாகப் பிரகடனம் செய்தார். ஒரு வருடமாகியும் எந்த ஒரு நகர்வும் மேற்கொள்ளப்படாத நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தொடர்ச்சியான முயற்சிகள் காரணமாகவும், இந்தியாவின் அழுத்தம் காரணமாகவும் அரசுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே பேச்சுகள் ஆரம்பமாகின. ஒரு வருடமாக இப்பேச்சுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் புலிகள் கேட்பதைக் கேட்கக் கூடாது. காணி பொலிஸ் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட மாட்டாது போன்ற கருத்துகள் ஜனாதிபதியால் பேச்சு மேசைக்கு வெளியே வெளியிடப்பட்டு, பேச்சுகளால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை என்ற தோற்றப்பாட்டை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அதுமட்டுமன்றி பேச்சுகளின் ஆரம்பத்தில் தடுத்து வைக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிடுவது என எட்டப்பட்ட முடிவு பேச்சுகள் இடைநிறுத்தப்படும் வரை நிறைவேற்றப்படவில்லை. அதுமட்டுமின்றி, பேச்சுவார்த்தையில் ஆராயப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை.

ஒரு கட்டத்தில் பேச்சுகள் அரசுக்கும் கூட்ட மைப்புக்கும் இடையில் அல்ல. அது கூட்டமைப்புக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையில் தான் எனவும் கூறப்பட்டது. எனினும் கூட பேச்சுகள் மீண்டும் தொடர எவ்வித முயற்சியும் எடுக்கப்படாமலே இனி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலேயே இனப் பிரச்சினை விவகாரம் பேசப்படும் என அறிவிக்கப்பட்டது.

அரசுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையே ஒரு உடன்பாடு எட்டப்பட்டு அதன் அடிப்படையில் பேச்சுகளை நடத்தத் தயார் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறிவித்தபோதும் அது அரச தரப்பால் நிராகரிக்கப்பட்டு விட்டது எனக் கூறுவதை விட பொருட்படுத்தப்படக் கூட இல்லை என்றே கூற வேண்டும்.

இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான பிரச்சினைகளுக்கு மஹிந்த சிந்தனையில் உதித்த அபூர்வமான மந்திரக் கோலான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவே முன் நிறுத்தப்படுகிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு கொள்வதை மறுக்கவில்லை. ஆனால் அங்கு பேசப்படுபவை ஒரு அடிப்படையிலிருந்தே ஆரம்பமாக வேண்டும் எனவும் அந்த அடிப்படை கூட்டமைப்பின் இணக்கப்பாட்டில் உருவாக்கப்பட வேண்டும் என அது எதிர்பார்க்கி றது. அதன் நியாயத் தன்மையையும், நியாயமான ஒரு தீர்வை எட்டக் கூடிய சாத்தியப்பாட்டையும் எவரும் மறுத்து விடமுடியாது. ஆனால் ஜனாதிபதி தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்ற மறுக்கிறது என மக்கள் மத்தியிலும் சர்வதேச மட்டத்திலும் பிரசாரம் செய்து வருகிறார்.

இன்று இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் கொடுக்கும் அழுத்தங்களிலிருந்து தப்பவும், காலத்தை இழுத்தடிக்கவும் இலங்கை அரசு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அமர்வுகளைப் பயன்படுத்த முனைகிறதேயன்றி ஒரு நியாயபூர்வமான தீர்வை எட்டவல்ல என்பதைத் தெட்டத் தெளிவாகவே புரிந்துகொள்ள முடிகிறது.



தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு கொள்வதை மறுக்கவில்லை. ஆனால் அங்கு பேசப்படுபவை ஒரு அடிப்படையிலிருந்தே ஆரம்பமாக வேண்டும் எனவும் அந்த அடிப்படை கூட்டமைப்பின் இணக்கப்பாட்டில் உருவாக்கப்பட வேண்டும் என அது எதிர்பார்க்கிறது. அதன் நியாயத் தன்மையையும், நியாயமான ஒரு தீர்வை எட்டக் கூடிய சாத்தியப்பாட்டையும் எவரும் மறுத்து விடமுடியாது. ஆனால் ஜனாதிபதி தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு பற்ற மறுக்கிறது என மக்கள் மத்தியிலும் சர்வதேச மட்டத்திலும் பிரசாரம் செய்து வருகிறார்.



அந்த நோக்கத்திற்காகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கு கொள்ள இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கருத்து இலங்கையால் முன்வைக்கப்பட்டது.

அந்த முயற்சியின் இன்னுமொரு கட்டமாகவே இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் தென்னாபிரிக்காவை உள்ளிழுப்பது என்ற முயற்சி மேற்கொள்ளப் பட்டிருப்பது புலனாகிறது.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தென்னாபிரிக்கா அனுசரணையாளராகச் செயற்படவுள்ளதாக செய்தி வந்த போதே இலங்கையின் பல மூலைகளிலிருந்தும் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன.

குறிப்பாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அப்படி எதுவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும், இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரம் இதில் வெளியார் எவரையும் தலையிட அனுமதிக்கப் போவதில்லை எனவும் அடித்துக் கூறினார். ஆனால் தென்னாபிரிக்காவின் பிரதிநிதியாக இங்கு விஜயம் செய்து ஜனாதிபதியுடனும் தமிழ் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுக்களை நடத்திய இப்றாகிம் அவர்கள் தான் இலங்கை அரசின் அழைப்பின் பேரிலேயே இங்கு வந்ததாக ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்தார். ஒரு வெளிவிவகார அமைச்சருக்குத் தெரியாமல் ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதி அழைக்கப்பட முடியாது. அப்படியானால் ஏன் அவர் அப்படிப் பொய் சொன்னார். வழமைபோலவே உள்நாட்டில் ஒன்றும் வெளிநாட்டில் வேறொன்றும் கூறும் இலங்கை அரசின் இரட்டை நாக்கு இவரையும் விட்டு வைக்கவில்லைப் போல் தெரிகிறது. அதே வேளையில், அரச சார்பு ஊடகமொன்று இனப்பிரச்சினை விவகாரத்தில் அனுசரணையாளராகச் செயற்பட தென்னாபிரிக்காவுக்குத் தகுதி இல்லை என்பது போல் ஒரு ஆய்வை மேற்கொண்டிருந்தது. அது தனது ஆய்வில் நெல்சன் மண்டேலா, டெஸ் மன்டூட்டு, யேக்கப் சுமோ போன்றவர்கள் முதியவர்களாகி விட்டனர் எனவும், அங்கேயே இன்னும் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்ற தொனியிலும் தெரிவித்திருந்தது. அதற்கு உதாரணமாக அண்மையில் தென்னாபிரிக்காவில் சுரங்கத் தொழிலாளர் மேல் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் சுட்டிக் காட்டப்பட்டது. அது இன ஒடுக்குமுறை சம்பந்தப்பட்டதல்ல தொழிலாளர்களின் ஊதிய உயர்வு தொடர்பான போராட்டம் அது என்பதை அந்த ஊடகவியலாளர் புரிந்து கொள்ள முடியாமல் போனது பரிதாபம்தான்.

எப்படியிருந்த போதிலும் இனப்பிரச்சினை விவகாரத்தில் தென்னாபிரிக்கா பங்கு கொள்வதைக் கண்டித்தவர்கள் மூக்குடைபட்டது மட்டும் உண்மை. தென்னாபிரிக்கப் பிரதிநிதி இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே வந்தார் என்ற உண்மை வெளிப்பட்டு விட்டது.

அடுத்த கேள்வி இலங்கை அரசு அவரை அழைத்தது ஏன்? தென்னாபிரிக்கப் பிரதிநிதிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்த போது, அரசுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக அனுசரணையாளராகச் செயற்படவுள்ளதாகவும் அது தொடர்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கருத்து என்ன என்பதையும் கேட்டுள்ளனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அது தொடர்பாகத் தங்கள் பரிபூரண சம்மதத்தைத் தெரிவித்தனர்.

அதன் பின்பு தென்னாபிரிக்கப் பிரதிநிதி இப்றாகிம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவைச் சந்தித்தார். அதன்பின்பு அவர் மீண்டும் ஒருமுறை தமிழ் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்து ஜனாதிபதி, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குகொள்ள வேண்டும் எனவும் அதன் பின்பு அதற்குச் சமாந்தரமாக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்குமிடையேயான பேச்சுகளை நடத்த முடியும் எனத் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டநர். தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதற்கான பதில் எதையும் உடனடியாகத் தெரிவிக்கவில்லை.

பின்பு ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்ட இப்றாகிம் அவர்கள் தாங்கள் அனுசரணையாளர்களாகவோ, மத்தியஸ்தம் வகிப்பவர்களாகவோ செயற்படப் போவதில்லை எனவும் இனப்பிரச்சினை விவகாரத்தில் தமது அனுபவங்களை இரு தரப்புகளுடனும் பகிர்ந்து கொள்ளப் போவதாகவும் தெரிவித்திருந்தார்.

எனவே, இவற்றிலிருந்து தென்னாபிரிக்கப் பிரதிநிதிகள் இங்கு அழைக்கப்பட்டது உண்மையாகவே அவர்களின் அனுபவங்களின் அடிப்படையில் அவர்களின் அனுசரணையுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அல்ல தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மேல் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளும்படி தென்னாபிரிக்கா மூலம் ஒருவித அழுத்தம் கொடுப்பதற்காகவே என்பதைத் தெட்டத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

அதாவது, நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற 'சுப்பரின் கொல்லைக்குள்ளே' தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் சுற்றிச் சுற்றிவர வைப்பதற்கு இலங்கை அரசு இப்போது தென்னாபிரிக்காவைப் பயன்படுத்த முனைகிறது என்பதுதான் அப்பட்டமான உண்மை.

எனவே, மஹிந்த ராஜபக்ச விரிக்கும் மாயவலைகளில் தமிழர் தரப்பு விழுந்து விடாமல் விழிப்பாக இருப்பது மிகவும் முக்கியமானதாகும்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாரம்பரிய அடையாளங்கள்

அழகிய ஸ்ரீ சுவாமி கோவிலின் மணிக் கோபுரம் அழகாகக் கட்டப் பட்டிருந்தது. மாபிள் பதிக்கப்பட்டே கட்டப்பட்ட கோபுரத்தின் உள்ளே அழகிய வெண்கல மணியொன்று "கணீர்" என ஒலிக்க, பூசை பிரார்த்தனைகளும் "அரோகரா அரோகரா" என்ற பக்த கோஷங்களும் நிரம்ப அந்தப் பெரியவர் முன்னிற்க முதன்முறையாக அந்தமணி தன் வேலையை ஆரம்பித்தது. பக்தர்களுக்கும் பூசகர்களுக்கும் அளவற்ற மகிழ்ச்சி. ஆனால் அந்த மணிக்கோபுரத்தின்



கீழ்ச் சீமெந்துக் கட்டிலே பதிக்கப்பட்ட அந்தப் பளிங்குக் கல்லில் வரையப்பட்டிருந்த அந்தக் கோபுரத்துக்கான உபயகாரரின் பெயர் பலரின் மனத்தை மகிழ்விக்கவில்லை.

அந்தக் கோபுரம் கோவிலின் தேவைக்காகப் பலராலும் அன்பளிப்புச் செய்யப்பட்ட பணத்திலிருந்தே கட்டப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் கல்லிலே அந்தப் பெரியவரின் பெயரும் அதனை கட்டுவதற்கென்று முன்னின்ற அந்தக் கோவிலின் அயலிலிருந்த சண்முகத்தாரின் பெயரும் மாத்திரமே பொறிக்கப்பட்டிருந்தது. பணத்தைச் சேர்த்துக் கொட்டிய பக்தர்களைப் பற்றி இவர்கள் எதுவுமே குறிப்பிடாமல் மறைத்து விட்டார்கள். இது அங்கு கூடிய பக்தர்களுக்கு மனதை உறுத்தும் காட்சியாகத் தெரிந்தது. அவர்கள் அவ்விடத்தில் எதுவுமே பேசவில்லை.

மணிக்கோபுரத்து மணியொலிக்க கோவிலில் பூசை தொடர்ந்தது. இந்தச் செய்தி கிராமத்தில் பரவியது. எவருமே பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. என்னைக் கண்ட மணியம் அண்ணர் என்னிடம் மெதுவாகச் சொன்னார். "இது பெரிய இடத்துச் சம்பந்தம். இவர்கள் கடவுளுக்குக் கொடுக்கிற போதும் பறையறைந்து ஊரைக் கூட்டிப் பேருக்குத் தான் செய்வார்கள்.

"நாலு துண்டையும் துவாயையும் நாலு பேருக்குக் கொடுக்கிறதுக்கு பேப்பரில நாலு பக்கத்தில் விளம்பரம் போடுகிறதுதானே இப்ப வழக்கம்" என்றார். அருகில் நின்ற இராமநாதன்.

"ஓமோம் ஆனால் வலக்கை செய்யிறதை இடக்கையே அறியக் கூடாது என்று சொல்லும் போது இவர்கள் ஏன் கடவுளுக்குச் செய்யும் சேவைக்கும் கல்லுப் பதிக்கக் கதை சொல்லுறாங்கள்."

"அதில என்ன விசேடமெண்டால் காசு கொடுத்த பக்தர்களெல்லாம் அதில பங்காளர் என்று காட்டினால் கடவுள் அவருக்கு அருளமாட்டார் போல...!" என்று சொல்லிச் சிரித்தார் இராமநாதர்.

"கொடைகள், உதவிகள், நற்சேவைகள் பொதுச் சேவைகளெல்லாம் இப்பொழுது அவரவரின் பேருக்கும் புகழுக்காகவுமே செய்யப்படுகின்றன. முன்னரே ஆண்டு பலவாக நிலைத்து இருந்ததும் இருக்கிறதும் என்றோ யாரோ அத்திவாரமிட்டுக் கட்டியதுமான பழைமையையும், வரலாற்றையும் மறைத்துப் புதிதாய் முளைத்ததாகத் தமது பெயரையும் பதவியையும் போட்டுப் படங்காட்டுறதும் நடக்குது தானே" என்றார் மணியம்.

"எல்லாமே ஏமாற்று வேலைகள் என்பது தெரிந்து கொண்டு செய்பவர்களை என்னென்பது இன்னமும் தமது ஏமாற்று வேலையை இனங்காண இயலாதோர் இருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பதால்தான் இந்த ஏமாளி கோமாளி வேலைகள் எல்லாவற்றையும் பக்தியின் பெயரால் செய்கிறார்கள். நாங்கள் கொஞ்சம் விழிப்பாக இருக்க வேணும்" என்று சொன்ன இராமநாதனின் வார்த்தைகள் பலரையும் உசார்படுத்தவே செய்தன.

"போர்த்துக்கீசர் கட்டின கோட்டையையும் கல்லுப் பதிக்க இப்ப நாங்க கட்டினதெண்டு எழுதினா? என்ன செய்யிறது" என்றொரு குரல் அங்கே கேட்டது. மக்கள் விழிப்பாக இல்லாது போயின் பழைய பள்ளிக்கூடங்கள் புதிய பெயரிலும் பழைமை வாய்ந்த சரித்திரப் புகழ்தரும் உண்மைகள் பதிவுகளிலிருந்து ஒளிந்தும் போகலாம். எமது மக்களும் சமூகமும் சற்றே உசாராக இருக்கத்தான் வேணும். தொன்மைச் செல்வங்கள் எங்கள் பாரம்பரியத்தின் அடையாளங்கள் அவைகள். எங்கள் மண்ணின் உரிமைகள்.

**நெடுந்தீவு மகேஷ்**

# அடம்பன் கொடியாக மாற அழைக்கிறார்.

நோக்கும் திசையும், பயணிக்கும் பாதையும், அடையும் இலக்கும், நேரானதும் நன்மை தருவதுமெனின் நாம் யாவருமே ஒன்றுபட்டுப் பயணிப்பதே உயர்வானது. எமக்குள் முரண்பட்டு ஏதேதோ கனவுகளுக்குள் மக்களைச் சிக்க வைத்துப் பல பிரிவாகி மக்களுக்குப் பயன்தராப் பிதற்றல்களோடு பேசிப் பேசியே பகைமையையே விளைவிக்கும் செயல்களால் எமது வெற்றிகள் தொலைந்துபோகும் நிலையில் அதனைத் தவிர்க்க அடம்பன் கொடிபோல் வலிமைமிக்க ஐக்கியத்தைப் பேணுவோம் வாருங்கள் என்கின்றார் கவிஞர்.

*[illegible]*
*பகைகாலம் தொடர்கிறது*
*[illegible]*
*அருங்காலம் இருளாகுதே*
*[illegible]*
*[illegible] உயிர் சாகுது*
*[illegible]*
*மோசங்கள் தான் எஞ்சுது*

பகைமையை வளர்த்து செல்லும் வழியை சிந்திக்காமல் விழி கெட்டோர் போல அலையும் செய்கையால் எமது எதிர்காலம் இருண்டே கிடக்கிறது. மொழி, இனம், மதம் என்ற பேதங்களால் மோதுண்டு உரிமைகளையும் சுதந்திரத்தையும் இழந்து ஆட்சியாளரின் மோசங்களுக்கே ஆளாகினோம் என்கிறது கவிதை.

*[illegible]*
*வீணாகிப்போகும் காலம்*
*முடிவொன்று இல்லாமல் [illegible]*
*[illegible]*
*[illegible] வாழ்வின் [illegible]*

*[illegible]*
*பண்பான நேசக்கோலம்*
*[illegible]*
*[illegible]*

விடிவொன்று வேண்டி எழுந்தவர் காலம் வீணானது என்னவோ உண்மையே. ஆனால் அவர் எதிர்பார்த்த முடிவு இல்லாமையும் தொட்டுவரும் பகைமையும் எங்கள் வாழ்வைத் துயரத்துள் ஆழ்த்தி மேலும் மேலும் எமது ஒற்றுமையைக் குலைக்கும் மோசங்களாக நிறைகின்றன என்கிறார் கவிஞர்.

*[illegible]*
*பகைத்துச் சாகலாமோ?*
*[illegible]*
*[illegible]*
*[illegible] கொள்ளலாமோ?*
*[illegible]*
*[illegible]*
*[illegible]*
*[illegible]*

எமக்குள்ளேயே பழிவாங்கல்களும் பகைமையும் பெருகுவதால் அழிவுக்குள் நாமே வீழ்ந்து தொலைகின்றோம். குதூகலம் தொலைத்துக் குரூரமே எமதென்னும் இழிசெயலால் இருள் மேலும் பெருகுகிறது.



**கவிஞர் மானியூர் ரட்ணேஸ்.**

"இளைஞனே எமது பாதையில் நாம் ஒன்றுபட்டு எதிர்காலத்தை ஒளிமிக்கதாக்கத் திடம் கொண்டு முன்னேறி வா" என்கிறார். கவிஞர் மானியூர் ரட்ணேஸ் அழகியல் ஆற்றல் மிக்கவர். கல்வியியற் கல்லூரியின் சித்திர பாட விரிவுரையாளராகப் பணி தொடர்பவர். சிறந்ததும் பொருள் பொதிந்ததுமான கவிதைகளை எழுத்துப் பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதிப் பிரசுரித்து வருகிறார். அவரது கவிதைத் திறத்தால் மேலோங்கும் இலக்கியப் பணி செழிக்க வாழ்த்துவோம்.

**மைதிலி தேவராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகளும் மக்கள் தொண்டும்!?

குற்றம் சுமத்தப்பட்ட வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணியின் கொலை தொடக்கம் 13 வயதுச் சிறுமி மீதான பாலியல் வன்முறை மற்றும் 77 வயது மூதாட்டியின் மீதான தாக்குதல் வரையிலான உள்ளூர் அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் அதிகரித்தளவிலான, சட்டத்திற்குப் புறம்பான, தண்டனைக்குரிய குற்றச் செயல்களினால் மக்கள் மத்தியில் இவர்கள் மீது வெறுப்பேற்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் பதிவுகளின்படி இவ்வருடத்தில் மாத்திரம் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மற்றும் ஏனைய மாகாண சபைகள், நகர சபைகள் அத்துடன் பிரதேச சபைகள் போன்றவற்றின் உறுப்பினர்கள் என 42 அரசியல்வாதிகளுக்கெதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவர்களின் மீது சுமத்தப்பட்ட குற்றச் செயல்களில், கொலையில் இருந்து பாலியல் வன்முறை, தாக்குதல், தொந்தரவுகள், நிலக் கொள்ளை, புதையல் வேட்டை, கட்டுப்பாடற்ற மூர்க்கமான நடத்தை, வலிந்து லஞ்சம் கோரல், பலவந்த மீட்புப் பணம் கேட்டல், அதுமட்டுமன்றிப் பொலிஸார் அவர்களது கடமைகளைச் செய்யவிடாது இடைஞ்சலாக இருத்தல் எனப் பலவகையாக உள்ளன.

**பொலிஸ் திணைக்களத்தின் பதிவுகளின்படி இவ்வருடத்தில் மாத்திரம் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மற்றும் ஏனைய மாகாண சபைகள், நகர சபைகள் அத்துடன் பிரதேச சபைகள் போன்றவற்றின் உறுப்பினர்கள் என 42 அரசியல்வாதிகளுக்கெதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.**



கடந்த ஆவணிமாதம் 4ம் திகதி பன்று கண்டிப் பொது வைத்தியசாலையில் வைத்து ஓர் வைத்திய நிபுணரைத் தாக்கியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு மத்திய மாகாண சபையின் சுகாதார அமைச்சரான சுனில் அமரதுங்க கண்டிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேற்படி அமைச்சர் வைத்திய நிபுணரான டொக்டர் சப்புமல் தனபாலவைத் தாக்கியதுடன் நின்றுவிடாது, மத்திய மாகாண சபையின் சுகாதாரப் பணிப்பாளரான டொக்டர் சாந்தி சமரசிங்கவையும் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்ட அமைச்சர் பின்னர் கண்டிப் பிரதம மாஜிஸ்ரேட் நீதவான் ரவீந்திர பிரேமரட்னவினால் ஒரு இலட்சம் ரூபா ரொக்கப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று பதுளை பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் பதுளை நீர்வழங்கல் சபையின் அலுவலக ஊழியரைத் தாக்கியமைக்காக கைதுசெய்யப்பட்டு பதுளை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு ரூபா.50000/ ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய தாக்குதல் சம்பவங்களாக கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் உறுப்பினரான ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர் ஒருவர் அயற்கிராம வாசியொருவரைத் தாக்கியமைக்காகக் கைது செய்யப்பட்டதுடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனத்தின் மீது கல்லெறிந்து சேதப்படுத்தியமைக்காக நிடிகம பிரதேச சபை உறுப்பினர் கைது செய்யப்பட்டமை மற்றும் 72 வயதான மூதாட்டி ஒருவரைத் தாக்கியமைக்காக வறக்காப்பொல பிரதேச சபை உறுப்பினர் கைதுசெய்யப்பட்டமை என்பன அடங்கும்.

பழ வியாபாரி ஒருவரைத் தாக்கிய சம்பவத்தில் சந்தேக நபரான வத்தேகம நகரசபைத் தலைவர், வத்தேகம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். அதேவிதமாக 28 வயதான வாலிபரொருவரைத் தாக்கியதாகக் கிடைத்த புகாரின் பேரில் மாவத்தகம பிரதேச சபைத் தலைவரான உபுல் பெரேரா கடந்த மாதத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். அதேபோன்று மேல்மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரும் போட்டட்டல பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினரும் அக்மீமன பொலிஸாரினால் பொலிஸாரின் கடமைகளைச் செய்யவிடாது இடைஞ்சல் கொடுத்தமைக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்விரு சம்பவங்களிலும் குறித்த இரு பிரதேச சபை உறுப்பினர்களும் அளவுக்கு மிஞ்சிய மது போதையில் தமது வாகனங்களை நடுவீதியில் நிறுத்தி போக்குவரத்தினைத் தடை செய்து வாகன நெரிசலை ஏற்படுத்தினார்கள் எனக் கூறப்படுகின்றது.

மற்றுமொரு சம்பவத்தில் களனிப் பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினரான ஒருவர் குடிபோதையில் அப்பிரதேச வாசிகளுடன் குப்பை கூளங்களை அகற்றும் விடயத்தில் மூர்க்கத்தனமாக நடந்து கொண்டமைக்காகக் கைது செய்யப்பட்டு அதன் காரணமாக அரசிடமிருந்து அபராதப் பணமும் அறவிடப்பட்டிருக்கின்றது.

மேலும், பிறிதொரு சம்பவமாக களுத்துறை பிரதேச சபைத் தலைவரான லக்ஸ்மன் விதான பத்திரனகே என்பவர் கட்டிட ஒப்பந்தக்காரர் ஒருவரிடமிருந்து மூன்று மில்லியன் ரூபாவை லஞ்சமாகப் பெற முயன்ற போதினில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டமையும் நிகழ்ந்துள்ளது.

இவ்வருடத்திலும் அரசியல்வாதிகளின் மோசமான குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன. பங்குனி மாதத்தில் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள கஹவத்த எனும் இடத்தில் தாய் அத்துடன் மகன் ஆகியோரின் இரட்டைக் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு ஒரு பிரதேச சபை உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் தங்காலை விருந்தினர் விடுதியொன்றில் வைத்து 13 வயதுச் சிறுமியொருத்தியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக தங்காலை நகரசபை உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்தவருமான ஒருவர் ஆடிமாதத்தில் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

அதேமாதத்தில், 14 வயதுச் சிறுமி மீதான பாலியல் வன்முறை சம்பவமொன்றில் தொடர்புடையவராகக் கருதப்பட்டு ஆளும் கட்சியைச் சேர்ந்த அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தலைவர் கைது செய்யப்பட்டார்.

மக்கள் பிரதிநிதிகள் சிலரின் இத்தகைய மட்டுமீறிய தீய நடத்தைகளினால் நாட்டிலுள்ள பொதுமக்கள் மிகவும் குழம்பிய நிலையில் உள்ளனர் என மக்கள் உரிமைகள் குழுக்கள் தெரிவிக்கின்றனர்.

'நல்லாட்சிக்கான மக்கள் அமைப்பு' எனும் அமைப்பின் தலைவரான டொக்டர் ஏ.சி.விஸ்வலிங்கம் "இத்தகைய சட்டத்தை மீறியதும், சமூகத்திற்குக் கேடானதுமான செயல்களில் மாகாணசபை, நகரசபை, பிரதேசசபை உறுப்பினர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட ஈடுபட்டுள்ளனர். இது பொதுமக்கள் மத்தியில் பெரிதும் மோசமான கருத்துக்களைத் தோற்றுவித்துள்ளது. இத்தகைய நிலை மேலும் மோசமடையுமாயின் அல்லது நீடிக்குமாயின் எத்தகைய ஓர் சமுதாயத்தைத் தமது பிள்ளைகளுக்கு உறுதி செய்ய முடியுமென மக்கள் அங்கலாய்க்கின்றனர்" என விசனம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபரான நிமால் மெதிவக்கேயும் கூட உள்ளூர் அரசியல்வாதிகள் மத்தியில் இவ்வாறான குற்றச்செயல்களின் அதிகரிப்பின் பின்னால் உள்ள காரணங்களை நன்கு அலசி ஆராய்வது மிகவும் அவசியமும் அவசரமுமானது எனத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் "தற்போதுள்ள அரசியல்வாதிகள் தாங்கள் சட்டத்திற்கும் மேலானவர்கள் என்ற மன உணர்வினைக் கொண்டுள்ளனர். அத்துடன் சட்டத்தை நடைமுறைப் படுத்துபவர்களிடமிருந்து சுலபத்தில் தப்பிவிட முடியுமென்ற நம்பிக்கையையும் கொண்டிருக்கின்றனர்" எனக் கூறிய அவர் சந்தேக நபர்கள் ஆளுந்தரப்பைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் அவர்கள் மீது பாரபட்சமற்ற நடுநிலைமையுடன் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

"சமுதாயம் இத்தகைய சட்டத்திற்கு விரோதமான செயற்பாடுகளுக்கு எதிராகச் செயற்படாவிட்டால் இவை கட்டுப்பாட்டிற்கு அப்பாலும் சென்றுவிடக்கூடும். அதேவேளையில் இவற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்கு பொலிஸாருக்கு இதுவே தக்க தருணமாகும். கிராமங்கள் தோறும் நிறுவும் சிவில் பாதுகாப்புக் குழுக்களின் மூலம் கண்காணிப்பினை வலுப்படுத்த வேண்டும்" எனவும் அவர் கூறியுள்ளார்.

இத்தகைய அரசியல்வாதிகளுக்கெதிராகப் பொதுமக்களின் மட்டுமீறிய மனக் கிளர்ச்சிகள் சிலவற்றினை அண்மைய காலங்களில் கண்டு வருகின்றோம். மக்களால் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு அழுத்தம் கொடுக்க முடியும் எனவும் மெதிவக்கே தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஓர் செய்தியாளர் மகாநாட்டில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய ஆலோசகருமான மைத்திரிபால சிறீசேன கட்சி ஒருபோதும் அதனுடைய உறுப்பினர்களால் செய்யப்படும் கவலைக்குரிய தீய குற்றங்களைப் பொறுத்துக் கொள்ள மாட்டாது. அத்துடன் அத்தகைய குற்றங்களைச் செய்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியுள்ளார்.

அதேபோன்று, பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சரான ஜோன் செனவிரத்னவும் "சில உள்ளூர் அரசியல்வாதிகள் அவர்களுடைய அரசியல் அதிகாரம் பொதுமக்களுக்குத் தொண்டு புரிவதற்கே பயன்படுத்தப்படல் வேண்டும் என்பதனை உணரவேயில்லை" எனக் கூறியுள்ளார். அத்துடன் "சமூகத்தில் சட்டம், ஒழுங்கு என்பவற்றில் கடும் தொல்லை கொடுக்கும் பெருமளவிலான திடீர் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் அரசியல்வாதிகள் பொதுமக்களால் பொதுமக்களுக்குத் தொண்டு புரிவதற்காகவே தெரிவுசெய்யப்பட்டவர்களாதலால் அவர்களுள் விரோதமான அல்லது சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்வதில் மிகுந்த அவதானத்துடன் நடந்து கொள்ளுதல் வேண்டும்" எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரான கயந்த கருணாதிலக இதற்கும் ஒருபடி மேலே சென்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கீழ்மட்ட நிலையிலுள்ள அரசியல்வாதிகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வது அவர்களது கடமையாகும் எனக் கூறியுள்ளதுடன் "ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் சட்டத்திற்கு விரோதமான செயல்களில் ஈடுபடுகின்றனர். கிராமப் புறங்களிலேயே இத்தகைய சம்பவங்கள் அதிகம் இடம்பெறுகின்றன. சம்பந்தப்பட்டவர்கள் ஆளுந்தரப்பைச் சேர்ந்தவர்கள் என்பதால் உடனடியாகத் தாமதமின்றி அவர்களுக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. மேலும் கிராமப்புற மக்கள் அவர்களுக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாட்டினை மேற்கொள்ள அஞ்சுகின்றனர்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

உதாரணமாக, ஒரு பிரதேச சபை உறுப்பினரின் மனைவி பயணித்த பேருந்தினை அவரை இறக்குவதற்காக அவரது சொந்த வீட்டின் முன்னால் நிறுத்தாது அவ்விடத்திலிருந்து ஒருசில மீற்றர் தூரத்திலிருந்த பேருந்து தரிப்பு நிலையத்தில் இறக்கி வீட்டிற்கு ஒரு சொற்ப தூரம் நடந்து செல்ல வைத்தமைக்காகப் பேருந்துச் சாரதி தாக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம்.

சகல கட்சிகளும் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் போது முதலில் அவர்கள் போதைவஸ்து வியாபாரம் மற்றும் பாதாளக் குழுக்களுடன் தொடர்பில்லாதவர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கருணாதிலக தெரிவித்துள்ளார்.

***சண்டேரைம்ஸ் பத்திரிகையில் நட்சா பசியுக்கக் எழுதிய கட்டுரை.***

**தமிழில் ஜஸ்ரின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

29, ஓகஸ்ட் - 04 செப்ரெம்பர், 2012

95, ஜெயந்த மல்லிமாரச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன்: 0115736006
பக்ஸ்: 0115517944 -5
E-mail: editorial@sudaroli.com


## காத்திருப்பில் கரையும் நிலம்!

சமாதானப் பேச்சுவார்த்தைக் காலங்களில் ஜப்பான் நாட்டின் சிறப்புத் தூதுவராக தமிழ்ப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்த யசுசி அகாசி மீண்டும் வந்துள்ளார். கொழும்பில் ஜனாதிபதி உட்பட அரச பிரதிநிதிகளுடனும் எதிர்க்கட்சியினருடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்ட அகாசி போர் முடிவிற்குப்பின் முதல் முதலாக கிளிநொச்சிக்கும் வருகை செய்துள்ளார். அங்கு சில பொதுமக்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த அவர் சமய, சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினார்.

அரசதரப்பினர் போருக்குப் பின்னர் தாங்கள் மேற்கொண்டுள்ள மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்தும் வடக்கில் மேற்கொண்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் அகாசியிடம் விளக்கியுள்ளனர். போர் முடிவுற்று மூன்று வருடங்களாகியும் இனப் பிரச்சினைக்கான தீர்வு எதனையும் அரசாங்கம் முன்வைக்காமை, மீள்குடியமர்த்தலின் தாமதங்கள், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகள் முழுமைப்படுத்தப்படாமை, வடக்கில் இராணுவத்தினர் குறைக்கப்படாமை போன்ற விடயங்களும், போரின் பின்னரான காலகட்டத்தில் தமிழர் பிரதேசங்களில் இடம்பெறும் விரும்பத்தகாத சம்பவங்கள் குறித்தும் கூட்டமைப்பினர் அகாசியிடம் விளக்கியுள்ளனர்.

தென்னாபிரிக்க உயர்மட்டக் குழுவினரின் வருகையை அடுத்து ஜப்பானின் யசுசி அகாசியும் வருகை தந்திருப்பதை முக்கியமானதாகக் கருத முடிந்தாலும் இவ்வருகைகளின் நோக்கம் தெளிவானதாகவும், வெளிப்படையானதாகவும் இல்லை. ஆனால், அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகளுக்கு உதவுவதே இந்த வருகைகளின் நோக்கம் என அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள அழுத்தங்களை இவர்களின் வருகைகள், கருத்துக்கள் மூலமாக தளர்த்துவதும், தமிழர் தரப்பை இவர்களின் ஆலோசனைகளினூடாக தெரிவுக்குழுவில் பங்கேற்க வைப்பதும் அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கலாம் என்றே நம்ப முடிகின்றது.

ஆனாலும், யுத்தம் குறித்தும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தும், பின்னர் இடம்பெற்ற இறுதி யுத்தம் பற்றியும், யுத்த முடிவிற்குப் பின்னரான நிலைமைகள் பற்றியும் யசுசி அகாசி போன்றவர்கள் நன்கறிவர். யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் சமூகப்பிரதிநிதிகள் பொதுமக்களிடம் பேசும்போது யசுசி அகாசி சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தில் ஏற்பட்டிருந்த வாய்ப்புக்களை விடுதலைப்புலிகள் பயன்படுத்திக் கொள்ளவில்லை; யுத்தமே அவர்களின் தெரிவாக இருந்தது; அதனால் முடிவு வேறுவிதமாகவும் விபரீதமானதாகவும் அமைந்து விட்டது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இது, அன்றைய பேச்சுவார்த்தைகளுக்கு நடுநிலையாளர்களாக இருந்த நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம் உட்பட பலரும் குறிப்பிடும் விமர்சனமாகும்.

இன்றுள்ள நிலையில், தமிழ் மக்களை பொறுமை காக்கும் வகையிலான கருத்துக்களையும் அகாசி தெரிவித்திருக்கின்றார். போரை வெல்வது கடினமானது அதனையும் விட சமாதானத்தை ஏற்படுத்துவது கடினமானது என்றும் கூறியுள்ள அவர், இதுவொரு நீண்ட பயணம். இதனை பொறுமையுடன் எதிர்கொள்வதே அவசியம்; போரினால் கொடுக்கப்பட்டுள்ள விலை அதிகமானது; விரக்தியினால் எதிர்காலத்தில் எதுவுமே ஏற்பட்டுவிடப் போவதில்லை; தமிழர்கள் எதிர்பார்க்கும் தீர்வில் அரைவாசியாவது கிட்டும்; பொறுமையே எல்லாவற்றிற்கும் மருந்து. இவ்வாறெல்லாம் அவர் போதனை செய்துள்ளார்.

போருக்குப் பின்னர் பல நல்ல விடயங்களும் நடைபெற்றுள்ளது; சமாதானத்தில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன; 98 வீதமான மக்கள் மீள்குடியமர்த்தப் பட்டுள்ளனர் என்று அவர் அரசாங்கத்தைப் பாராட்டும் விதமாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்களையே தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வாகக் காட்ட முயலும் அரசாங்கத்தின் நோக்கத்தை யசுசி அகாசி விளங்கிக் கொள்ளாமலிருப்பாரா? தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் குடியேற்றங்கள் குறித்தும் அவர் அறியாமலிருப்பாரா? தமிழ் மக்களின் பொறுமையும் காத்திருப்பும் ஏற்படுத்தும் கால நீடிப்பில் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர்களின் குடிப்பரம்பலில் நிகழவிருக்கும் பெரும் பாதிப்பினை அவர் உணராமலிருப்பாரா?

இவை தமிழ் மக்களிடம் எழுந்துள்ள கேள்விகள்!

# போராடுதலும் தப்பியோடுதலும்!



— சிரேஷ்

அவுஸ்திரேலியா நோக்கிப் படகுகளில் செல்லும் தமிழர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. ஆபத்து மிகுந்ததாகவிருப்பினும் பயணங்கள் தொடர்கின்றன. இவ்வாறு செல்லும் படகுகள் இலங்கைக் கடற்படையினரிடம் பிடிபடுகிற சம்பவங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதும், படகுகள் கடலில் மூழ்கி பயணித்தவர்கள் உயிரிழந்த செய்திகள் ஊடகங்களில் வெளிவருகின்ற போதும் படகுகள் விரைந்து கொண்டுதானிருக்கின்றன.

இந்த சட்டவிரோதப் புலப்பெயர்வுகளைத் தடுக்குமாறு இலங்கை அவுஸ்திரேலியாவிடம் கோரிக்கை விடுத்தாலும், புலம்பெயரிகளை திருப்பியனுப்ப முடியாது என்ற நிலைப்பாட்டை அவுஸ்திரேலிய அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளதால் இப்புலப்பெயர்வுகள் தொடர்கின்றன.

இடையில், இவ்வாறான புகலிட வருகையாளர்களை கட்டுப்படுத்தும் நோக்கில், அவுஸ்திரேலிய நாடாளுமன்றில் ஒரு இறுக்கமான சட்டம் நிறைவேற்றப் பட்டது. படகுப் பணிகளை நேராக அவுஸ்திரேலியாவில் புகவிடாது நாரு மற்றும் பாபுவா நியுகினியா ஆகிய நாடுகளில் முகாம் அமைத்து தங்கச் செய்வது என்ற தீர்மானம் அந்நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இதன் பின்னரும் படகுப் பயணிகள் செல்வது குறைவடையவில்லை என்பதை அவதானிக்க முடிகின்றது. இப்போது வடபகுதி கடற்கரையிலிருந்தும் படகுகள் பயணிக்கத் தொடங்கியுள்ளன. வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு கடற்கரையிலிருந்து இப் படகுகள் புறப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

படகில் ஏறும்போது தகவலறிந்து பொலிஸாரிடம் சிக்கிக்கொள்ள நேருமா என்கிற முதற்பயம், சர்வதேசக் கடல் எல்லையை அடையும் வரை கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினரிடம் பிடிபட்டுவிடுவோமா என்கிற அடுத்த பயம். அதனையும் கடந்து செல்கையில் கடும் காற்றும் பேரலைகளும் உயிரைக் காவு கொண்டு விடுமோ என்கிற பயம். ஆனால், இவற்றையெல்லாம் கடந்து, எங்கோ ஓரிடத்தில் அகதிகளாக உள்ளெடுக்கப்பட்டுவிட்டால் எல்லாம் சுபமாக முடிந்துவிடும் என்று இப்பயணிகள் எண்ணுகின்றனர். ஆனால் அடுத்தடுத்து நடக்கப்போகின்றவற்றையெல்லாம் கற்பனை செய்து பார்க்க இவர்கள் விரும்புவதில்லை.

போராடுதல், தப்பியோடுதல் என்கிற இருவகையிலான செயற்பாடுகள் தமிழர்களுக்கு எண்பதுகளிலேயே தொடங்கிவிட்டன. எண்பத்துமூன்று ஜூலைக் கலவரத்தின் பின்னர் தமிழர்களுக்கேற்பட்ட கொடுமைகளுக்கு எதிராகப் போராடும் எண்ணம் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் மனங்களில் ஊற்றெடுக்க அவர்கள் ஆயுதமேந்திய விடுதலை இயக்கங்களில் தாமாகவே இணையத் தொடங்கினர். இன்னொரு பிரிவினர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குத் தப்பியோடினர். இயக்கங்களில் சேர்ந்தோரிலும் பார்க்க தப்பியோடியவர்களின் தொகையே அதிகமானது. இவ்வகையில் இன்று உலகம் முழுவதும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான தமிழர்கள் குடியேறி வாழ்கின்றார்கள். இவ்வாறு, போராடுதலும், தப்பியோடலுமான செயற்பாடுகள் தமிழர் வாழ்வில் இன்று வரை நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

மாத்தளன் முதல் முள்ளிவாய்க்கால் வரையிலுமான கடற்கரை வெளியில் முடக்கப்பட்டு நாளாந்தம் எறிகணைகளால் செத்துகொண்டிருந்த மக்கள் அனைவருமே போராடும் எண்ணம் முற்றாக தகர்ந்துவிட்ட நிலையில் அந்தக் கொலைக்களத்திலிருந்து தப்பியோடும் செயற்பாடுகளில் தீவிரமாக இயங்கினர். கடல் வழியாகவும் காடு, பற்றைகள் வழியாகவும் இவ்வாறு தப்பியோடுகையில் இருதரப்பினருக்குமிடையில் சிக்கி பலர் இறந்தும் போயினர். என்றாலும் தப்பியோடும் முயற்சி தொடர்ந்துகொண்டுதானிருந்தது. இறுதியில் மே மாத நடுப்பகுதியில் செத்தவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் வெளியேறி அம்முகாம்களில் முடக்கப்பட்டனர். பின்னர் முகாம்களிலிருந்து தப்பியோடும் முயற்சிகளும் தொடங்கின. பலர் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து முகாம்களைவிட்டுத் தப்பியோடினர். ஏனையவர்கள் சிறிது சிறிதாக மீள்குடியேற்றம் என்கிற பெயரில் முகாம்களை விட்டு வெளியேறினர். இவ்வாறு வந்தவர்கள்தான் இப்போது அதிகளவில் இலங்கை நாட்டை விட்டே தப்பியோடும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு செல்பவர்களில் தடுப்பிலிருந்து வெளியான முன்னாள் போராளிகள் கணிசமானவர்கள் எனத் தெரிய வருகின்றது. சமூகத்துடன் இணைந்துவாழ முடியாத நிலை, கண்காணிப்பு, அச்ச நிலை, பொருளாதாரமற்ற நிலை என பல காரணங்களினால் இவர்கள் இந்த நாடே வேண்டாம் என வெளியேறுகின்றனர். இவ்வாறான மனநிலை இன்று முன்னாள் போராளிகளுக்கு மட்டும் ஏற்பட்டதொன்றல்ல. பலருக்கும் ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டில் தமிழர்களின் இயல்பான வாழ்க்கை பற்றிய உறுதித்தன்மை கேள்விக்குறியாக்கப்பட்டதன் விளைவே இதுவாகும்.

இந்த நாட்டில் வாழ்வதைவிட எங்கேயாவது சென்றுவிட வேண்டும். அதற்காக எந்த ஆபத்தையும் கடக்கலாம் என்கிற ஒரு விரக்தியான மனநிலை இன்று தமிழர்களுக்கு ஏற்பட்டு விட்டது. படகுகளில் தப்பியோட முயன்றவர்களில் சுமார் எழுநூறு பேரையிலானோர் இதுவரை இலங்கைக் கடற்படை மற்றும், பொலிஸாரிடம் பிடிபட்டுள்ளனர். எனினும் படகுப் பயணங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகின்றன.

நகை, காணி உட்பட்ட சொத்துக்களை விற்றே இவர்கள் முகவர்களுக்குப் பணத்தை செலுத்துகின்றனர். இவ்வாறு செலுத்தியவர்களில் இலங்கைப் படையினரிடம் பிடிபடுகிறவர்களின் கதி அதோகதிதான்.

இவற்றிற்கெல்லாம் அப்பால், இன்று தமிழர்களின் பிரதேசத்தின் குடிப்பரம்பல் மிக மோசமான பாதிப்பு நிலையை அடைந்து கொண்டிருக்கின்றது. ஏற்கனவே புலம்பெயர்ந்து சென்றவர்களால் ஏற்பட்ட பாதிப்பு இன்றும் இடம்பெயர்வுகளால் அதிகரித்த வண்ணமே உள்ளது. தமிழ் பிரதேசங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மத்தியில் தமிழர்கள் தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருப்பதானது பேரினவாதத்தின் நோக்கங்களை இலகுபடுத்தியுள்ளது.

தமிழ் அரசியல்வாதிகள் என்னதான் அறிவுறுத்தல் விடுத்தாலும் முள்ளிவாய்க்காலின் பின்னால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏமாற்றம், நம்பிக்கையீனம் கலந்த விரக்திநிலை தமிழர்கள் தப்பியோடும் நிலையினையே உண்டாக்கிவிட்டுள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இது ஒரு பொய்யான மாநாடு, கலைஞரின் கபட நாடகம், பம்மாத்து, ஏமாற்று வித்தை என்றும், இது கலைஞரின் அந்தர் பல்டி என்றும் எதிர்க் கட்சியினரால் கூறப் பட்டாலும் தமிழ் மக்க ளின் உணர்வுகள் ரெசோ மாநாட்டின் மூலம் ஈழத் தமிழர் களுக்காக தட்டி எழுப்பப்பட்டுள்ளன.**




# உணர்வுகளை கிளறிவிட்டுள்ள 'ரெசோ'

எம்.எம்.நிலாம்டீன்

கலைஞர் கருணாநிதி, ஈழத் தமிழர்களின் காயங்களுக்கு மருந்து தடவுவதுதான் ரெசோ மாநாடு என்றும் ஈழத் தமிழர்களின் நல்வாழ்வுக்காகவும், நலனுக்காகவும் தான் இது என்றும் சென்னையில் நடந்த பிரமாண்டமான மாநாட்டில் உரை யாற்றியுள்ளார். தமிழக அரசின் பல தடைகளுக்கு மத்தியில், உச்ச நீதிமன்றத்தின் நீதியின் முன் ஜெயித்து நல்ல முறையில் ரெசோ மாநாடு நடந்து முடிந்தது.

உலகம் முழுவதும் இருந்து தமிழ் ஆர்வலர்கள், தமிழ் உணர்வாளர்கள் கலந்து சிறப்பித்துள்ளார்கள். மாநாட்டில் 11 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கனடா, ஜப்பான், ஆபிரிக்கா, பிரித்தானியா, சிங்கப்பூர், மலேசியா உட்பட ஆர்வலர்கள் கலந்து கொண்டார்கள்.

மாநாட்டில் வடபகுதியில் அரங்கேறிய மனிதப் பேரவலம், மனிதப் புதைகுழி, தாய்ப்பாலுக்கு பதிலாக கைக்குழந்தைகள் இரத்தம் அருந்திய கொடுமை, வான் தாக்குதலால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் அவலம், சிறுபான்மையினரின் பாலியல் வன்முறைகள் உட்பட அனைத்துக் கொடுமைகளையும் பறைசாற்றும் பிரபல கவிஞர் வைரமுத்து உட்பட பல கவிஞர்கள் இயற்றிய வரிகள் மாநாட்டில் தமிழக உணர்வு பாடகர்களால் பாடல்களாகப் பாடப்பட்டது. பாடல்களைச் செவியுற்ற அத்தனை பார்வையாளர்களும் கலங்கினார்கள். உள்ளத்தை உருக்கும் பாடல்கள் மனித நேயமுள்ள அனைவரையும் கண் கலங்க வைத்தது.

கலைஞரின் குடும்பத்தில் இருந்து ஸ்டாலின், கனிமொழி எம்.பி, மத்திய அமைச்சர் அழகிரி, தயாநிதி மாறன் எம்.பி, கலைஞரின் மனைவிகளான ராஜாத்தி அம்மாள், தயாளு அம்மாள் ஆகியோர் மாநாட்டின் முன்வரிசையில் அமர்ந்து இருந்தார்கள்.

கலைஞர் கடந்த சட்ட சபைத் தேர்தலில் படுதோல்வி கண்டார். அதைத் தொடர்ந்து புதுக்கோட்டை சங்கரன்கோயில் இடைத் தேர்தல்களில் தி.மு.க வேட்பாளர் கட்டுப் பணம் இழப்பு என்று தி.மு.க தொடர்ந்து படுதோல்வியடைந்து வருகின்றது. இரண்டு இடைத் தேர்தல்களில் தி.மு.க எழுச்சி பெறவும் தொடர் தோல்வியில் இருந்து எழவும், இந்தியாவில் 2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள லோக்சபா (பொதுத் தேர்தல்) தேர்தலில் வெற்றியை நோக்கி திமுக வைத் தயார்படுத்துவதற்காகவும் கருணாநிதி ரெசோ மாநாட்டை கையில் எடுத்துள்ளார் என விமர்சனங்கள் முன்வைக் கப்பட்டன.

இது ஒரு பொய்யான மாநாடு, கலைஞரின் கபட நாடகம், பம்மாத்து, ஏமாற்று வித்தை என்றும் இது கலைஞரின் அந்தர் பல்டி என்றும் எதிர்கட்சியினரால் கூறப்பட்டாலும் தமிழ் மக்களின் உணர்வுகள் ரெசோ மாநாட்டின் மூலம் ஈழத் தமிழர்களுக்காக தட்டி எழுப்பப் பட்டுள்ளன.

யுத்த மீறல், அப்பாவி மக்கள் கொலை, மனித உரிமை மீறல், இலங்கை அதிபரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தல், வட பகுதியில் இருந்து இராணுவம் வாபஸ் பெறல் என்ற தீர்மானங்களுடன் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களைக் கண்டித்தும் கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீட்டெடுக்க வேண்டும் என்றும் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 20ம் திகதி வரையும் தமிழ்நாடு முழுவதும் ரெசோ மாநாடு பற்றிய விளக்கவுரையை மக்களிடம் தி.மு.க முன்வைத்து வருகின்றது. சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர் கோயில், கோயம்புத்தூர், சேலம் ஆகிய நகரங்களுக்கும் இந்த ரெசோ மாநாட்டு விளக்கம் சென்றடையவுள்ளது. கலைஞரின் கண் கெட்ட பின்பு சூரிய நமஸ்காரமும், சுடலை ஞானமும் என்றாலும், இது ஈழத் தமிழர்களுக்கு ஒரு சாதகமான மாநாடு என்றுதான் சொல்ல வேண்டும். ஈழத் தமிழர்களை வைத்து அரசியல் நடாத்தும் கலைஞர் ஈழத் தமிழர்களுக்கு தனி ஈழம் தான் தீர்வாக அமையும் என்றும், இனி மேல் தான் இறக்கும் வரை ஈழத்திற்காகவும், ஈழத் தமிழர்கள் நல்வாழ்வுக்காகவும், அவர்களின் மறுவாழ்வுக்காகவும் தான் பாடுபடப் போவதாகவும் சூளுரைத்துள்ளார். (இதைத்தான் அந்தர் பல்டி என்கிறார்)

மாநாடு தமிழக மக்களிடத்தில் பெரும் வரவேற்புப் பெறுமா என்பதை பின்னர்தான் அறிய முடியும். மாநாட்டில் இலங்கை இடதுசாரியான விக்கிரமபாகு கருணாரட்ன கலந்து கொண்டது சிறப்பாகும். மாநாட்டில் கலந்து கொண்ட வெளிநாட்டு பிரதிநிதிகள் ஈழத்திற்கு ஆதரவாகவும், தனி ஈழம்தான் இலங்கைத் தமிழர் களுக்குத் தீர்வாக அமைய வேண் டும் என்றும் உரையாற்றினார்கள். கலைஞர் தனது சுய நலனுக்காக ரெசோ மாநாட்டைக் கூட்டினாலும் ரெசோ சர்வதேசத்திற்கு நல்லதொரு செய்தியைச் சொல்லியுள்ளது. அதாவது உலகம் விழித்து விட்டது, ஈழத் தமிழர்களுக்கு நீதி வேண்டும் என்ற குரல் உரத்து ஒலிக்கின்றது. அதற்காக அம்னஸ்ரி இன்ரர்நெஷனல் மனித உரிமை அமைப்பு முழு மூச்சாக இந்தியாவில் இருந்து கொண்டு செயற்பட்டு வருகின்றது.

ஈழத் தமிழர்களுக்காக உரத்துக் குரல் கொடுப்பதற்காக தமிழ் நாட்டின் ஒட்டு மொத்தத் தமிழர்களும் தயாராகத்தான் உள்ளார்கள் என்பதை ரெசோ மாநாடு பறைசாற்றியுள்ளது. ஆனால், தமிழக அரசியல்வாதிகள் தங்களது சுய அரசியல் இலாபத்திற்காக, ஈழத் தமிழர்களை தங்களது தேர்தல் பிரச்சாரத்திற்காக தேர்தல் மேடைகளில் முழங்குவதும் பின்னர் மறந்துவிடுவதுமாக உள்ளனர். இந்த ரெசோ மாநாடு நல்ல எழுச்சி பெற அதிக வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. எதிர்வரும் இந்திய லோக்சபாத் தேர்தல், எதிர்வரும் தமிழக சட்ட சபைத் தேர்தல் போன்ற தேர்தல்களில் இந்த ரெசோ மாநாடு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

ரெசோ மாநாட்டையும் அதன் தீர்மானங்களையும் முறியடிப்பதற்காக தமிழக முதல்வர் ஜெயலலிதா கொடநாடு பங்களாவில் ஓய்வெடுத்துக் கொண்டு அடுத்த நடவடிக்கைகளுக்காகத் திட்டமிட்டு வருவதாக அறியப்படுகின்றது. தற்போது ஜெயலலிதா தமிழக மீனவர்களின் பிரச்சினையை மிகவும் தீவிரமாக எடுக்கவுள்ளாராம். தற்போது இந்த ரெசோ மாநாட்டினால் ஜெயலலிதா சற்று அதிர்ந்து போயுள்ளார். கலைஞரின் கபட நாடகம் என்றாலும் தமிழ் நாட்டில் தமிழ் உணர்வுகள் தட்டி எழுப்பப்பட்டுள்ளன.

இலங்கையிலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உட்பட எம்பிகளும், மலையக மக்கள் முன்னணி மனோகணேசன், இலங்கை இடதுசாரி விக்கிரமபாகு கருணாரட்ன மற்றும் பல தமிழ் ஆர்வலர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. விக்கரமபாகு மட்டுமே கலந்து கொண்டார். மாநாட்டிலும் உரையாற்றினார். மாநாட்டுக்கான கலைஞரின் நேரடித் தொலைபேசி மூலம் சம்பந்தன் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் சம்பந்தன் அவர்கள் சாணக்கியமாக மாநாட்டை தவிர்த்துக் கொண்டார்.

தற்போது அம்னஸ்ரி இன்ரர்நெஷனல் மனித உரிமை அமைப்பு இந்தியாவில் முகாமிட்டு எதிர்வரும் ஜெனிவா மாநாட்டுக்காக ஆவணங்களைத் தயார்படுத்துவதாக தமிழக பிரதிநிதி ஆனந்தகுமாரசாமி தெரிவிக்கின்றார்.

ஆக மொத்தத்தில் ஓயாத அலைபோன்று ஈழத் தமிழர்களின் பிரச்சினைகள் ஏதோ ஒரு ரூபத்தில் விஸ்வரூபம் எடுத்துக் கொண்டேயிருக்கும். அதுவொரு விடியலை நோக்கி உலகத்தின் ஒரு மூலையிலாவது ஒலித்துக் கொண்டேயிருக்கும் என்பதே யதார்த்தம்.

( அட்டாளைச் சேனை )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பிரிவும் சந்திப்பும்

அரியாலை பரிமளகாந்தி

'அழகான புள்ளி மானே உனக்காக அழுதேனே' என்ற ஜேசுதாசின் குரலில் இனித்தொலிக்கும் பாடல் மனதைத் தொட்டது. பாடலின் கருத்து ஏனோ புரியவில்லை. கருத்தூன்றிக் கவனிக்க மனம் பின்னால் போனபோது "வாசுகி என்னப்பா கூப்பிடுறது காதில விழவில்லையே" என்ற அவளது கணவரின் குரல் கேட்ட மாத்திரத்தில் கவனம் திரும்பவே "இதோ உணவு ரெடி" என்று தன்பங்கிற்கு கூறியபடி பம்பரமாகச் சுழலத் தொடங்கினாள். உணவு கொடுத்து, பிள்ளைகளின் உடை மாற்றி பாடசாலைச் சீருடை, புத்தகப் பை என்று ஒவ்வொன்றாக அடுக்கி வைத்து கணவருடனேயே அவர்களையும் பாடசாலைக்கு அனுப்பிய பின்னர்தான் சிறிது ஓய்ந்திருக்க முடிகிறது. அவ்வாறு ஓய்ந்திருக்கும் போது திரும்பத் திரும்ப அந்தப் பாடல் வரிகள் அவளின் மனதினுள்ளே மீண்டும் ரீங்காரமிட்டதுதான்.

திடீரென வாசுகியின் தொலைபேசி ஓங்கி ஒலிக்கவே 'ஹலோ' சொல்லி கணவருடன் தொடர்பை ஏற்படுத்தினாள். "இன்று பிஸ்ஸோரும் நல்ல நாளாக இருப்பதால் புதிதாகத் தொடங்கும் தொழிலுக்கு பங்குதாரருடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப் போகிறேன். வீட்டுக்கு வரும்போது அந்த பாட்னரையும் கூட்டி வருகிறேன். அவருக்கும் உணவு தயார் செய்" என்ற தகவலைச் சொல்லிய கணவரின் தொலைபேசி இணைப்பைத் துண்டித்தது. தகவலைக் கேட்டதும் அவளினுள் ஒரு பதற்றம்! கணவருடன் வருபவரைக் கவனித்தாக வேண்டுமே! கணவர் தொடங்கப் போகும் தொழிலுக்கு பங்குதாரர் அல்லவா. அவள் மனம் வேகம் கொண்டது. மாதவன் இவளின் கணவர். ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர். அதனுடன் மேலும் ஒரு தொழிலை முன்னெடுக்க அவர் விரும்பினார். ஒரு நல்ல நண்பனை தேடிக்கொண்டு தான் இருந்தார். அதற்கான காலம் இன்று கனிந்து விட்டிருந்தது. அவளுக்கு மகிழ்ச்சிதான். வெளிநாட்டிலிருந்து வந்தவர் கணவருடன் கூட்டாகத் தொழில் செய்ய விரும்புவதாகச் சொல்லி இருந்தார். நல்ல குணமானவன், அமைதியான சுபாவம், வயது நாற்பதாகியும் திருமணம் செய்யவில்லை என்று பாட்னரைப் பற்றிய விபரங்களை ஒருமுறை அவன் அளந்து விட்டிருந்தான். அத்துடன் பாடுவதிலும், கவிதை எழுதுவதிலும், அவனுக்கு நிகர் அவனேதான் என்றும் அவனைப் பற்றிப் பெருமை பேசி இருந்தான். அந்த நண்பரைத்தான் இன்று விருந்துண்ண அழைத்து வரப்போகின்றான் என்பது அவளுக்குப் புரிந்தது. அதற்கான ஆயத்தங்களை அவள் செய்து முடிக்க வேண்டுமே. அதனால் அவள் அவசரப்பட்டாள்.

பரபரவென வீட்டு வேலைகளைத் தொடங்கினாள். அத்துடன் சைக்கிளில் சந்தைக்குச் சென்று வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி வந்தாள். மதியச் சமையலை முடித்துப் பிள்ளைகளைப் பாடசாலையிலிருந்து கூட்டிவந்தாள். அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து நித்திரையாக்கித் தானும் ஒரு குட்டித்தூக்கம் போட்டு எழுந்தபோது பிற்பகல் நான்கு மணியாகி இருந்தது. தொடர்ந்தும் இரவுச் சமையல் செய்யவே நேரம் ஓடி விட்டிருந்தது. நேரம் நகர நகர அந்தப் பங்குதாரர் கணவருடன் சேர்ந்து நம்பிக்கைக்குரியவராக தொழிலை ஒழுங்காகக் கவனிக்க வேண்டுமே, ஒப்பந்தம் நல்லபடியாக முடியவேண்டுமே என்ற எண்ணங்களும் அவளிடத்தில் மேலோங்கின. கடவுளிடம் பாரத்தைப் போட்டு வாசலை நோக்கினாள். அவர்கள் சிறிது தூரத்தில் வருவது தெரிந்தது. உள்ளே வந்ததும் மாதவன் அந்தப் புது நண்பரை அறிமுகப்படுத்தினான். "வாசுகி இவர் ராம்நாத் எனது பாட்னர், இவள் வாசுகி எனது மனைவி" என்று அறிமுகப்படுத்திய போது வாசுகி அதிர்ந்தே விட்டாள். காரணம் அது... அது... அவளது பள்ளித்தோழன் ராம்நாத். ஒரு குளிர் நடுக்கம் உள்ளூர உடலெங்கும் ஓடிப்பரவிய போதும் "வணக்கம்" என்று கைகூப்பியவள் தேனீர் தயாரிக்கும் சாட்டில் சமையலறையின் உள்ளே சென்று விட்டாள். மாதவனுக்கு இவளது நடவடிக்கை புரியவில்லை. வந்த தனது பங்காளனைச் சரியாக உபசரித்து வரவேற்க எண்ணாமல் இவள் ஏன் இப்படி உள்ளே செல்கிறாள் என்பது அவனுக்குக் கவலையாக இருந்தது.



சமையல் அறையினுள்ளே சென்றவள் குமுறிவரும் பள்ளிக்காலத்து நினைவுகளுடன் வாசுகி நின்றிருந்தாள். இவள் நான்கு பெண் பிள்ளைகளுள் மூத்தவள். படிப்பில் கவனம். பாடுவதில் விருப்பம். கதை எழுதுவது பொழுதுபோக்கு. பேச்சில் புலி. பட்டிமன்றம் என்பவற்றில் இவளுக்கிருந்த ஈடுபாடு நிறையவே மகிழ்வு தந்தது. பாடசாலையில் நடந்தால் ஒருபக்கம் இவளுடன் இணைந்து தலைமையை விரும்பிய குழு, மறுபக்கம் ராம்நாத் தலைமையில் ஆண்பிள்ளைகளின் குழு என்று அவனும் இவளும் மல்லுக்கு நின்று வென்று தோற்ற சங்கதிகள் பல. அவன் எழுதிய கவிதையும் இவள் எழுதிய கதையும் கைமாறி மனதுகளும் இருந்த இடம் மயங்கி மாறிக் கலந்திருந்தது. அதே பாடசாலையில் பயின்றுவந்த ராம்நாத்தின் தங்கைக்கு இவர்களின் இந்த விடயம் மெல்ல மெல்ல காற்றோடு காற்றாகப் பரந்து காதல் கதை சொல்லி நின்றது. அவளின் காதுக்கு எட்டி விட்ட காதலை பிறகென்ன பிடித்தது சனி. காதும் காதும் வைத்தது போல் ராமின் மனதைக் கரைத்து வெளிநாட்டிற்கு அனுப்ப ஏற்பாடாகியது. ராம்நாத் விரைவாகவே வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டான். இதில் ராம் போனது போனதுதான். குடும்பத்தினருக்குப் பயந்தோ என்னவோ போகு முன்னரும் அங்கே சென்ற போதும் இவளிற்கு ஒரு சொல்தானும் கூறவில்லை. போன பின்பும் கூட ஒரு தகவலும் அவளுக்குக் கிடைக்கவில்லை. பெண்கள் பேதைகள் என்பது உண்மையாகியது. தனிமை, துயரம், வெறுமை இவ்வளவும் அவளை ஆட்கொண்டு இருந்தன. கெட்டிக்காரி என்று பெயரெடுத்தவள் படிப்பை மறந்தாள். மேற்படிப்புக்குப் போக முடியாமல் துவண்டாள். இருந்தும் ஏதோ முயற்சியினால் ஒரு வேலையைத் தேடிக் கொண்டாள். பின்னர் யாவும் மறந்த நிலையில் அவளைக் கண்டு விரும்பி வந்து தாய் தகப்பனுடன் பேசிப் பெண் கேட்ட மாதவனைத் திருமணம் செய்து கொண்டாள். இதனுடன் அவளுக்குப் பின்னுள்ள மூன்று தங்கைகளுக்கும் திருமணம் நடந்தாக வேண்டுமே. அதற்கும் தன்னால் தடையேதும் வரக் கூடாது என்று நினைத்தாள். மாதவன் நல்லவன் அன்பாக இருந்தான். இவள் தான் பார்த்த வேலையை விட்டுவிட்டு நல்ல தாயாக தோழியாக அவனது மனைவியாக இருக்கப்பழகிக் கொண்டாள். இப்போது எவருமே எதிர்பாரா வகையில் இன்று தோன்றிய ராம்நாத்தும் பழைய இணைபிரியா நண்பர்கள் என்பதை அறிந்தால் மாதவன் என்ன செய்வான். வாழ்க்கை என்னவாகும் என்று நினைத்த கணத்தில் அவளது கவனமெல்லாம் சிதறத் தொடங்கியது. மனத்தால் பயந்தாள்.

மீண்டும் அவளை அழைத்த கணவனின் சொல் கேட்டு அவர்களுக்குரிய உணவுக்கான ஆயத்தங்களைச் செய்தபோது முன்னரைப் போல் ராமின் பார்வை தன்மேல் படிவதைக் கண்டு வாசுகி திகைத்தாள். பதற்றத்துடன் அன்றைய நாள் ஒருவாறு ஓடிக் கழிந்தது. எனினும் அவளது கணவன் தனது புதிய தொழிலையும் தொழில் முறைப் பாட்னரான ராம்நாத்தையும் புகழ்ந்து பேசும் போது இவள் அனல்மேல் இட்ட புழுவாகத் துடித்துப் போனாள். நிம்மதி குலைந்தது. மாதவனைச் சந்திக்க வரும் ஒவ்வொரு வேளையும் வாசுகியின் மனம் அலைந்தது. ராமும் மாதவனில்லாத சமயங்களில் வந்தால் எதையோ சொல்ல எத்தனிப்பதும் அவளுக்கு வெறுப்பையும் பயத்தையும் ஏற்படுத்தியிருந்தது. இதனால் தனது கணவனிடம் தொழில் சம்பந்தமான விடயங்களைத் தொழில் ஸ்தானத்திலேயே வைத்திருக்குமாறு கூறத் தலைப்பட்டாள். அட வாசுகிக்கு என்ன குழப்பம். ராம் நல்லவன். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று அவளுக்கு கணவன் சேட்டிபிக்கற் கொடுத்தபோது அடங்கித்தான் போனாள். இது என்ன இறைவா ஒவ்வொரு நாளும் என்னை நெருப்பில் நடக்க வைக்கிறாய் என்று இறைவனிடம் கையேந்தத் தொடங்கினாள். தனது வாழ்க்கை தன்னை விட்டுப் போய்விடும் என்று எண்ணத் தலைப்பட்டாள். குழந்தைகளுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. வீட்டு வேலைகள் செய்ய முடியவில்லை. அறை விட்டத்தையே பார்த்தபடி சோர்வாகவே இருக்கத் தலைப்பட்டாள். இம்மாற்றம் அக்குடும்பத்தையே பாதித்தது. மாதவன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். எதுவும் நன்றாக அமையவில்லை. வாசுகியால் தன்னிலைக்கு மீண்டு வரமுடியவில்லை. மாதவன் சொல்லும் அறிவுரைகள் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காய் முடிந்தது. மெல்ல வாசுகியின் குடும்பத்தினருக்கும் மாதவனின் பெற்றோருக்கும் விடயம் தெரிவிக்கப்பட்டது. இதை அறிந்து ஓடோடி வந்த வாசுகியின் தாய் அவளுடனே தங்கி இருந்து அவளது குடும்பத் தேவைகளைப் பார்த்துக் கொண்டாள். கோயில் குளம் என்று நேர்த்தி வைக்கத் தொடங்கினாள். மாதவனோ வாசுகியை மனநல மருத்துவ ஆலோசனைக்கு அழைத்துச் செல்ல முயன்றான். என்ன நடந்தது இவளுக்கு. மெல்லவும் விழுங்கவும் இயலாத மருண்ட விழிகளுடனும் பயந்த சுபாவத்துடனும் இருக்கும் வாசுகியை எல்லோருமே பார்த்தார்கள். உளவளத் துணையாளரை வேண்டி நிற்கும் மனங் குழம்பிய ஒரு வாசுகியைத்தான் எல்லோருமே அங்கு கண்டார்கள்.

ராம்நாத் இப்பொழுது மாதவனைச் சந்திக்க வருவதை நிறுத்திக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கவிதைப்புனல்

## புலம்பெயர் குமிலின் புலம்பல்.....

சொந்த மண்ணில்
சொந்தங்களை இழந்து
சோகத்தை உடைமையாக்கி
தொலைந்த கனவுகளுடன்
தொலை தூரத்தில்....

பிறந்த ஊரைப் பிரிந்து
சிறைப்பட்ட றயில் பாதை போல
திசைமாறிய வாழ்க்கைப் பயணம்....

சொந்த மண்ணில்
வயல்வெளிகளில்
மரங்களில்
கூவித்தான் ஆசை
சுதந்திரமாய்.....

முடியவில்லை....

எங்கள் கூவல்கள்
குமுறல்களாகி
அடங்கிவிடுகின்றன
எங்கோ ஓர் தேசத்தில்
ஏதோ ஓர் மூலையில்!
யாரோ யாரோ ஆளுகையின் கீழ்!



## வாழ்வை தூக்கித் தந்த வண்ணத்துப்பூச்சி



கொஞ்சம் அதிகப்படியான சூட்டோடு
நாளின் எந்த சந்தியிலிருந்தாவது
எழும் வண்ணாத்துப்பூச்சி
பூக்களுக்கு வழிகாட்டுகிறது

எங்கிருந்தோ எடுத்துவந்திருந்த
சிறகுகளைத் தந்தது;
நான் காணாத உலகத்திற்கு
அழைக்கிறது.

என் நாவு நடுங்குகின்றது
பயம் என்னை ஆட்டுகின்றது
புதிய அனுபவங்களை
மணங்கொள்ள
என் பரம்பரைக்கு – ஏன்
இத்தனை பயம்?

காற்றோடு காற்றாக
என்னை மிதக்க வைத்து
தூய தேன் அருந்த
அழைக்கும் போது
மனம் ஏன் இப்படி பதறுகிறது?

வண்ணாத்துப்பூச்சி எனக்கு சொன்னது
அழிவின் நினைப்பை மற
பூப்பை நினை....
ஆனந்தமாய் ஆடு....
என்றது.

என் கழுத்தை குறிபார்த்திருக்கும்
கத்திகளைப் பார்த்து சிரிக்கச்
சொல்கிறது.

நானும் அப்படியே செய்தேன்
அழியாத நிரந்தர சுடரொன்று
என் மனதுள் எழ
வழி தெளிவானது
பேனாவைத் தூக்கினேன்
சுமைதாங்கியின் வனாக...

நீங்கள்
என் மூளைக்குள்
துடித்துக் கொண்டிருந்த புழுக்களை
உங்களை சமீபிக்கும்
ஒவ்வொரு முறையும் கொன்றீர்கள்.

நீங்கள்
எடுத்து வரும் ஆயுதம்
அத்தனை கூர்மையானது
என் மீது
எப்படி பிரயோகிக்க வேண்டும்
என்ற கற்றலும்
உங்களிடமிருக்கிறது.

என்னையும் பறவைகள்
அமரும் மரமாய்
பூக்கச் செய்ததும் நீங்களே...

உங்களைக் கரைத்து உருக்கி
என்னை வார்த்தீர்கள்
வடிவமைத்தீர்கள்
விழிக்கச் செய்தீர்கள்.

வணக்கத்துக்குரிய பிதாக்களே
உங்களின் கிருபைக்குரிய உலகத்தில்
நானும் ஓர் நாள்
கிரீடம் சூடிக் கொள்வேன்
கவிஞனாய்....

## ஒட்சிசனாய் உன் நினைவுகள்.



நான் சுவாசிக்கும்
ஒட்சிசனுடன்
உன் நினைவுகளும்
உள்நுழைந்து கொள்கின்றன.
உன்னை மறந்திட
நினைக்கும்
நினைவுகள் எல்லாம்
நான் வெளியிடும்
காபனீர் ஒட்சைட்டுடன்
வெளியேற்றப்படுகின்றன.
ஒட்சிசனாய் உன் நினைவுகள்
உடலெங்கும் பரவிச் செல்ல – உனை
மறக்க நினைக்கும் தருணங்கள் எல்லாம்
துன்பம் விளைவிக்கும்
காபனீர் ஒட்சைட்டாய்
என்னை விட்டு விலகிச் செல்கிறது
ஒட்சிசன் இல்லாவிடின் உயிர் வாழ முடியாது.
அதேபோல் என் வாழ்வில்
நீ இல்லாவிடில்
என்னாலும் உயிர் வாழ முடியாது.
உயிர் வாழ்க்கைக்கு ஒட்சிசன்
எவ்வளவு அவசியமோ
அதே போல் என் வாழ்வில்
நீ அவசியம்.

காண்டீபன் – தனுஜா

## இயற்கையின் காதல்



ஒருநாள் ஒரு பொழுது
ஏரிக்கரையோரம்
பட்சிகள் மட்டுமே
பேசிக்கொண்டிருக்கும்
அந்த விநோதமான
வினாடிகளில் காதலுடன்
நாணல்கள் மெல்ல
தழுவிக் கொள்ள கரைகளை
ரகசியமாய் முத்தமிட்டு
திரும்புகின்றன நீரலைகள்...
அன்பே புரிந்துகொள்
உன்னையும் என்னையும் விட
இயற்கை கொண்ட
காதல் புனிதமானது.....

ப்ரியா

## நினைவுகள்



என் கணவனே
உனக்குள் இருக்கும்
என்னை விட்டு நீ
எங்கே சென்றாலும் – நீ
இருக்கும் இதயம் என்
நினைவுகளை அழித்துவிடாதே.


சி.சப்னா

## பேச்சளவில் ஜனநாயகம்

தேர்தல் எது வந்தாலும்
வாக்காளர்களுக்கு
வரப்பிரசாதங்கள் சில
வரத்தான் செய்யும்!

பார்வையாளர்களாக
தேர்தல் விதிகளை
பார்த்துக் கொண்டிருப்பவர்களின்
கண்களில் மண்ணைத் தூவி
கட்சி வெற்றிக்காக
கண்ணியம் மீறி
வன்முறைகளில் வாக்குகளை
சுவீகரிப்பவர்களும் இல்லாமலில்லை!

ஜனநாயகம் பேசுவார்கள்
கனவான்களாக நடிப்பார்கள்- ஆனால்
சுதந்திரமாக செயற்படவிட
சுயநலமிகள் சும்மா
இருக்கவே மாட்டார்கள்!



கவித்தமிழ்

## ஏமாற்றத்தின் வலி!



எதிர்பார்ப்புகள்
ஏமாற்றங்களாகி
நம்பிக்கைகள்
சின்னாபின்னமாகி
மனமோ
மரணத்தை எதிர்பார்த்து
பிணமாகும்
நாளை நோக்கி
காத்திருக்கிறது.

செல்மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராசி பலன்

**29.08.2012 - 04.09.2012**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

தேவையற்ற விரய செலவுகளைத் தவிர்க்கவும். தடைகள் மாறும். உரிய முயற்சியும், உழைப்பும் அவசியம். வீண் பொழுதுபோக்கு, வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தில் குழப்பம், பிரச்சினை வலுக்கும். கணவன் - மனைவி இடையே சில சின்னச் சின்ன மனஸ்தாபம் வரும். குழந்தைகள் நலம் பெறுவர். மனைவியின் உடல்நலம் பாதிக்கும்.

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

உயர்வுக்கு பலவழிகளில் சகாயம் உண்டாகும். மனைவி, சகோதரிகள், தாய் முதியோரிடம் மனக்கசப்பு வேதனை வரும். உடல்நலம், கடன் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். குழந்தைகள் பல தடைகளையும், மனவேதனையையும் தருவர். பெண் குழந்தைகள் பாதிப்பு அடைவர்.

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

பழைய பிரச்சினைகள் அவ்வப்போது வந்து மனவேதனை உண்டாக்கும். தீய பழக்கங்கள் உங்களை சிரமப்படுத்தும். பெண்கள், தாய், குழந்தைகள் வழி விரயம் அதிகமாகும். புத்திரர்களால் மனவேதனை வரலாம். எதையும் போராடி பெற வேண்டி வரும். தேவையற்ற ஆசைகளைத் தவிர்க்கவும்.

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

எதிலும் எச்சரிக்கையுடன் யோசித்து முடிவு எடுக்கவும். வாக்குவாதம் தவிர்க்கவும். பேச்சில் இனிமை அவசியம். முடிந்தவரை மௌனமாக இருப்பது நல்லது. உடல்நலத்தில் கவனம் தேவை. நீண்டநாள் பழகியவர்கள் மூலம் அவப்பெயர் வரலாம். கணவன் - மனைவி உறவு பலப்படும்.

**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

அதிக அலைச்சல், முடிவு எடுக்க முடியாத தடுமாற்றம், தடைகளை உண்டாகும். பேச்சில் நிதானம் தேவை. உறவினரிடம் மனக்கசப்பு உண்டாகும். பணவிரயம், நெருக்கடி உண்டாகும். கணவன் - மனைவி உறவு பலப்படும். குழந்தைகள் வழி மனமகிழ்ச்சி பெறுவீர். மிகவும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டி வரும்.

**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், 1,2 ம் பாதங்கள்**

அடுத்தடுத்து வேலை இருந்து கொண்டே இருக்கும். காய்ச்சல், சளித் தொந்தரவு வந்து போகும். சகோதர வகையில் சின்னச் சின்ன மனஸ்தாபங்கள் வந்துப் போகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தந்தை வழியில் உதவிகளுண்டு. பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவி வழியில் ஆதாயமுண்டு.

**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

மருத்துவச் செலவு உண்டாகும். பேச்சில் அமைதியும், உண்மையும் இருக்க வேண்டும். சகோதரர்களிடம் வீண் வாதம் வேண்டாம். பெண்கள் வழி மனவேதனை வரும். மனைவியிடம் மனபேதம் வரும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு, குழந்தைகள் வழி விரயம், கல்வியில் குழப்பம் உண்டாகும். நல்லதையே நினையுங்கள்.

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

பணம் நெருக்கடி வரும். கவலை வேண்டாம். பயணங்களில் வருமானம் கிடைக்கும். மண், பொன் இவைகளால் லாபம் பெறுவீர்கள். அதற்காக வீண் விரயம் வேண்டாம். சேமிக்கப் பழகுங்கள். அதிக உழைப்பு இருக்கும். கிடைக்கும் நல்ல சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ளுங்கள். வாழ்க்கை உயர்வுக்கு மிகவும் உகந்த நேரம் இது.

**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

தேவையற்ற செயல் முயற்சிகளைத் தவிர்க்கவும். உணவுக் கட்டுப்பாடு. உடல்நலத்தில் அக்கறை தேவை. தொழில் சிறப்படையும். சிலருக்கு மிகவும் உயர்ந்தவர்களின் தொடர்பும், புதிய பரிமாணமும் கிடைக்கும். வாழ்க்கைத் தரம் உயரும். சிலருக்கு திடீர் திருமணம் அமையப் பெறும். பெண்கள் வழி எச்சரிக்கை தேவை.

**உத்தராடம் 2,3 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

அந்தஸ்து, மரியாதை கூடும். தொழில், உத்தியோகம் சிறக்கும். பிரயாணத்தில் எச்சரிக்கை தேவை. புதிய அறிமுகங்களைத் தவிர்க்கவும். தடைப்பட்ட குழந்தைப் பாக்கியம் அமையப் பெறும். குழந்தைகளின் கல்வி வளம் பெறும். சிலர் வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெறுவர். சிலருக்கு திருமண யோகம் கை கூடும்.

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், 1,2,3 ஆம் பாதங்கள்**

பல வகையான போராட்டங்களைச் சந்தித்து வெற்றி பெறுவீர்கள். உறவுகள் வழி மனக்கவலையும், விரோதமும் உண்டாகும். பணவிரயம் அதிகரிக்கும். உடல்நலத்தில் அக்கறை தேவை. திருமணத் தடை நீங்கும். கணவன் - மனைவி, குழந்தைகள் உறவுகளில் அவ்வப்போது மனபேதம் வரும். செலவு அதிகரிக்கும். தாய், தந்தையர் நலம் சீராகும்.

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

வீண்விரயம் வரலாம். பல நன்மைகளும் இடையிடையே நடக்கும். உடல் நலத்தில் அக்கறை தேவை. தொழில், உத்தியோகம் சிறக்கும். புகழ், சுயமரியாதைக்கு அடிமையாகி உங்களையே இழக்க நேரிடும். புதிய முயற்சி, வீண் பேச்சு தவிர்க்கவும். கணவன் - மனைவி உறவு பலப்படும். குழந்தைகளின் வழி யோகம் பலப்படும்.

# அனுசரித்து வாழுங்கள்!



சாம்பு! "நம்ம வாசுதேவன் வீட்டிலே ஒரே ரகளை. புருஷன், பெண்டாட்டிக்குள் பெரிய போர்க்களம்" என்ற நண்பர் விஸ்வநாதனிடம், ஏன்! என்ன பிரச்சினை அவர்களுக்குள்?" என்றார் சாம்பு.

"பணப்பிரச்னை தான். இருவருமே சம்பாதிக்கிறார்கள், பணத்தை யார் செலவிடுவது? எப்படி செலவிடுவது என்பதில் தான் புகைச்சல். உன்னை அங்கே அழைத்து வரச்சொன்னான். நீ போய் அவர்களைச் சமாதானம் செய்து வை" என்றார் விஸ்வநாதன்.

வாசுதேவனுக்கும், அவர் மனைவி கலாவுக்கும் மிகவும் பரிச்சயமானவர் என்ற முறையில் சாம்புவும் அவர்கள் வீட்டுக்குச் சென்றார். கணவன், மனைவிக்குள் கருத்து வேறுபாடு இருந்தாலும் இருவரும் இணைந்து அவரை வரவேற்றனர்.

"சாம்பண்ணா! ஏதாச்சும் சாப்பிடுங்களேன்" என்று வற்புறுத்தினாள் கலா.

"உன் வீட்டில் சாப்பிடுறது இருக்கட்டும், இரண்டு பேரும் ஏதோ பண விஷயமா சண்டை போட்டீங்களாமே! விஸ்வநாதன் வந்து சொன்னான். உங்களுக்குள் என்ன பிரச்சினை?" என்று கேட்டாரோ இல்லையோ, இருவரும் வரிந்து கட்டிக் கொண்டு ஒருவர் மீது ஒருவர் புகார் சொன்னார்கள். அவர்களை அமைதிப்படுத்திய சாம்பு, "கொஞ்சம் உட்காருங்கள். ஒரு கதை சொல்றேன். அதைக் கேட்டுட்டு முடிவுக்கு வாங்க" என்றார். இருவரும் பொறுமையாக அமர்ந்தனர்.

ஒரு ஊரில் ஒரு இளைஞன் இருந்தான். கொஞ்சம் அறிவு போதாது. சம்பாதித்ததை கோட்டை விடுவதில் அவனுக்கு நிகர் அவன் தான். ஒரு நாள் அவன் ஒரு காளையுடன் சந்தைக்குப் போனான். அதை ஒருவரிடம் விலை பேசிக்கொண்டிருந்த போது, ஒரு ஆடு வியாபாரி வந்தான்.

"அடேய்! மாட்டை என்னிடம் கொடுத்து விடு. பதிலாக, இந்த ஆட்டை வைத்துக்கொள். வளர்ப்பது ரொம்ப சுலபம், வருஷத்துக்கு இரண்டு குட்டி போடும். போதாக்குறைக்கு பால் வேறு தரும். இதை வைத்து நிறைய சம்பாதிக்கலாம்" என்றான். அவன் ஆட்டை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வரும் வழியில் ஒரு கோழி வியாபாரியை பார்த்தான்.

அவன் சில கோழிகளை அவனிடம் கொடுத்து, "கோழி வளர்ப்பது ஆடு வளர்ப்பை விட சுலபம். தினமும் முட்டை, கடைசியில் இறைச்சிக்கும் விற்றுவிடலாம். வருஷத்துக்கு இருபது, இருபத்தைந்து குஞ்சு பொரிக்கும். அதை வளர்த்தால் முட்டையும் கூடும். குஞ்சும் கூடும்" என்று ஆசை காட்ட, அவனிடம் ஆட்டைக் கொடுத்து விட்டு கோழியுடன் சென்றான்.

ஓரிடத்தில் ஒருவன் அவனை மடக்கி, "பத்து முட்டையைக் கொடுத்து, கோழியை வளர்ப்பது பெரிய தொந்தரவு. அங்கங்கே பறக்கும். யார் வீட்டு வைக்கோல் போரிலாவது முட்டை போடும். திருடர்கள் பிடித்துச் சென்று சமைத்து விடுவார்கள். இந்த முட்டை அப்படியல்ல, அப்படியே சமைத்து சாப்பிடலாம்" என்றான். அந்த முட்டாளும் வாங்கிக் கொண்டான். வீடு வந்து சேர்ந்தான். அவனை அவனது மனைவி பாராட்டினாள்" என்றவரை இடைமறித்தான் வாசுதேவன்.

"அவன் கொடுத்து வைத்தவன். தப்பே செஞ்சாலும் பெண்டாட்டி பாராட்டுறாளே" என்று குத்தலாகப் பேசியவன் லேசாக கலா பக்கம் திரும்ப அவள் முறைத்தாள். இதைக் கவனித்த சாம்பு கண்டுகொள்ளாமல் கதையைத் தொடர்ந்தார். "அவனை பார்க்க வந்து காத்திருந்த ஒரு நண்பன், மாட்டோடு போனவன் முட்டையோடு வந்தும் உன் மனைவி பாராட்டினாளே! ஆச்சரியமா இருக்கே" என்றான்.

அதற்கு அவன் "என் மனைவி மற்றவர்கள் முன்னால் என்னைத் திட்ட மாட்டாள். தனித்தே அறிவுரை சொல்வாள். இதனால் எங்களுக்குள் பிரச்சினையே வந்ததில்லை" என்று முடித்த சாம்பு" கலா! நீயும், வாசுவும் விஸ்வநாதன் முன்னால் சண்டை போட்டதால் தான் உன் குடும்ப விஷயம் அவனுக்குத் தெரிந்தது. நானும் கதை சொல்ல வேண்டி வந்துவிட்டது" என்றார்.

கலாவும், வாசுவும் தலை குனிந்தனர்.

"அண்ணா! வேடிக்கையான கதையாக இருந்தாலும் இரண்டு பேருக்கும் நல்லபுத்தி வருகிற மாதிரி சொன்னீங்க! இனி நாங்க அனுசரித்து செல்வோம்" என்ற கலாவுக்கு வாழ்த்துச் சொன்னார் சாம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் எல்லாமே நல்ல விதமாகத் தான் நடந்தன. மற்ற மூவரும் கயிற்றின் வழியாக மேலேறி வெளியே சென்றடைந்து விட்டனர். இறுதியாக புறாடி கயிற்றினைப் பற்றிக் கொண்டு மேலேறிச் சென்ற வண்ணமிருந்தான். அவன் அவ்விதமாக மேலேறி வருகையில் தரைமட்டத்திற்கு 300 அடிதூரம் இருக்கும் போது திடீரென்று எதிர்பாராத விதத்தில் கயிறு அறுந்தது. புறாடி 150 அடி தூரம் கீழே சரிந்தான்.


# அற்புதமும் ஆபத்தும்!

வடக்கு இத்தாலியில் பிரிஷியாப் பகுதி நீர் நிலைகள் நிறைந்த பிரதேசம். நீர் நிலைகளுக்கு மத்தியிலும் அருகாமையிலும் படுகைத் துவாரங்கள் காணப்படும். இத்துவாரங்களிற் சில 300 அடி தொடக்கம் 1700 அடி வரையிலான ஆழமானவை. அத்துவாரங்களில் உள்ள இயற்கையின் அசாதாரணமான வினோதங்களை அதற்கு முன் யாரும் மூச்சு முட்டப் பார்த்து முழுமையாக அவற்றினை அனுபவித்ததுமில்லை. இரசித்ததுமில்லை.

இத்துவாரங்கள் குறித்து ஆராய்ச்சிகள் நடந்தவண்ணமுள்ளன. இயற்கையாகவே ஏற்பட்டிருக்கும் இத்துவாரங்களை ஆராயும் பணி முடுக்கிவிடப்பட்டிருந்தது. ஆபத்துகள் நிறைந்த பணி என்றாலும் சுவாரஸ்யமிக்க தொன்றாகும்.

இப்பணிக்கென விசேட பயிற்சிகளுடன் தொல்லியல் அறிவு நிறைந்தவர்கள் அடங்கிய குழுவொன்று உருவாக்கப்பட்டிருந்தது. இக்குழுவில் திடகாத்திரமும், மனத்துணிவும் உடையவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது.

நன்கு பயிற்சிபெற்ற கட்டுப்பாடு நிறைந்த இருபது பேர்கள் கொண்ட இவ்வாராய்ச்சிக் குழுவில் 22 வயது நிரம்பிய புறாடி எனும் வாலிபனும் இணைக்கப்பட்டிருந்தான். புவியியல் பட்டதாரியான புறாடி ஓர் சிறந்த உதைபந்தாட்ட வீரனுமாவான். பிரிஷியா மாநிலத்தின் உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவனாகவும் விளங்கினான்.




நீர் நிலைகளுக்கு மத்தியில் இயற்கையாகவே அமைந்துவிட்ட இந்தத் துவாரங்களினூடாக இக்குழுவைச் சேர்ந்தவர்கள் கயிற்றின் உதவியுடன் உள்ளே சென்று ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதே வழமையானதாகும். பின்னர் பணி முடிவடைந்ததும் உள்ளே இறங்கியவர்கள் அக்கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டு ஒவ்வொருவராக மேலேறித் துவாரங்களில் இருந்து வெளியேற வேண்டும். இதற்கான போதிய பயிற்சி அவர்களுக்கு நன்கு வழங்கப்பட்டிருந்தது.

அவர்கள் முதல்நாள் கண்டுபிடித்த சுரங்கத்தின் உட்பகுதி ஒரு பெரிய மாதா கோயிலைப் போலக் காணப்பட்டது. அவைகளில் மின்னும் இரசாயனப் பொருட்கள் மாதா கோயிலின் தங்கம், வெள்ளி விளக்குகளின் தீபங்களில் பதித்துள்ள நவரத்தினங்கள் போலத் தோன்றின. இரண்டு சிறிய நீர் நிலைகளுக்கு மத்தியில் அந்தப் படுகைத் துவாரம் இருந்தது.

அன்று காலையில் முதல் நாள் கண்டுபிடித்த சுரங்கத்தினை விரிவாக ஆராய்வதற்கென குழுவினர் உள்ளிறங்கத் தீர்மானித்தனர். அன்றைய தினம் அவர்களில் நான்கு பேர்கள் மட்டுமே துவாரத்தினுள் இறங்குவதாக முடிவெடுக்கப்பட்டது.

உள்ளிறங்கும் போது அணியும் உடைகள் அணிந்து அத்துடன் தம்முடன் கொண்டு செல்ல வேண்டிய கமெரா, டோர்ச்லைட், தண்ணீர்ப் போத்தல் போன்ற அத்தியாவசியப் பொருட்களை முதுகில் தொங்கும் பைகளில் போட்டுக் கொண்டு கயிற்றின் உதவியுடன் உள்ளிறங்கத் தயாராகினர். அந்நேரத்தில் அன்றைய தினம் அவர்களில் ஒருவனுக்கு அத்துவாரமே நரகக் குழியாக மாறப் போகும் அவலத்தை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

துவாரத்துள் அன்று இறங்கிய நால்வருள் புறாடியும் ஒருவன். அவன் வாலிபனானாலும் இப்படிப்பட்ட துவாரங்களில் இறங்கி நல்ல அனுபவம் பெற்றவன்.

அன்றைய தினத்தில் அவர்கள் நால்வரும் தரை மட்டத்தின் கீழாக 450 அடி ஆழத்தில் பணியில் ஈடுபட்டிருந்தனர். அன்று ஞாயிற்றுக் கிழமை. அவர்கள் துவாரத்தினுள் நுழைந்து இருபத்துநான்கு மணி நேரம் ஆகியிருந்தது. கிட்டத்தட்ட ஒரு முழுநாளுமாகத் தொடர்ந்து வேலை செய்ததனால் களைப்புற்றிருந்த அவர்கள் வேலையை இடைநிறுத்தி வெளியேறத் தமக்குள் முடிவு செய்தனர்.

அதன்படி நால்வரும் ஒருவர் பின் ஒருவராகக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு மேலேறி வெளியேற வேண்டும். வழமைபோல புறாடி தான் கடைசியில் வெளியேறுவதென ஒத்துக் கொள்ளப்பட்டது.

முதலில் எல்லாமே நல்ல விதமாகத் தான் நடந்தன. மற்ற மூவரும் கயிற்றின் வழியாக மேலேறி வெளியே சென்றடைந்து விட்டனர். இறுதியாக புறாடி கயிற்றினைப் பற்றிக் கொண்டு மேலேறிச் சென்ற வண்ணமிருந்தான். அவன் அவ்விதமாக மேலேறி வருகையில் தரைமட்டத்திற்கு 300 அடிதூரம் இருக்கும் போது திடீரென்று எதிர்பாராத விதத்தில் கயிறு அறுந்தது. புறாடி 150 அடி தூரம் கீழே சரிந்தான்.

வெளியில் நின்றவர்களுக்கு நேர்ந்த விபரீதம் புரிந்துவிட்டது. அவர்கள் கலவரமடைந்த நிலையில் அவர்களின் முகங்கள் கறுத்தன. எனினும் ஒருவாறு தம்மைச் சுதாகரித்துக் கொண்டு புறாடியைக் காப்பாற்றி வெளியில் எடுப்பதற்கான முயற்சியில் துரிதமாக ஈடுபட்டனர். அதேசமயம் துவாரத்தினுள் இறங்கிக் கீழே விழுந்துவிட்டவனைச் சோதனை செய்து பார்க்கவென ஒரு டொக்டரைத் தேடி விரைந்தனர் ஒருசிலர்.

நேரம் இறக்கை கட்டிப் பறந்து கொண்டிருந்தது. தகவலறிந்து விரைந்து வந்த புறாடியின் தந்தை, தாய், சகோதரன் மற்றும் சகோதரி அனைவரும் துவாரத்தின் அருகில் நின்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர். அவர்களுடன் அங்கு வந்து சேர்ந்த உதைபந்தாட்ட சங்கத்தின் உறுப்பினர்களும் பிரார்த்தனையில் இணைந்து கொண்டனர்.

ஒருவாறு சம்பவம் நடைபெற்று பத்து மணிநேரத்தின் பிறகே டொக்டர் ஒருவர் துவாரத்தினுள் இறங்கி புறாடியைச் சோதித்துப் பார்க்க முடிந்தது. "அவனால் எழுந்திருக்க முடியாது. உடல் முழுவதும் சில்லிட்டுப் போயிருக்கிறது" என்று தெரிவித்தார்.

இனி புறாடியை மேலே எடுத்தாக வேண்டும். இந்த வேலையைச் செய்வதற்கு சுரங்கத்தில் பணிபுரியும் ஆறுபேர் முன்வந்தனர். அவர்கள் சுரங்கத்தின் துவாரத்தை அகலப்படுத்திக் கொண்டு கீழே சென்றனர். கடுமையான அந்த வேலையை அவர்கள் செய்து முடித்ததும் நான்கு டொக்டர்களும் ஒரு நேர்சும் துவாரத்தினுள் இறங்கினர்.

அனைவரும் புறாடி விழுந்து கிடந்த இடத்தை அடைந்த போது அவன் விழுந்து ஐம்பது மணி நேரத்தைத் தாண்டியிருந்தது. பிறகு மெல்ல மிகவும் அவதானத்துடன் ஸ்றெச்சரில் கிடத்தி வைத்து புறாடி மேலே கொண்டு வரப்பட்டான்.

தரைமட்டத்திற்குக் கொண்டு வந்ததும் புறாடியை மறுபடியும் டொக்டர்கள் சோதித்தனர். அவன் சுயநினைவிழந்திருந்தான். அப்போது புறாடி விழுந்து எழுபத்திரண்டு மணி நேரமாகியிருந்தது.

சுயநினைவிழந்திருந்த மகனின் உடலைக் கண்டதும் புறாடியின் தந்தையாரும் மூர்ச்சையானார்.

தாமதிக்காது நகர மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட புறாடியைச் சோதனை செய்தபோது அனைவருமே



வியக்கும் வண்ணம் புறாடிக்கு ஒரு சிறு எலும்பு முறிவு மட்டுமே ஏற்பட்டிருந்ததைத் தவிர வேறு அபாயகரமானது எதுவும் நேரவில்லை.

பல நாட்கள் வரை புறாடி குழப்பமான மனநிலையில் இருந்தான். அவன் நல்ல நிலையை அடையும் வரை அவனை மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பவில்லை.

இன்றைக்கும் புறாடி நீர் நிலைகளுக்கு அருகில் இயற்கையாக ஏற்பட்டிருக்கும் துவாரங்களை ஆராயும் பணியில் ஈடுபட்டு வருகின்றான். "இந்த ஆராய்ச்சியை நான் விடாதது ஆச்சரியமாக இருக்கலாம். படுகைத் துவாரங்களை ஆராய்பவர்களைத் தவிர மற்றவர்கள் அவற்றின் மனதை மயக்கும் அற்புதங்களை அறியவே மாட்டார்கள். தரை மட்டத்திற்கு அடியில் வெகு ஆழத்தில் ஒளியும், நீரும் நிறைந்த உலகத்தை நாங்கள் கண்டுபிடிக்கும் போது நாங்கள் அதற்காகப்பட்ட துன்பங்கள், வேதனைகள் யாவும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகின்றன" என்று கூறுகிறான் புறாடி.

தமிழில் – ஜெகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளின் வழிமுறை வேண்டாம்!



சிறு குழந்தை தனக்கு ஏதாவது தேவை எனும் போது உடனே அழுகிறது.

அழுகை மூலம் உடனடியாக உதவியை யாரிடமிருந்தும் பெற முடியாத போது குழந்தை குரலை உயர்த்தி அலறுகிறது...

உடனே யாரேனும் விரைந்து வந்து குழந்தையைக் கவனிக்கிறார்கள். குழந்தை இந்த விஷயத்தை உள்ளத்தில் நினைவு கொள்கிறது.

சிறு குழந்தையின் தேவையான, இயற்கையான இந்த உள்ளுணர்வு பிள்ளைப் பராயத்திலும் தொடர்கிறது. தர்க்க ரீதியான தூண்டுதல் தெரியாத சிறுபிள்ளை தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அழுகையையே உபாயமாகக் கொள்கிறது. தன்னை யாரும் கவனிக்காத போது அலறுவதையும் பழக்கமாக்கிக் கொள்கிறது.

பெற்றோர்கள் சிறு குழந்தையின் அழுகை, அலறல் இவற்றிற்கு அடிபணியும் போது இந்த **சிறு குழந்தை வழிமுறைகள் தான் காரியங்கள் நிறைவேற்றிக் கொள்ளச் சரியான** உபாயங்களை என்று அடிமனதில் பதிய ஆரம்பிக்கிறது.


இப்படிச் செல்லமாக வளர்க்கப்பட்ட குழந்தைகள் குமரப் பருவம் அடையும் போது அவர்கள் சுயகௌரவம் குழந்தை அழுகை வழிமுறையை மேற்கொள்ளத் தடையாய் உள்ளது. அப்பொழுது அவர்கள் குறை கூறத் தொடங்குகிறார்கள். எதிர்ப்பு காட்டுகிறார்கள். தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்யக் குழுக்களாகச் சேர்ந்து கூச்சலிடுகிறார்கள்.

தங்கள் தேவைகள் நிறைவேறாதபோது அவர்கள் ஒதுங்கி விடுகிறார்கள். அல்லது சமூக எதிர்ப்புச் செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

அவர்கள் பெரியவர்களாகும் போது குழந்தைப் பருவத்தில் வென்ற பயிற்சியே தொடர்கிறது.

முதலில் அழுது பிறர் கவனத்தைக் கவருவது. அழுகை பலன் தராத போது அலறி தன் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வது.

வயதில் பெரியவர்கள் இப்படிக் குழந்தைகளாக நடந்து கொள்வது இந்தத் தலைமுறையில் அதிகம்தான்.



வெற்றியின் படிகள் நூறும்

அழுகிற குழந்தைக்கு ஆறுதல் சொல்வது அதன் உள்மனதில் பதிந்து விடுவதால், நாகரிகம் தொடங்கிய நாள் முதலாக ஒவ்வொரு தலைமுறையிலும் இப்படிக் குமரப் பருவத்தினரும் பெரியவர்களும் குழந்தையின் வழிமுறைகளைப் பயன்படுத்தி தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது தொடர்ந்து வருகிறது.

இதனுடைய விளைவு என்ன?

**தனி நபர்களாக இத்தகைய மனிதர்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் பிரச்சினைக்குரிய நபர்களாகிறார்கள்.** இவர்கள் சாதாரண சூழ்நிலைகளில் வெகு தீவிரமாக, விரும்பத்தகாத வகைகளில் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறார்கள். இவர்கள் வாழ்க்கையில் பெற்றோரும் மற்றவர்களும் இவர்களை அரவணைத்து ஆறுதல் சொல்லி வந்திருக்கிறபடியால், இவர்கள் சிறிய சமாசாரங்களில் கூட தங்களுக்கு எதிராளி ஏற்பட்டு விட்டதாகக் கற்பனை செய்து கொள்கிறார்கள்.

குழுக்களாகச் செயல்படும் போதே இவர்கள் பிரச்சினை உருவாக்குகிறார்கள். வன்முறையில் கோபம் உண்டாக்குகிறவர்களாக, தீவிரவாத ஆதரவாளர்களாக, தடை உத்தரவை மீறுபவர்களாக, அழிவு ரீதியில் இடையூறு விளைவிப்பவர்களாக ஆகிறார்கள்.

பருவ வயது வந்த நபர்களின் சிறு குழந்தைத்தனமான நடவடிக்கைகளின் வெளிப்பாடுகள் இவை. இந்த நபர்கள் சிறு குழந்தைகளாக இருந்த போது பிறரது கவனத்தைக் கவர இவர்கள் அழுதிருக்கிறார்கள். யாரோ இவர்களைக் கவனித்திருக்கிறார்கள். இந்த நபர்கள் சிறுபிள்ளைகளாக இருந்த போதும் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள அழுது அலறியிருக்கிறார்கள். அப்பொழுதும் யாரோ இவர்களைக் கவனித்திருக்கிறார்கள்.

யாரேனும் ஒருவர் தங்களைக் கவனிக்க வேண்டும். தங்களுக்கு உதவ வேண்டும் என்றால் தாங்கள் சிறு குழந்தையின் வழிமுறைகளையே கையாள வேண்டும் என்று அவர்கள் அடிமனதில் ஊறிப் போயிருக்கிறது. எனவே அந்த வழிமுறைகளையே இவர்கள் குமரப் பருவத்திலும் பெரியவர்களான பிறகும் கடைப்பிடிக்கிறார்கள்.

சிறு குழந்தைகள், சிறு பிள்ளைகள், குமரப் பருவத்தினர், வயதில் பெரியவர்கள் எல்லோரும் குழந்தையின் வழிமுறைகளையே பின்பற்றுவார்கள் - அதுதான் பிறர் கவனத்தைத் தங்கள்பால் ஈர்க்கும், தங்களுக்கு அப்பொழுதுதான் பிறர் உதவி செய்வார்கள் என்று அவர்களுக்குத் தோன்றும் வரை.

**ஆனால் வளர்ச்சியுறும் மனிதன் ஏதோ ஒரு நிலையில் வாழ்க்கை லட்சியம் அடைய சிறு குழந்தையின் வழிமுறைகள் உதவாது** என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்பொழுது தான் பெரியவர் பிரச்சினையில் சிறு குழந்தையின் வழிமுறைகள் உபயோகமாவது நின்று போகும்.

பைபிள் நமக்குப் போதிக்கிறது. ஏசுநாதர் மனிதனாக வளர்ச்சியுற்ற போது, அவர் குழந்தைத் தனங்களை மூட்டைகட்டி வைத்தார் என்று.

அவர் சிறு குழந்தை வழிமுறைகளை ஒதுக்கித் தள்ளிய பிறகு தான் ஞானவான் ஆனார். கடவுளும் மனிதனும் அவரிடம் நம்பிக்கை தெரிவித்தனர். அவர் ஆதிக்கம் உயர்ந்தது.

நமக்குள்ளும் இத்தகைய மாற்றங்கள் உண்டாக வேண்டும். சிறு குழந்தையின் வெறுப்புகளை மட்டுமல்லாமல் வழிமுறைகளையும் நாம் விலக்கி விட வேண்டும். அப்பொழுது தான் நாம் முதிர்ச்சியுற்ற லட்சியத்தில் வெற்றி காணுகிற திறமைசாலிகளான பெரியவர்கள் ஆவோம்.

**ஒன்றாகச் சிரித்து விளையாடும் குடும்பத்தினர் சேர்ந்து வாழ்வார்கள்!**

மதவாதிகள் நீண்ட நாட்களாய்ப் போதித்து வருகிறார்கள். **சேர்ந்து பிரார்த்தனை செய்யும் குடும்பத்தினர் சேர்ந்து வாழ்வார்கள்** - என்று.

இது நிரூபிக்கப்பட்ட உண்மை. இதை நாம் விளக்கத் தேவையில்லை.

வரலாற்றின் இன்றைய காலகட்டத்திலே சமீப ஸ்திரத் தன்மையின் ஆதாரமான குடும்ப வாழ்க்கை சிதறிக் கொண்டிருக்கிறது. குடும்ப ஒற்றுமையைக் கட்டிக் காக்க நாம் எல்லா உபாயங்களையும் நாட வேண்டும்.

உறுதியான, பாதுகாப்பான சமூக அங்கமான குடும்பம் ஏன் உடைகிறது என்ற சமூக வரலாற்று ரீதியான ஆராய்ச்சியில் நாம் இறங்க வேண்டும்.

அதிகமாய்க் குற்றம் கூறப்படும் தலைமுறை இடைவெளியையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டாம். ஏனென்றால் ஒரே தலைமுறையினரிடையே ஏராளமான வேற்றுமைகள் காணக் கிடைக்கின்றன.

கணவன் - மனைவி ஒரே தலைமுறையினர் தானே - இவர்கள் சேர்ந்து வாழ இயலாமல் விவாகரத்து என்னும் வழியே தப்பித்துக் கொள்கின்றனர். எனவே **இடைவெளி தலைமுறைகளுக்குள் இல்லை; புரிந்து கொள்ளலிலே இருக்கிறது.**

இவ்வளவு புரையோடிய பிரச்சினையில் நான் இரண்டு யோசனைகள் விளையாட்டுப் போல தோன்றினாலும், அவை உண்மையில் சிறிய யோசனைகளோ, நீங்கள் அவற்றை மதிப்பிடுங்கள்.

**1. சேர்ந்து சிரிக்கும் குடும்பத்தினர் சேர்ந்தே வாழ்வார்கள்.**

நல்ல நகைச்சுவை உணர்வு குடும்ப ஒற்றுமையைக் கூட்டும். உராய்வுகளைத் தவிர்க்கும்.

ஒன்றுபோல் இயங்கும் விதியை நாம் ஏற்க வேண்டும். பாசம் மிக்க நகைச்சுவைக்கு எதிராக நீங்கள் சினம் கொள்வதோ, எரிச்சல் மூட்டுவதோ, பொறுமை இழப்பதோ, விரும்பத் தகாத விதத்தில் நடப்பதோ முடியாது. இந்த உணர்ச்சிகள் பொருந்தாது. எனவே குடும்ப ஒற்றுமை குலையாது.

நமது ஆளுமையின் அம்சமாக நகைச்சுவை உணர்வை போற்றிட வேண்டும். குடும்பத்தினர் மத்தியில் சிரிப்புடன் அதை அடிக்கடி வெளிப்படுத்த வேண்டும். குடும்பத்தில் ஒவ்வொருவரிடமும் நகைச்சுவை உணர்வை, சிரிக்கும் மனப்பான்மை உற்சாகமூட்டி வளர்க்க வேண்டும். அப்பொழுது குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நகைச்சுவையும் சிரிப்பும் தொற்றிக் கொள்ளவை.

மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கைக்கு விமர்சனமும், பிடிவாதமும் உதவாது. பொறுமையைச் சோதிக்கும் விவாதங்களும் சிரிப்பு வராது. ஆனால் ஒரு குடும்பத்தினரை இவை ஒருநாள் அமைதி தரத் தூண்டுகின்றன.


குடும்ப வாழ்க்கையில் பாசம் மிக்க நகைச்சுவை உணர்வும், மகிழ்ச்சி கலந்த சிரிப்பும் நிரம்பி வழிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

சேர்ந்து சிரிக்கும் குடும்பத்தினர் சேர்ந்தே வாழ்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீரில் மிதக்கும் திரையரங்கு

தாய்லாந்தில் தண்ணீரில் மிதக்கும் திரையரங்கினை பீஜிங்கைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் வடிவமைத்துள்ளார். இந்தத் திரையரங் கினை மரப்பலகை மற்றும் இறப்பர் இவற்றினைப் பயன்படுத்தி வடிவமைத்திருப்பது குறிப்பிடத்தக்க தாகும்.



# 106 வயதில் கின்னஸ் சாதனை படைத்த தாத்தா







சபுரா வயது ஜோசி 106, என்ற பெயருடைய தாத்தா ஜப்பானில் புகுயோகா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர். தனது 100வது வயதில் கனடா, பல்கேரியா, தென் ஆப்ரிக்கா போன்ற நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட இவர், யூலை 16ம் திகதி மீண்டும் ஜப்பான் வந்தார்.

# பாதணிகளுக்கு அவசியமில்லாத காலுறைகள்

பாதணிகளை அணியாமல் காலுறைகளை மட்டும் அணிந்துகொண்டு நடப்பதற்கு ஏற்ற காலுறைகளை சுவிஸ் நிறுவனம் ஒன்று உருவாக்கியுள்ளது.

பாதணிகளுக்குப் பதிலாக பயன்படுத்திக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இக் காலுறையானது வெறும் காலுடன் நடக்கும் உணர்வை ஏற்படுத்தும்.

கையுறைகளில் ஒவ்வொரு விரல்களுக்கும் தனியான பகுதிகள் காணப்படுவதைப் போல், கால்விரல்களை இயல்பான நிலையில் வைத்திருப்பதற்கு ஏற்ற வகையில் இக்காலுறை வடிவமைக்கப்பட்டுள்ளது.

வெறுங்காலுடன் மலையேற்றம் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட விரும்புபவர்களுக்கு இந்தக் காலுறை மிகவும் உதவும் என மேற்படி சுவிஸ் நிறுவனமானது நம்பிக்கை தெரிவித்துள்ளது.




பலவருடங்களாக தொழில்நுட்ப ரீதியிலான ஆய்வை மேற்கொண்டு இதை உருவாக்கியுள்ளேன் என மேற்படி சுவிஸ் பார்பூட் கம்பனியின் தலைவர் டையேட்டர் ஹேஸ்க் தெரிவித்துள்ளார்.

'இதனால் நான் இப்போது மகிழ்ச்சியுடன் இருக் கிறேன். சுவிஸ் பாதுகாப்பு காலுறையானது நவநாகரீகமானதாக மாறலாம் என நான் கருதுகிறேன்' என அவர் கூறினார்.

மரதன் ஓட்டப்போட்டியில் பயன்படுத்தும் வகையிலான காலுறையை உருவாக்குவதற்கும் தற்போது நாம் முயன்றுவருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மனித உடல் மியூசியம்




தாய்லாந்து நாட்டில் பாங்கொக் நகரில், மனித உடல் மியூசியம் உள்ளது. தெற்காசியாவிலேயே 130 மனித உடல்களைக் கொண்ட மியூசியம் இதுவாகும்.

# கலிபோர்னியாவின் கண்ணாடிக் கடற்கரை



கலிபோர்னியாவில் ஸ்டேட் பார்க் என்னுமிடத்தில் MacKerricher என்ற கடற்கரை கண்ணாடிக் கடற்கரையாகக் காட்சியளிக்கும் அழகினைப் படத்தில் காணலாம்.







இந்த வருடத்திம் உலக அழகியாக இருபத்தி மூன்று வயதுடைய சீனா நட்டை சேர்ந்த அழகி ஒருவர் தெரிவு செய்ய பட்டுள்ளார் .

இவர் தனது செவ்வியின் போது வறுமை பட்ட மக்களுக்கு உதவுவதே தனது முதல் பணி என தெரிவித்துள்ளார்.





# உலக அழகியாக சீனா அழகி தெரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரபல இசையமைப்பாளர் விஜய் அண்டனி கதாநாயகன் அவதாரம் எடுத்திருக்கும் திரைப்படம்! விஜய் அண்டனியின் இசையில் வெளிவந்திருக்கும் 25வது படம்! விஜய் அண்டனியின் தயாரிப்பில் வெளிவந்திருக்கும் முதல்படம் என ஏகப்பட்ட சிறப்புகளுடன் வந்திருக்கும் திரைப்படம் தான் 'நான்'!

கதைப்படி ஆதரவற்ற அனுதாபத்திற்குரிய கார்த்திக், ஒரு பேருந்து விபத்தில் சிக்குவதால் முகம்மது சலீமாகி, மருத்துவ கல்லூரி மாணவர் ஆகிறார். அதன் மூலம் ஒருபக்கம் வசதியான நண்பர்கள், வளமான வாழ்க்கை எனக் கிடைக்க ஆரம்பித்ததும், மற்றொரு பக்கம் உண்மையும் உலகிற்கு தெரிய வருகிறது. அந்த உண்மையை மீண்டும் உறங்கச் செய்ய உடன் தங்கும், இவருக்கு வசதியான வாழ்க்கையை தந்த சக மாணவர்களையே தீர்த்துக் கட்டும் கார்த்திக் என்ற சலீம், கடைசியில் கம்பி எண்ணினாரா? எண்ணிய வாழ்க்கையை எண்ணியபடி வாழ்ந்தாரா? என்பது தான் 'நான்' படத்தின் மொத்தக் கதையும்! இந்தக் கதையை எத்தனை 'ரிச்லுக்'காக தர முடியுமோ அத்தனை 'ரிச்லுக்'காக தந்திருக்கிறார் படத்தின் அறிமுக இயக்குநர் ஜீவா சங்கர் என்பதுதான் சிறப்பு!

கார்த்திக் என்ற சலீமாக விஜய் அண்டனி தன் இசை மாதிரியே நடிப்பிலும் வெளுத்து வாங்கியிருக்கிறார். தன்னைத் தாக்க இன்னும் சிலருடன் பாய்ந்து வரும் சீனியர் மாணவரையும், அடிக்கடி பணம் கேட்டு பிளாக் மெயில் பண்ணும் தன் போலி அப்பா கிருஷ்ணமூர்த்தியையும் ஒரு சேர பயமுறுத்த பீர் பாட்டிலை கிருஷ்ணமூர்த்தியின் தலையில் உடைத்து அதன் பாதியை சீனியர் மாணவரின் வயிற்றில் வைத்து அழுத்தி மிரட்டும் ஒரு சீன் போதும், விஜய் அண்டனியின் குரூர நடிப்பிற்கு கட்டியம் கூறுவதற்கு...

ரூபாமஞ்சரி, அனுயா, விபா என ஒன்றுக்கு மூன்று நாயகிகள் இருந்தும் யாருமே விஜய்க்கு ஜோடி கிடையாது என்பது தான் வேதனை! எனினும் இவர்களது பங்கு படத்தில் மகத்தானது. அதிலும் மக்கயாலா... மக்கயாலா... பாடலில் ரூபா மஞ்சரியின் பங்களிப்பு படுசூப்பர்! நாயகிகள் மாதிரியே இணை, துணை நாயகர்கள், நண்பர்களாக வரும் அசோக் எனும் சித்தார்த், சுரேஷ் எனும் விஜய் விக்டர், சதீஷ்-ஷ்யாம் உள்ளிட்ட எல்லோரும் சூப்பர்!

நான்கைந்து நல்ல நண்பர்களைக் கொன்றுவிட்டு ஒரு மெர்ஸி கில்லிங் செய்ய வேண்டிய கிழவரை காப்பாற்றும் ஹீரோவையும், கதையையும் எந்த லிஸ்டில் சேர்ப்பது என்பது தான் 'நான்' படத்தை பொறுத்தவரை புரியாத புதிர்! மற்றபடி நீலன் கே.சேகரின் வசனம், விதேஷின் கலை இயக்கம், சூர்யாவின் படத்தொகுப்பு, விஜய் அண்டனியின் இசை, நடிப்பு, தயாரிப்பு, ஜீவா சங்கரின் எழுத்து-இயக்கம் உள்ளிட்ட சிறபம்சங்களால் 'நான்' நன்றாகவே இருக்கிறது! ஆனால் நாமாக இல்லாதது வருத்தம்!!

## தன்ஷிகா 4 நாள் பட்டினி

பாலா இயக்கத்தில் அதர்வா, வேதிகா, தன்ஷிகா நடித்துள்ள படம், 'பரதேசி'. இதில் 2 மாதம் கடுமையாக உழைத்தேன். அதற்கான பலன் இப்போது கிடைத்துள்ளது. கிளைமாக்ஸ் காட்சி படமானபோது, உடல் எடையை குறைக்கச் சொன்னார் பாலா. இதையடுத்து நான்கு நாட்கள் பட்டினி கிடந்தேன். வெறும் தண்ணீர், ஒரஞ்சு ஜூஸ் மட்டும் குடித்தேன். கிளைமாக்சில் அவர் எதிர்பார்த்த நடிப்பை வழங்கினேன் என்கிறார் தன்ஷிகா



## கவர்ச்சியான வே... உதயதாரா...

திருமணத்துக்குப் பின் ... உதயதாரா, தற்போது ந... ருக்கும், 'வேட்டையா... படத்தில், கதைப்பட... சுகத்துக்கு அலையு... பெண்ணாக நடித்துள்... உதயதாரா, பாடல் காட்... கவர்ச்சியை அள்ளி... இறைத்திருக்கிறார். அ... இந்த நடிப்பை கேள்விப்... கோலிவுட்டின் கவர்ச்... நடிகைகளே அதிர்ச்சி... உறைந்து நிற்கின்ற...




இனி தமிழில் நடித்தால் முன்னணி ஹீரோ, டைரக்டர் படங்களில் மட்டுமே நடிப்பேன். மேலும், நான் எதிர்பார்க்கும் பெரிய ஹீரோக்களின் படங்கள் வந்தால், டூ-பீஸ், நீச்சல் உடை என்றெல்லாம் புகுந்து விளையாடுவேன் என்கிறார் நடிகை ஹரிப்பிரியா.

## நயன்தாரா நல்ல தோழி



## பள்ளிக் குழந்தைகளுட...

கவுதம்மேனன் தயாரிக்கும், 'தங்க மீன்கள்' படத்திலும், யுவனை இசையமைக்க வைத்ததோடு, ஒரு பாடலையும் பாட வைத்திருக்கிறார் அவர். இன்றைய கல்வி முறை, தேர்வு முறை, ஆசிரியர்கள், மாணவர்கள் பற்றி எழுதப்பட்டுள்ள அந்தப் பாடல், குழந்தைகளின் தேசிய கீதம் போல் உள்ளது. இந்தப் பாடலை தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிகளுக்குச் சென்று மாணவ, மாணவியருடன் யுவன்ஷங்கர் ராஜாவை ஆட வைத்து படமாக்கவும் திட்டமிட்டுள்ளார் கவுதம் மேனன்.



## அயிட்டம் கேர்ள்



"நான் நடிக்கிறதுக்கு வந்திருக்கேன். ப்ளீஸ் என்னை ஆடக் கூப்பிடாதீங்க. அயிட்டம் கேர்ள்னு சொல்லாதீங்க. நல்ல கேரக்டர் கொடுங்க நடிச்சு பிச்சு உதர்றேன். இப்போ நல்லா தமிழ் பேசவும் கத்துக்கிட்டேன். நடிப்புக்கு சவால் விடுற வித்தியாசமான கேரக்டர்ல நடிச்சு அசத்துணும் என்று ஆசை" என்கிறார் சஞ்சனா சிங்.

## பெண்கள் கடத்தல்...



## சதும் அடித்து...

கவிப்பேரரசு வைரமுத்து... கார்கி குறுகிய காலத்தி... பாடல்களை எழுதி சாதனை... எந்திரன் படத்தில் 'இரும்ப்... என்ற பாடல் மூலம் பாடல்... தொடங்கிய மதன் கார்கி... சாதனை படைத்துள்ளா... தற்போது சிறிய இயக்கு... இயக்குநர் வரை அ... வருகின்ற...

## இங்கிலீஸ் விங்கிலீஸ்



நீண்ட இடைவேளைக்குப் பிறகு, ஸ்ரீதேவி நடித்துள்ள படம், 'இங்கிலீஸ் விங்கிலீஸ்'. ஒக்ரோபர், 5ம் தேதி, படத்தை உலகமெங்கும் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தி, தமிழ் என, இரண்டு மொழிகளில் தயாராகும் இந்தப் படத்தின் இந்திப் பதிப்பில், பாலிவுட் சூப்பர் ஸ்டார் அமிதாப் பச்சனும், தமிழ் பதிப்பில், அஜீத்தும் முக்கிய வேடத்தில் நடித்துள்ளதால், இந்தப் படத்துக்கு எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேடத்தில் ...ரா!

...ின் நடிகை
...து நடித்தி
...டயாடு'
...ப்படி,
...லையும்
...த்துள்ள
...காட்சியில்,
...ுள்ளி
... அவரது
...்விப்பட்டு,
...கவர்ச்சி
...ர்ச்சியில்
...ன்றனர்.





'பாஸ் என்ற பாஸ்கரன்' படத்தில் நடித்தபோதுதான், நயன்தாரா ஒரு நல்ல நடிகை என்பதை தெரிந்து கொண்டேன். அந்தப் படத்தில் இருந்துதான் எங்களுக்கிடையே நல்ல நட்பும் உருவானது. இப்போதுவரை சினிமா சம்பந்தப்பட்ட விஷயங்களை இருவருமே பகிர்ந்து கொண்டு வருகிறோம் என்கிறார் ஆர்யா.

## ...டன் யுவன் நடனம்!



## ...் கதை படமாகிறது

புதுமுகங்கள் நடிக்கும் படம் 'அகிலன்'. ஹென்றி ஜோசப் இயக்குகிறார். அவர் கூறியதாவது: அடிக்கடி நடக்கும் பெண் கடத்தல் சம்பவம் போலீசாரை திணறடிக்கிறது. மதுரையில் கடத்தப்படும் இளம்பெண்ணைக் கண்டுபிடிக்க தீவிர தேடுதல் வேட்டை நடக்கிறது. ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை. இதையடுத்து தனிப்படை அமைக்கப்படுகிறது. இதற்கு தலைமைபொறுப்பேற்கும் அதிகாரி அகிலன் புதிய திட்டம் வகுத்து பெண் கடத்தல் கூட்டத்தை எப்படி கண்டுபிடிக்கிறார் என்பதே கதை.

## ...ு மதன் கார்கி சாதனை

...துவின் மகனான மதன்
...தில் 100 திரையுலக
...னை படைத்துள்ளார்.
...ம்பிலே ஒரு இருதயம்'
...ல் ஆசிரியர் பணியை
...கி, 100 பாடல் எழுதி
...ார். அதுமட்டுமின்றி
...குநர் முதல் பெரிய
... அவரையே நாடி
...றனர்.






# பிந்து மாதவியின் கட்டுப்பாடு!

'இருவர் உள்ளம்' படத்தில், பாடல் காட்சியில் கவர்ச்சியாக நடிக்க வேண்டும், என்று டைரக்டர் கேட்டபோது, தன்னால் ஓவராக கவர்ச்சி காட்ட முடியாது, என்று மறுத்து விட்டார். "தெலுங்கில் அப்படி நடித்தாலும், தமிழை பொறுத்தவரை, 'கழுகு' படத்திற்கு பிறகு நல்ல, இமேஜ் எனக்கு கிடைத்து உள்ளது. அதைத் தக்க வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதனால் என்னை கவர்ச்சியாக நடிக்க சொல்லி கட்டாயப்படுத்த வேண்டாம்", என்றும் கேட்டுக்கொள்கிறார் பிந்துமாதவி.

## உலக சினிமா




இயக்குநர் Asger Lethdக்கு இது முதல் படம். படத்தில் நடித்திருந்த சாம் வொர்த்திங்டன் பிரபல நடிகர் என்றாலும், டாம் க்ரூஸ் மாதிரி பார்த்தே ஆக வேண்டிய பட்டியலில் இல்லை. 'மேன் ஒன் ஏ லெட்ஜ்' பெப்ரவரியில் வெளியானபோது பெரிதாக யாரும் கண்டு கொள்ளவில்லை. படம் வெளியாகி பரவா யில்லை என்ற வாய்ப்பேச்சுக்குப் பிறகே பிக்கப்பானது.

ஹொலிவுட்டில் அடிக்கடி பார்க்கக் கிடைக்கிற ஒரு த்ரில்லர்தான் இந்தப் படம். அதை இங்கு குறிப்பிட முக்கிய காரணம், கோடம்பாக்கத்தில் பல சினிமா அலுவலகங்களில் இந்தப் படத்தை அக்கு வேறு ஆணி வேறாக பிரித்து மேய்ந்து கொண்டி ருக்கிறார்கள். விரைவில் சொந்தச் சரக்கு போல் இதே படம் தமிழில் வரலாம்.

சிம்பிளான கதை. நியூயார்க்கிலுள்ள பிரமாண்ட மான ரூஸ்வெல்ட் ஹோட்டலுக்கு நிக் கேஸிடி என் பவர் வருகிறார். வேறு பெயரில் அறை எடுத்து தங்கு கிறார். அவர் இருப்பது 21ஆம் மாடி. நான் குற்ற மற்றவன் என்று எழுதி வைத்துவிட்டு ஜன்னல் வழி வெளியே வருகிறார். ஒன்றரையடி அகலமே உள்ள விளிம்பில் அவர் நிற்பது சில நிமிஷங்களில் உல குக்கே தெரிய வருகிறது.

ஃபிளாஷ்பேக்கில் நிக் கேஸிடி சிறையில் இருக் கிறார். அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் 25 வருடங்கள் சிறையில் களி தின்ன வேண்டும். இந் நிலையில் கேஸிடியின் அப்பா இறந்துவிட்டதாக தகவல் வருகிறது. இறுதிச் சடங்குக்கு வரும் நிக் கேஸிடி போலீஸ் பாதுகாப்பிலிருந்து தப்பிச் செல்கி றார். நிக் கேஸிடி செய்த தவறு என்ன, எதற்காக தப் பிச் செல்கிறார்? எதுவும் சொல்லப்படாததால் படம் நிமிர்ந்து உட்கார வைக்கிறது.

தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டியபடி ஹோட்டலின் 21வது மாடியில் நிற்கும் நிக் கேஸிடி யிடம் பேசி அவரது தற்கொலை எண்ணத்தை கைவிட நெகோஷியேஷன் டீம் வருகிறது. தன்னு டன் பேச லிடியா என்ற பெண் அதிகாரிதான் வர வேண்டும் என்கிறார் நிக் கேஸிடி. லிடியாவும் வந்து சேர்கிறாள். அவளிடம் பேசியபடி எதிர் பில்டிங்கில் அத்துமீறி நுழையும் இளம் ஜோடிக்கு இங்கிருந்தே இன்ஸ்ட்ரக்சன் தருகிறார் கேஸிடி. அது கேஸிடி யின் தம்பி மற்றும் அவனது காதலி.

நிக் கேஸிடி ஒரு போலீஸ் அதிகாரி. 40 மில்லி யன் டொலர்கள் மதிப்புள்ள வைரம் ஒன்றிற்குப் பாது காப்பாகச் சென்ற போது அந்த வைரம் காணாமல் போகிறது. பழி கேஸிடி மீது. குற்றம் நிரூபிக்கப் பட்டால் எஞ்சிய வாழ்நாள் ஜெயிலில். கேஸிடி அந்த வைரத்தை எடுக்கவில்லை. நகைத் தொழிலில் நஷ்டமடைந்த அந்த வைரத்துக்குரிய David Englander வைரத்தை எடுத்துவிட்டு கேஸிடி மீது பழியை போட்டிருக்கிறார். கேஸிடி குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க வேண்டுமென்றால் டேவிட்டின் பாதுகாப்பில் இருக்கும் அந்த வைரத்தை கைப்பற்ற வேண்டும். போலீஸின் கவனத்தை தன் பக்கம் திருப்பி வெற்றிகரமாக வைரத்தை கைப்பற்றவே இந்த தற்கொலை நாடகம்.

கேஸிடியின் தம்பியும், காதலியும் வைரத்தை மீட்டார்களா? கேஸிடி மீதான பழி விலகியதா? விறு விறுப்பாகச் சொல்லியிருக்கிறார்கள்.

கேஸிடியின் வைரத்தை கைப்பற்றும் திட்டம் அவரது அப்பா இறந்ததாக வரும் செய்தியிலிருந்து தொடங்குகிறது. பொதுவாக யாரும் இதை எதிர்பார்ப் பதில்லை. இந்தத் திட்டத்தில் கேஸிடியின் தந்தை யும் ஓர் அங்கம். சதியில் இரு போலீஸ்காரர்களும் உடந்தை என்பது இறுதிக் காட்சிக்கு விறுவிறுப்பை சேர்க்க உதவுகிறது.

'மேன் ஒன் ஏ லெட்ஜ்' பார்த்தே ஆகவேண்டிய படமல்ல. பார்க்க ஆரம்பித்தால் கடைசிவரை பார்த்தே தீர வேண்டும் என்று ஆர்வத்தைத் தூண்டும் படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் சுடர்

## புள்ளிகளை இணைத்து படத்தை முழுமையாக்குங்கள்






## ஒப்பிடாதே!



ஓர் ஊரில் ஒரு துறவி இருந்தார். அவரிடம் மாற்றுத் துணி கூட இல்லை. இருந்த உடையும் கிழிசலாக இருந் தாலும் நேர்த்தியாகச் சரி செய்யப்பட்டிருந்தது. அவரை பார்க்கவும், பேசவும், ஆசி பெறவும் பொதுமக்கள் அலை அலையாகத் திரண்டு வந்தனர்.

கூட்டத்தில் மிகப் பெரும்பாலானோர் அந்தத் துறவி யின் கால்களைத் தங்கள் கைகளினால் தொட்டுக் கண் களில் ஒற்றிக் கொண்டனர்.

துறவியின் புகழ் ஊரெங்கும் பரவியது. இது மெல்ல மெல்ல அரண்மனை வரை சென்றது. இந்தத் துறவியைப் பற்றி அந்நாட்டுத் தளபதி கேள்விப்பட்டான். அவனுக்கு எரிச் சலாக இருந்தது. உடனடியாகத் தான் அந்தச் சாமியா ரைக் கண்டிக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

அவன் கண்டிக்க நினைத்ததற்கு வேறு ஒரு முக்கிய காரணமும் இருந்தது.

நான்தான் அந்த நாட்டிலேயே முக்கியமானவன், தனக்கு அப்படிப்பட்ட புகழ் வாய்க்காமல், கேவலம் ஒரு சன்னியாசிக்கு இப்படிப்பட்ட புகழ் கிடைத்துள்ளதே' என்று பொறாமைப் பட்டான்.

அவன் அன்றைய தினமே அந்தத் துறவியைக் காண்பதற்குச் சென்றான். 'தளபதி வருகிறார்' என்றவுடன் துறவியைச் சுற்றி இருந்த கூட்டம் வழி விட்டு ஒதுங்கி நின்றது.

துறவியை மேலிருந்து கீழ் வரை உற்று நோக்கினான்.

'நான் இந்த நாட்டின் தளபதி. விதம் விதமான ஆயுதப் பயிற்சிகளைப் பெற்ற பல்லாயிரக்கணக்கான போர் வீரர்கள் என்னிடம் உண்டு. நான் அரண்மனைக்குள் நுழைந்தால், தெருவில் நடந்தால், எல்லாரும் என்னைத் தெய்வம் போலக் கருதிக் கை எடுத்து வணங்குவார்கள்.

ஆனால், பார்க்கப் பிச்சைக்காரனைப் போலத் தோற்றமளிக்கக் கூடிய, அடுத்த வேளைச் சாப்பாடு கூட இல்லாத உன்னை ஒரு பொருட்டாக மதித்து, அதிக மரியாதை கொடுத்துக் கால்களில் விழுந்து வணங்கிச் செல்கிறார்கள். அதுதான் ஏன், ஏதற்காக என்று எனக்குப் புரியவில்லை" என்றான்.

அவனுடைய பேச்சை ரசித்துக் கேட்ட அந்தத் துறவி அவனை அழைத்துக் கொண்டு தன் வீட்டுக்குப் பின்னா லிருந்த ஒரு பூந்தோட்டத்துக்கு வந்தார். அதில் வண்ண வண்ண மலர்கள் மலர்ந்திருந்தன.

அன்றைய தினம் பௌர்ணமியாதலால் முழு நிலவு தன் வெளிச்ச முகத்தைக் காட்டிக் கொண்டிருந்தது.

வானத்தில் ஒளிரும் நிலவைச் சுட்டிக்காட்டி, "அது என்ன?" என்று கேட்டார் துறவி.

"அதுவா, அது நிலவு!" என்றான் தளபதி.

பின்னர் துறவி தன் அருகே பூத்திருந்த ஒரு ரோஜா மலரைச் சுட்டிக்காட்டி "இது என்ன?" என்று கேட்டார்.

தளபதி எரிச்சல் அடைந்தான். இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல், "இது ரோஜாப் பூ!" என்றான்.

இந்த ரோஜாப்பூ என்றைக்காவது ஒருநாள் அந்த நிலவைப் பார்த்து, ஆஹா இந்த நிலவு எத்தனை அழகு! இதைச் சுற்றி எவ்வளவு ஒளி வெள்ளம்! நான் அந்த நிலாவைப் போல அவ்வளவு வெண்மையாக இல்லையே என்று ஒப்பிட்டுப் பார்த்ததுண்டா இல்லை அல்லவா? அதே போல அந்த நிலவு கீழே உள்ள இந்த ரோஜா மலரைப் பார்த்து, நாம் இந்த மலைரைப் போன்று நிறத்தில் இல்லையே, மிருதுவாக இல்லையே என்று வருத்தப் பட்டதுண்டா? இல்லையே. ரோஜாப் பூவின் அழகு ஒரு விதமானது. நிலவின் அழகு வேறு விதமானது!" என்றார்.

துறவி சொன்னதைக் கேட்டவுடன் தளபதியின் கண்கள் கலங்கின.

தங்களை மரியாதைக் குறைவாக நடத்தியதற்கு வருந்துகிறேன் துறவியே! என்னை மன்னிக்க வேண்டும்!" என்று அவர் கால்களில் விழுந்து வணங்கினான் தளபதி.





இரண்டு படங் களுக்கும் இடை யில் இருக்கும் ஐந்து வித்தியா சங்களைக் கண்டு பிடியுங்கள்.

## அபிமன்யு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சுடர்ந்த இதழின் தொடர்ச்சி)

அவனுக்குப் பக்கத்தில் முன் பின் தெரியாத பெண்மணி ஒருத்தி இருந்தாள். கையில் குழந்தை இருந்தது. குழந்தைக்குத் தலைமுடியைக் கூட்டி உச்சியில் பேண்ட் போட்டு வைத்திருந்த அந்தப் பெண், அவனைப் பார்த்துக் கேட்டாள், "அண்ணை, நீங்களும் சிறீலங்காவோ?"

"ஓம்"

"எப்படி?"

"ஓட்டுவிட்டான்"

"அண்ணை... அகதிகளை எத்துறதுக்கு காட்டட் விளையாட்டு ஒன்றா, புது பஸ்ஸிட டாங்களாம் உண்மையா?"

"எண்டுதான் கேள்விப்பட்டனான்"

"இந்த மாதம் 23-ம் திகதி ஒண்டு போகுதாம். அடுத்தது 30-ம் திகதி இன்னொண்டு சிறீலங்காவுக்குப் போகுதாம்"

"அதில எல்லாம் அனுப்புகினமாம்?"

"சரியாத் தெரியாது. இன்டைக்கு ஏதாவது பிரச்சினை இருக்குமோ?" அந்தப் பெண்மணி, பயந்தபடி இன்னும் அதிகரித்தாள். "அண்ணை... சலை 4 டொக்கியுமன்ரியைப் பார்த்த பிறகும் லண்டன்காரர் எங்களைப் பிடிப்பினமோ?" - இடையிலவனாக அந்தப் பெண் இருந்தாள். "சலை 4 இலங்கையின் கொலைகளைப் பிரைணப் படத்துக்குப் பிறகு, லண்டனில் உள்ள தமிழர்கள் நம்பிக்கைகொண்டு இருக்கின்றனர். இனிமேல பிரித்தானியா, இலங்கைத் தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து கொடுக்கும்" என்று அவன் அந்தப் பெண்ணிடம் சொன்னான். "டொக்கியுமன்ற

இல்லை. ஏன்?"

"அப்படியே இருங்கோ, வாறன்"

சொல்லிவிட்டு அவள் நாற்காலியில் இருந்து இறங்கிப் போனாள். அப்போதுதான் பார்த்தான், அவளுக்கு ஒரு கால் இல்லை. செயற்கைக் கால் பொருத்தி இருந்தாள். அவனுக்கு மனது பரிதவித்தது. ஒரு கால் இல்லாமலும் அவள் உழைக்கிறாள்.

போனவள், இன்னொரு ஒபிஸருடன் வந்தாள். அவர், அவளின் உயரதிகாரியாக இருக்கும். அவர் அவனிடம் சொன்னார்.

"மனோகரன் சுப்ரமணியம்?"

"ஓம்"

"நீங்கள் கொஞ்ச நேரம் அந்த ஒரேஞ் நிறக் கதிரையில் அமருங்கள். உங்களிடம் பேச வேண்டும்"

என்ன அநியாயமோ தெரியாது. பிடிச்சு அனுப்பப்போறாங்களோ? லண்டனில் 9 வருடங்கள் வீணாய்ப் போய்விட்டதே என்று நினைத்தான்.

தமிழர்கள் வாழவே பயப்படுகிற நாடு

நடத்துகிறான். ஆனால், நேரம் அவனின் சரியான பதிலைச் சொல்லாமல் இழுத்தடிக்கிறது.

டேவிட் கமரூன் அரசாங்கம் வந்த இந்தக் காலத்தில், அகதிகள் மீதான கெடுபிடி அதிகரித்து இருக்கிறது. எப்படியாவது அகதிகளைக் குறைக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அரசாங்கம் செயல்படுகிறது. அகதிகளைக் குறைக்கிறோம் என்று சொல்லித்தான் பிரித்தானிய மக்களிடம் வாக்குக் கேட்டார்கள். மக்களும் அவர்களுக்கு வாக்குப் போட்டார்கள். மக்களின் விருப்பத்தை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள். அகதிகளை நாட்டைவிட்டு விரட்டுகிறார்கள்.

அதோடு, அகதியாக வந்து இங்கு பதிந்த, இலங்கை, பாகிஸ்தான், இந்தியாக்காரரும் மெட்ரோபாலிடன் பொலிஸாருக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்தார்கள். சண்டைக் கோஷ்டிகள், கிரடிட் காட் மோசடி, கொள்ளை, கொலை என்று அகதித் தமிழர்களில் ஒரு சிலரும் பெரும் சச்சரவாக இருந்தார்கள்.



# நிராகரிக்கப்பட்டவன்

வேறை... அகதிகள் விசயம் வேறை"

"என்னண்ணை சொல்லுறியள்?"

"ஓம். அகதிகள் ஒவ்வொருவரும் தங்களுக்கு உள்ள பிரச்சினையை நிரூபிக்க வேணும். நிரூபித்தால்தான், அகதி அந்தஸ்து டொக்கியுமன்ற் ராஜுக்கிட அரசுக்குத்தானே வில்லங்கம். எங்கடை விசயம் வேறை"

டோக்கன் நம்பர் 14

மூன்றாம் இலக்க கவுன்டர் பெண்மணி அழைத்தாள். அவன் கவுன்டருக்குக் கிட்டப் போனான். அந்த அலுவலகப் பெண்மணி முகத்தை உர் என்று வைத்து இருந்தாள். அவள் குஜராத்தியாக இருக்க வேண்டும். அவனைக் கண்ணுக்கு நேரே பார்த்தாள். இங்கு பிறந்து வளர்ந்த ஆட்கள், அகதிகளை வேண்டாவெறுப்பாகவே பார்க்கிறார்கள். அகதிகள் வந்து தங்களுடைய நாட்டைச் சூறையாடுகிறார்கள் என்று நினைக்கிறார்கள். இந்தியாக்காரரே இலங்கையனை மதிப்பதில்லை. ஏன், இலங்கைத் தமிழனேகூட, இலங்கைத் தமிழனை மதிப்பதில்லை.

"உங்கட பேர் என்ன?" அலுவலர் பெண்மணி கேட்டாள்.

"மனோகரன்"

"எங்கை பேப்பரைத் தாங்கோ!"

கொடுத்தான், பேனாவை அவளது வாய்க்குள் வைத்துக் கடித்தாள். தன்னை உருட்டினாள்.

"இன்னும் இதே விலாசத்தில்தான இருக்கிறீர்களா?"

"ஓம்"

"உங்களுக்கு வேறு ஏதாவது லெட்டர் வந்ததா?"

"இல்லை"

"உங்கடை லோயரைத் தொடர்புகொண்டீர்களா?"

இலங்கைதானே. பத்திரிகைக்காரர்கள், வெளிநாட்டில் இருந்து போகிறவர்கள், ஆண்கள், பெண்கள் என்று கடத்திக்கொண்டு போகிறார்கள். கொலை செய்கிறார்கள். லண்டனில் இருந்தாலாவது மனப்பயம் இல்லாமலாவது வாழலாமே.

யோசிக்க யோசிக்க... மூளை எதனையும் உள்வாங்கத் தயாராக இல்லை. அவனுக்குப் பக்கத்தில் இருந்த பெண்மணி சைன் பண்ணிவிட்டு, தனது குழந்தையோடு இவனைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டுப் போகிறாள். குழந்தை அவனைப் பார்த்துச் சிரித்தது. அவனுக்குச் சிரிக்க வேண்டும் என்ற உணர்வு வரவில்லை. விரக்தியான மனநிலைதான் மனம் முழுக்க விரவிக்கிடந்தது. கைகள் வியர்த்தன. மனம் பதற்றமாக இருந்தது.

அவன் தனது அகதி அந்தஸ்து தொடர்பாக ஒரு நல்ல சட்டத்தரணியூடாகத்தான் வழக்கை




பெரியபெரிய கிரிமினல் குற்றவாளிகள் தமிழர்களிலும் இருக்கிறார்கள். கள்ளப் பாஸ்போர்ட் செய்வது, விசா செய்வது என்று செய்யாத கள்ள வேலைகள் இல்லை. இப்போது இது கட்டுப்பட்டு இருந்தாலும், போன மாதமும் கோவில் மோதலில் ஒரு கொலை விழுந்து இருக்கிறது. இவை எல்லாவற்றையும் நினைக்க அவனுக்கு வெறுப்பாக இருந்தது.

பூனைக் கண் அலுவலர் ஒருவர் வந்து அவனை அழைத்தார்.

"மனோகரன் சுப்பிரமணியம்!"

அவன் அவரைப் பார்த்தான்.

"வாங்கோ"

அவர் ஓர் அறையின் கதவைத் திறந்து பிடித்துக்கொண்டு உள்ளே போனார். அந்த அறைக் கதவைத் தள்ளிக்கொண்டு ஒரு செகியூரிட்டி... அறை மூலையில் விறைப்பாக நின்றுகொண்டு இருந்தார்.

"மனோகரன் சுப்பிரமணியம்... இதிலை ஒரு கையெழுத்து வையுங்கோ..." பூனைக்கண் அலுவலர் சொன்னார்.

"இது என்ன ஃபோம்?"

"இது பாஸ்போர்ட் ஃபோம். உங்களை ஊருக்கு அனுப்பப்போகிறோம்"

அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

ஏற்கெனவே அவனுக்குத் தெரிந்தவர்கள் சொன்னது நினைவுக்கு வந்தது. அலுவலர் கொடுக்கும் எந்த ஃபோமிலும் கையெழுத்து போடக்கூடாது. ஆனால், அவனுக்கே விரக்தியாக இருந்தது. 9 வருடங்கள் இங்கு இருந்து ஒன்றும் இல்லாமல் போய்விட்டது. இலங்கைக்குப் போனால் என்ன நடக்கும், நிச்சயமற்ற வாழ்க்கை.

(அடுத்த இதழில் நிறைவுறும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவரைக் கவர்வது எப்படி?



உங்கள் கணவரை உங்கள் கைக்குள் வைத்துக் கொள்ள விரும்புகிறீர்களா? ஆமாம், ஆமாம் என்று நீங்கள் அதி வேகமாக பதில் சொல்வது தெரிகிறது. கணவரின் அன்பை நிரந்தரமாகப் பெறுவதற்கு நிறைய வழிகள் உள்ளன. என்னென்ன செய்யலாம் என்று கொஞ்சம் பார்ப்போமா.. காதலர்கள் மட்டும் தான் ஐ லவ் யு சொல்ல வேண்டும் என்றில்லை. கணவனும், மனைவியும் கூட சொல்லலாம். தினமும் உங்கள் கணவரிடம் ஐ லவ் யு சொல்லுங்கள். அவர் மகிழ்ந்து போய் ஐ லவ் யு டூ டா செல்லம் என்று சொல்வார். கணவர் காலை அலுவலகத்திற்கு கிளம்பும் முன்பு அன்பாக ஒரு முத்தம் கொடுத்து அனுப்பி வையுங்கள். திரும்பி வந்ததும் உங்களுக்கு அவர் இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிப்பார். அன்றைய நாள் இருவருக்குமே இனிய நாளாக இருக்கும். கணவருக்கு மரியாதை கொடுங்கள். வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

அதனால் பல பிரச்சினைகள் தீரும். மீறியும் வாக்குவாதம் ஏற்பட்டால் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். நீங்கள் ஒரு முறை விட்டுக் கொடுத்து தான் பாருங்களேன். அடுத்த முறை அவர் விட்டுக் கொடுப்பார். என் கணவர் ஒரு முடிவு எடுத்தால் அது சரியாக இருக்கும். அவர் ஏதாவது சொன்னால் அதில் ஒரு காரணம் இருக்கும் என்று நம்புங்கள். கணவரை நல்ல நண்பராக்கிக் கொள்ளுங்கள். நண்பர்கள் போன்று மனம் விட்டுப் பேசுங்கள். கணவன், மனைவிக்கு இடையே யாரையும் நுழைய விடாதீர்கள். உங்கள் பிரச்சினைகளை நீங்களே பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால் சிறிய பிரச்சினை கூட பூதாகரமாக வெடிக்க வாய்ப்புண்டு. எதற்கெடுத்தாலும் என் அம்மா வீட்டில் எப்படி இருந் தேன் தெரியுமா என்று மூக்கைச் சிந்த ஆரம்பிக்காதீர்கள்.

அது கணவருக்கு எரிச்சலூட்டும். முடிந்தால் அம்மா வீட்டில் போய் கணவர் புகழ் பாடுங்கள். உங்களவருக்கு உங்கள் மீது அன்பு கூடும். கணவர் மீது முழு நம்பிக்கை வையுங்கள். கணவருடன் குழந்தைத் தனமாக பேசுங்கள், விளையாடுங்கள். இது மன இறுக்கத்தைப் போக்கும். மாமியார், மைத் துனிகளைப் போட்டுக் கொடுக்காதீர்கள். குறை இருந்தால் சொல்லலாம், ஆனால் பட்டென உடைத்து படாரெனப் பேசி கெடுத்து விடக் கூடாது.

எதையும் நேரம் காலம் பார்த்துச் சொல்ல வேண்டும். இல்லை என்றால் உங்கள் வாழ்க்கையில் நீங்களே மண்ணை அள்ளிப் போட்டது போன்றாகிவிடும். எதையும் நாசூக்காக எடுத்துச் சொல்லுங்கள். அவர் புரிந்து கொள்வார். சண்டை போடாத கணவன், மனைவி இருக்க முடியாது. அப்படி சண்டை போட்டால் அதை மனதில் வைத்துக் கொண்டே இருக்கக் கூடாது. அவ்வப்போது மறந்துவிட வேண்டும். அன்புடன், ஆசையுடன் கட்டிப்பிடியுங்கள். கணவரை அடக்கி ஒடுக்கித் தான் உங்கள் வசப்படுத்த வேண்டும் என்பதில்லை. அன்பாலும் உங்கள் பக்கம் சாய வைக்கலாம். இதை வெல்லாம் செய்து பாருங்கள், பிறகு உணர்வீர்கள் அருமையான மாற்றங்களை! கணவன் மனைவிக்கிடையே பெண்ணடிமை ஆணடிமை என்கிற விவாதங்கள் தேவையில்லை.

ஒருவரையொருவர் மதித்து, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, அன்புசெலுத்தி மகிழ்ச்சியாக வாழ்வதே குடும்ப வாழ்க்கை.

மகளிர் சுடர்

# மசாலா பரோட்டா




**தேவையான பொருட்கள்:**

கோதுமைமாவு 2 கப், எண்ணெய் 100 கிராம், அப்ப சோடா 1/2 சிட்டிகை, பொட்டுக்கடலை 1/4 கப், கச்சான் பருப்பு 1கப், சீரகம் , மிளகாய்ப் பொடி 1/2 கரண்டி எண்ணெய், உப்பு.

**செய்முறை:**

மாவுடன் உப்பு, அப்ப சோடா, சீரகம், மிளகாய்ப் பொடி, (பொட்டுக்கடலை, கச்சான் பொடித்துப் போடவும்), எண்ணெய் ஊற்றி, நீர் தெளித்து பிசைந்து 1மணி நேரம் ஊற வைக்கவும், பிறகு, மாவை எடுத்து சிறு சிறு உருண்டைகளாக உருட்டி, வட்டவடிவில் திரட்டிக் கொண்டு அடுப்பில் தோசைக் கல்லை வைத்து கல் காய்ந்தவுடன் வட்டவடிவில் திரட்டிய பரோட்டா மாவைப் போட்டு எண்ணெய் விட்டு இரண்டு பக்கமும் சிவந்ததும் எடுக்கவும். இது சுவையான மசாலா பரோட்டா.

# பெண்களின் உரிமை பற்றி பெரியார்




ஒவ்வொரு பெண்ணும், தானும் ஏதாவது சம்பாதிக்கும் தகுதிபெறத்தக்கபடி ஒரு தொழில் கற்றிருக்க வேண்டும். சம்பாதிக்கத் தகுந்த திறமை இருந்தால், எந்தக் கணவனும் அடிமையாய் நடத்தமாட்டான். ஓர் ஆணுக்கு ஒரு சமையல்காரி - வீட்டிற்கு ஒரு வீட்டுக்காரி - ஓர் ஆணின் குடும்பப் பெருக்கிற்குப் பிள்ளை விளைவிக்கும் ஒரு பண்ணை - ஓர் ஆணின் கண்ணுக்கு ஓர் அழகிய - அலங்கரிக்கப்பட்ட பொம்மை என்பதல்லாமல் பெண்கள் பெரிதும் எதற்குப் பயன்படுகிறார்கள்? பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். பெண்மக்கள் அடிமையானது ஆண்மக்களால்தான். ஆணுமையும் பெண் அடிமையும் கடவுளாலேயே ஏற்பட்டதாக எல்லா ஆண்களும் கருதுவதும், பெண்கள் அதை உண்மையென்று பரம்பரையாக நினைத்துக் கொண்டிருப்பதும்தான் பெண் அடிமைத்தனம் வளர்வதற்குக் காரணமாகும். திருமணம் செய்வதற்கு முன்பு பொருத்தம் பார்க்கிறார்களே, அதில் ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் சமதோற்றம், சமஅன்பு, ஒத்த அறிவு, கல்வி, ஒற்றுமை இருக்குமா என்று கருதுவதில்லை. அதற்கு மாறாக, நமது பிள்ளைக்கு அந்தப் பெண் தலைவணங்கிக் கட்டுப்பட்டு நல்ல அடிமையாக இருப்பாளா என்ற கருத்தில், மாடுகளை விலைக்கு வாங்குவதற்கு என்னென்ன பொருத்தங்கள் பார்க்கிறோமோ அதையே தான் பெண்கள் பிரச்சினையிலும் பார்க்கிறார்கள்.

மற்றவர்கள், பெண்களின் உடல் நலத்தை உத்தேசித்தும் குடும்பச் சொத்து குறையாமல் இருக்கவேண்டுமென்பதை உத்தேசித்தும் கர்ப்பத்தடை அவசியம் என்று கூறுகின்றார்கள். பெண்கள் விடுதலையடையவும் சுயேச்சைபெறவும் கர்ப்பத்தடை அவசியமென்று நாம் கூறுகின்றோம்.

ஆண்கள், பெண்களின் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன், என்றும் விடுதலை பெறமுடியாத கட்டுப்பாடுகள், பலப்பட்டுக் கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சிகளே ஒழிய வேறல்ல. எங்காவது நரிகளால் ஆடு, கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை கிடைக்குமா? எங்காவது முதலாளிகளால் தொழிலாளிகளுக்கு விடுதலை உண்டாகுமா?

# வெங்காயம் சமையலுக்கு மட்டுமானதல்ல!



முகத்தில் சுருக்கங்கள் தோன்றுகிறதா? முகம் சோர்வாகத் தெரிகிறதா? கவலை வேண்டாம்! வெங்காயம் சிறந்த கிருமிநாசினியாகும். முகத்தில் ஆங்காங்கே இருக்கும் நிறமாற்றங்களையும், சிறு சிறு மேடு பள்ளங்களையும் போக்க வெங்காயச் சாறை முகத்தில் தடவி 5 நிமிடங்களுக்குக் காயவிட்டு கழுவிக் கொள்ளலாம். வெங்காயத்தை மசித்து நாலு சொட்டு தேன் விட்டு பேக் போட்டுக் கொண்டால், முகச் சுருக்கம் நீங்கும். முகச் சோர்வுக்கு, குறிப்பாக கண்கள் சோர்வாக இருந்தால் குளிர்ந்த நீரில் ஒரு ஸ்பூன் உப்பு சேர்த்து கண்களை விழித்து அலம்பினால், சோர்வு போய் புத்துணர்ச்சி கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தடை மாத்திரை பாவிப்பது...

உடல் நலம்



டொக்டர். எஸ்.சுரேந்திரஜித்

(பெயர் குறிப்பிடப்படவில்லை)

**கேள்வி :** 32 வயதுப் பெண். உடலுறவு கொண்டு 72 மணித்தியாலத்திற்குள் பயன்படுத்தக் கூடிய கருத்தடை மாத்திரையை பாவிப்பது தீங்கானதா? அடிக்கடி உடலுறவு கொள்ளாத தம்பதிக்கு எப்போதாவது ஒருமுறை இந்த மாத்திரையை பயன்படுத்துவதில் தவறில்லையே? உங்கள் ஆலோசனையை வேண்டுகிறேன்.

**பதில் :** உடலுறவின் பின் எடுக்கக் கூடிய இந்த மாத்திரைகள் அடிக்கடி நீங்கள் கூறியது போல் பாவிப்பதற்கு உகந்தவை அல்ல. ஒரு மாதத்தில் ஒரு தடவைக்கு மேல் இவற்றைப் பாவிக்கக் கூடாது என அந்த மாத்திரையுடன் வரும் அறிவுறுத்தல் தாளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எப்போதாவது ஒருமுறை அவசரத்திற்கு பாவிப்பதற்கே இவை உருவாக்கப்பட்டுள்ளன. அடிக்கடி இவற்றை பாவிக்குமளவுக்கு அவசியமாயின் வழக்கமான குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரையையே பாவிக்க வேண்டும். இதை ஒவ்வொரு நாளும் உட்கொள்ள வேண்டும் என்பதுதான் உங்கள் பிரச்சினை என்பது எனக்குப் புரிகிறது. அவ்வாறு ஒவ்வொருநாளும் கருத்தடை மாத்திரையை உட்கொள்வதில் உங்களுக்குச் சிரமம் இருப்பின் மூன்று மாதத்திற்கு ஒருமுறை போட்டுக் கொள்ளும் கருத்தடை ஊசி மருந்தை ஏற்றிக் கொள்ளலாம். இதன் மூலம் மூன்று மாதத்திற்கு கருத்தடை என்ற பிரச்சினையே இல்லாமல் அதைப் பற்றிய கவலையே இல்லாது இருக்கலாம். சிலரில் இது உடல்பருமன் அதிகரிப்பை ஏற்படுத்தலாம். எனினும் உரிய உணவுக் கட்டுப்பாட்டை பேணினால் இதுவுமே ஒரு சிக்கல் அல்ல. கடந்த சில மாதங்களாக அரசாங்கத் துறையில் இந்த கருத்தடை ஊசிமருந்து பற்றிய பல பரவலான வதந்திகளும் கட்டுக் கதைகளும் நிலவி வருகின்றன. அரசாங்கத் துறையினால் கொள்வனவு செய்யப்பட்ட இந்த ஊசி மருந்து தரமற்றது என்று கண்டுபிடிக்கப்பட்டதால் சமீப காலங்களில் அரசாங்க சுகாதாரத்துறையில் இதை வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர். மற்றப்படி இந்த மருந்து உடல் ஆரோக்கியத்துக்கு தீங்கானது என்ற வதந்தியில் எவ்வித உண்மையுமில்லை. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வளர்ந்த நாடுகளில் இந்த ஊசி மருந்து தொடர்ந்து சட்டப்படி அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டே வருகிறது. இலங்கையில் இன்றும் கூட தனியார் துறையில் இதை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

இதேவேளை, நீங்கள் கூறிய அவசரகால கருத்தடை மாத்திரையை ஒரே மாதத்தில் ஒருதடவை மாத்திரம் பயன்படுத்த முடியும் என்பதுடன் அவ்வாறு ஒரு தடவை பயன்படுத்தினால் கூட அடுத்துவரும் மாதவிடாய் பிந்தி முந்தி அல்லது தாறுமாறாக ஏற்படலாம். இதுவும் அந்த மருந்துடன் வரும் அறிவுறுத்தல் தாளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி சட்டப்படி இதை விற்கும் மருந்தாளர் (Pharmacist) இவ்விடயத்தை வாங்குபவருக்கு சொல்லித் தர வேண்டும். இதை பரிந்துரைத்த டொக்டரும் இவ்விடயத்தை நோயாளிக்கு தெளிவாக விளங்கப்படுத்த வேண்டும். ஆனால் பலர் டொக்டரிடம் செல்லாது மருந்தகங்களில் இந்த மருந்தை தாமாகவே வாங்கி உட்கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனால் இப்படிப்பட்டவர்களுக்கு டொக்டரின் ஆலோசனை கிடைக்காது. இந்த அவசரகால கருத்தடை மாத்திரையை ஒரு மாதத்தில் ஒரு தடவை பயன்படுத்தினாலே மாதவிடாய் பிந்துதல், முந்துதல் முதலான ஏறுமாறான விளைவுகள் ஏற்படுமாயின் ஒரே மாதத்தில் இரண்டு மூன்று தடவை உள்ளெடுத்தால் என்ன நடக்கலாம் என்பது உங்களுக்குப் புரிந்திருக்குமென நினைக்கிறேன். இனிமேல் இல்லையென்ற அவசர நிலையில் மட்டுமே இந்த மாத்திரை பயன்படுத்தப்படலாம். அதுவும் 72 மணிநேரத்தினுள் பயன்படுத்த முடியும் எனக் கூறப்பட்டாலும் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக முதலாவது மாத்திரையை உட்கொண்டு விட வேண்டும். பின்னர் 12 மணி நேரத்தினுள் இரண்டாவது மாத்திரையையும் உட்கொள்ள வேண்டும். இரண்டையும் ஒன்றாக உட்கொண்டால் என்ன என்று ஒருவர் கேள்வி எழுப்பலாம். ஒரேயடியாக காலைச் சாப்பாட்டையும் பகல் சாப்பாட்டையும் உட்கொண்டு முடித்து விடமுடியுமா?

நடைமுறையில் மாதத்தில் ஓரிருமுறைதான் உடலுறவு கொள்ளும் தம்பதிகளும் இருக்கிறார்கள்.

அவ்வாறாயின் அந்த ஓரிரு நாட்களுக்காக அந்த மாதம் முழுவதுமே கருத்தடை மாத்திரையை நாளாந்தம் உட்கொண்டு வரவேண்டுமா என ஒருவர் கேட்கலாம். விடை ஆம் என்பதே. நமது உடலுறவுக்கான ஆர்வம், தேவை என்பவை மாறுவதைப் போல உடலின் ஓமோன் இயக்கம் மாறி மாறி ஏற்படுவதல்ல. அது ஒரே சீராக இயங்கி வருவதாகும். எனவே ஓரிருநாள் உடலுறவு கொண்டாலுமே மாதம் முழுவதும் மாத்திரையை தினசரி உட்கொள்ளவே வேண்டும்.

வாசகர்களே!
உங்கள் உடல் நலம் தொடர்பான
கேள்விகளுக்கு
டொக்டர் எஸ்.சுரேந்திரஜித்
பதிலளிக்கின்றார். உங்கள்
கேள்விகளை பின்வரும்
முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

உடல் நலம்
சுடர் ஒளி வாரமலர்,
இல.361, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

# உடல் எடையைக் குறைக்கும் வெந்தயம்!



**கோ**டைகாலத்தில் உடல் வெப்பமும் அதிகரித்து விட்டது. இதனால் வெந்தயத்தை அதிகம் சாப்பிடுவோம். வெந்தயம் உடலுக்கு குளிர்ச்சியைத் தரும். இதற்கு இன்னொரு குணமும் இருக்கிறது. வெந்தயம் உடல் எடையையும் குறைக்கிறது. இதனை சாப்பிடுவதால் ஜிம் செல்லாமல், உடலை வருத்தி உடற்பயிற்சியை செய்யாமல் எளிதாக எடையைக் குறைக்கலாம். வெந்தயத்தில் நார்ச்சத்து அதிகமாகவும், கலோரி குறைவாகவும் உள்ளது. இதில் நார்ச்சத்து அதிகமாக இருப்பதால் இரத்தக் கொதிப்பு மற்றும் உடலில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்துகிறது. மேலும், வெந்தயத்தில் காபோஹைட்ரேட் குறைவாக உள்ளதால், எடை அதிகரிக்க வழி இல்லை. மற்றும் உடலில் கலோரி குறைவாக இருந்தாலும் எடை அதிகரிக்காது. இரவில் ஒரு கரண்டி வெந்தய விதையை நீரில் ஊற வைத்து, காலையில் சுடு தண்ணீரில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால், உடலில் உள்ள நச்சுப்பொருளை வெளியேற்றுவதோடு, உடல் எடையையும் குறைக்கும். வெந்தய விதையை சாதாரண தண்ணீரில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால், உடலில் உள்ள கொழுப்புகளைக் கரைப்பதோடு, ஜீரண சக்தியும் கூடும். வெந்தய விதையை பொன்னிறமாக வறுத்து அதை பொடியாக்கி, காற்றுப் புகாத ஒரு டப்பாவில் வைத்து, உண்ணும் உணவில் கலந்து சாப்பிடலாம். வெறும் வயிற்றில் தேனீருடன் வெந்தயப் பொடியைக் கலந்து சாப்பிடலாம். இது அடிக்கடி பசி ஏற்படுவதைக் கட்டுப்படுத்தும்.

# 40 வயதில் குழந்தைப் பேறு?



திருமணம் முடிந்தவுடன் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்ப்பது குழந்தைப்பேறு. நமது நாட்டைப் பொறுத்த வரை 75 சதவீத தம்பதிகளே திருமணமான முதல் ஆண்டில் குழந்தை பெற்றுக் கொள்கிறார்கள். இரு ஆண்டிற்குள் 85 சதவீத தம்பதிகள் குழந்தை பெற்றுக் கொள்கிறார்கள்.

பொதுவாக பெண்கள் 21 வயதிலிருந்து 27 வயதுக்குள் குழந்தை பெற்றுக் கொள்வது தாய்க்கு ஆரோக்கியம். இந்த வயதில் இருக்கும் பெண்களுக்கு சினை முட்டை உற்பத்தியில் பாதிப்பு இருக்காது. இந்த வயதுக்குள் தான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. ஓராண்டு முன்னே பின்னே இருந்தால் பெரிய பாதிப்பு ஏற்பட்டு விடாது. சமீபகாலமாக திருமணமான தொழில்புரியும் பெண்கள் கர்ப்பத்தைத் தள்ளிப்போடுவதைப் பார்க்க முடிகிறது. 20, 21 வயதில் திருமணமான பெண்கள் இப்படி குழந்தைப் பேற்றை தள்ளிப் போடலாம். ஆனால் 30,35 வயதில் திருமணம் செய்து கொண்டு, நாற்பது வயதில் குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்று தள்ளிப்போடுவது காலங்காலமாய் கண்ணீர் சிந்த வேண்டிய நிலைக்குத் தள்ளிவிடும்.

ஏனெனில் வயது கூடக் கூட சிறிய குறைபாடுகள் கூட பெரிய குறைபாடுகளாக மாறக் கூடும். பெண்களென்றால் சினை முட்டை உற்பத்தி குறைந்துவிடும். ஆண்களென்றால் உயிரணுக்களின் உயிரோட்ட வேகம் குறைந்து விடும். முப்பது வயதில் கல்யாணம் செய்து கொண்டவர்கள் இயற்கையாகவே குழந்தைப்பேறு நமக்கு இருக்கும் என்று மூன்று, நான்கு வருடங்கள் காத்திருக்கக் கூடாது.

காலம் தாழ்த்திய அல்லது பருவம் கடந்த திருமணம் என்றால் ஆண், பெண் இருவருமே உரிய மருத்துவ சோதனை செய்து கொள்வது பின்னால் சில பிரச்சினைகள் வராது தடுக்க உதவும். திருமணத்திற்கு முன் தெரிந்தோ, தெரியாமலோ முறையற்ற உறவுகளில் ஈடுபட்டிருந்தால் பால்வினை நோய்கள் தாக்கம் இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆண்கள் உயிரணு எண்ணிக்கையை சோதித்து பார்த்துக்கொள்ள வேண்டும். தாமதமாக திருமணம் செய்துகொள்பவர்கள் ஏதேனும் குறைகள் இருப்பதை நிவர்த்தி செய்து கொண்ட பின்னரே இல்லறத்தில் ஈடுபட வேண்டும் அப்போது தான் இனிய மண வாழ்க்கை அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

36

நா.யோகேந்திரநாதன்

அன்று மாலுசந்தியே விழாக்கோலம் பூண்டிருந்தது. மாலுசந்தி நாற்சந்திக்கு அருகாமையிலிருந்த ஒரு கொட்டைக் காணியே பொதுக்கூட்ட மைதானமாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

ஒரு பக்கத்தில் மர வாங்குகளால் உருவாக்கப்பட்டு ஒரு மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதன் நான்கு பக்கங்களிலும் கப்புகள் நடப்பட்டு அவற்றில் அரிவாள் சுத்தியலுடன் நட்சத்திரச் சின்னம் பொறிக்கப்பட்ட கொடிகள் பறந்து கொண்டிருந்தன. மேடையின் மேல் பகுதியும் சிவப்புக் கொடிகளாலும், தென்னோலைத் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மைதானத்தின் நடுவில் ஒரு உயரமான தடி நாட்டப்பட்டு அதில் பிணைக்கப்பட்ட சிவப்புக் கொடித் தோரணங்கள் சகல பக்கங்களிலும் மைதானத்தின் எல்லையை நோக்கி இழுத்துக் கட்டப்பட்டிருந்தன. மைதானத்தைச் சுற்றி நடப்பட்டு தோரணங்கள் இழுத்துக் கட்டப்பட்ட கம்பங்களில் நீண்ட ரியூப் மின்குமிழ்கள் கட்டப்பட்டிருந்தன. அன்று பகல் முழுவதுமே ஒலிபெருக்கி பூட்டப்பட்ட மோட்டார் வாகனங்கள் வடமராட்சியின் மூலை முடுக்கெங்கும் சென்று பொதுக் கூட்டத்திற்கான விளம்பரங்களை மேற்கொண்டன. அத்துடன் தேர்தல் விஞ்ஞாபனம், கொள்கை விளக்கப் பிரசுரங்கள் என்பவற்றையும் விநியோகித்தன.

சில நாட்கள் முன்பு அதே இடத்தில் தமிழரசுக் கட்சியின் பிரசாரப் பொதுக் கூட்டம் நடந்தது. அதிலும் பெருமளவு பொதுமக்கள் கலந்து கொண்டனர். அதில் அமிர்தலிங்கம், இராசதுரை, மன்சூர் மௌலானா போன்ற பல பிரபல்யப் பேச்சாளர்கள் உட்பட சகல வேட்பாளர்களும் உரையாற்றினர். அவர்கள் அனைவரின் உரைகளின் சாராம்சம் தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராகவே இருந்தது. சிலரின் பேச்சுகள் சிங்கள மக்களுக்கு எதிரான குரோத உணர்வைத் தூண்டும் வகையிலும் அமைந்திருந்தன. ஒரு இனவாதப் பிரசாரத்தின் முன்பு நியாயபூர்வமான கொள்கை விளக்கம் மேலெழுவது மிகவும் கடினம் என்பதைக் குடியரசார் நன்றாகவே தெரிந்திருந்தார். எனவே அவர் தங்கள் பிரசார முறைகளிலும் புதிய வியூகங்களை வகுக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து செயற்பட ஆரம்பித்தார். அதேவேளையில் வடமராட்சி எங்கும் கந்தமுருகேசனார் விதைத்த முற்போக்கு விதைகளின் மேல் கட்டியமைக்கப்படும் தனது பிரச்சார முறை நிச்சயம் வெற்றி பெறும் என்றே அவர் நம்பினார்.

மாலை 5 மணியளவில் தொடங்கிய ஊர்வலத்தில் தென்னிலங்கையிலிருந்து வந்திருந்த டொக்டர் விக்கிரசிங்க, பீட்டர் கெனமன், சண்முகதாசன் உட்பட வடபகுதி வேட்பாளர்களும் ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டனர். உயர்ந்து பறந்த செங்கொடிகளும் வானைப் பிளந்த கோஷங்களும் அங்கு ஒரு புரட்சிகரமான சூழ்நிலையை ஏற்படுத்தியது. நெல்லியடி சந்தியில் ஆரம்பமான ஊர்வலம் நெல்லியடி மத்திய கல்லூரி வழியால் சென்று அடுத்த சந்தியை அடைந்து மாலுசந்தியை நோக்கி நகர்ந்தது. சாணக்கமூலை, அல்வாய் ஆகிய பகுதிகளில் வீடு வாசல்களில் கும்பம் வைத்து, குத்துவிளக்கு ஏற்றி பொன்.கந்தையாவுக்கும் தென்னிலங்கைத் தலைவர்களுக்கும் மக்கள் பெருமகிழ்ச்சியுடன் மாலைகள் அணிவித்தமை கொழும்புத் தலைவர்களுக்குப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. குடியரசாரும் ஐயாமாரும் வெற்றிக்காக வகுத்த வியூகங்களில் அதுவும் ஒன்று என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை.

நெல்லியடிச் சந்தியில் ஊர்வலம் ஆரம்பித்த போது சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் எம்.சீ.சுப்பிரமணியத்திற்கு தம்பிப்பிள்ளை விதானையார், பொன்னிலம்பலம் பொன்னையா ஆகியோர் மாலை அணிவித்தமை கரவெட்டி, கல்லோலை, இளகாமம், அல்வாய் ஆகிய இடங்களின் மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. ஊர்வலம் நிறைவுபெற்று பொதுக்கூட்டம் ஆரம்பமாகிய போது நேரம் ஆறரையாகிவிட்டது. ஒலிபெருக்கியில் பட்டம்மாள் பாடிய 'எங்கு சுதந்திரம் என்பதே பேச்சு. நாம் எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு. சங்கு கொண்டே ஊதுவோமே' என்ற பாடல் ஊர்வலத்தினரை வரவேற்பது போல ஒலித்துக் கொண்டிருந்தது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பொன்னுத்துரை மாஸ்ரர் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது. வழமையான தலைமையுரை, வரவேற்புரை போன்ற சம்பிரதாயங்கள் நிறைவடைந்ததும், பீட்டர் கெனமன்



ஆங்கிலத்தில் பேச அதைக் கார்த்திகேயன் மாஸ்ரர் மொழிபெயர்த்தார்.

பீட்டர் கெனமனின் நகைச்சுவை கலந்த ஆணித்தரமான அந்தப் பேச்சைக் கார்த்திகேயன் மாஸ்ரர் அதே சுவையுடன் மொழிபெயர்த்தார். எஸ்.ஏ.விக்கிரமசிங்கவின் சிங்களப் பேச்சை வி.பொன்னம்பலம் அழகான தமிழில் மொழிபெயர்த்தார். வேறு சில வேட்பாளர்களும் உரையாற்றினர். தேர்தல் பிரச்சாரக் கூட்டமாக இருந்த போதிலும் பேச்சுகள் வெறுமனே உணர்ச்சியூட்டுபவையாக இன்றி மக்களின் நெஞ்சைத் தொடும் வகையிலும், சிந்திக்கத் தூண்டுபவையாகவும் இருந்தன.

அடுத்த பேச்சாளராக சொர்ணலட்சுமி அழைக்கப்பட்டாள். குடியரசு கந்தப்பர் எழுதிக் கொடுத்தவற்றை ஒரு வரிகூடப் பிசகாமல் மனனம் செய்திருந்தாள். தெளிந்து அமைதியாகவும், வேகமாகவும் ஓடும் ஒரு அருவி போல் அமைந்திருந்தது அவளின் பேச்சு. சமூக ஏற்றத் தாழ்வுகள் பற்றிப் பேசிவிட்டு "இப்படியான கொடுமைகளால் பாதிக்கப்பட்ட ஒரு சகோதரியின் துன்பத்தைக் கேளுங்கள்" எனக் கூறி இடை நிறுத்தினாள் அவள். குடியரசாரின் ஏற்பாட்டின்படி கமலியும் மேடையில் ஏறினாள். மேடையில் ஏறி அந்தப் பிரமாண்டமான ஜனத் திரளைப் பார்த்ததும் குடியரசார் எழுதிக் கொடுத்து அவள் மனனம் செய்து வைத்திருந்த அத்தனையும் மறந்து போய்விட்டது. கை கால்கள் நடுங்கத் தொடங்கிவிட்டன.

ஏதோ ஒரு பிசகு ஏற்பட்டு விட்டதைச் சொர்ணம் உணர்ந்து கொண்டாள். நிலைமையை மாற்றும் விதமாக சொர்ணம், "சொல்லுங்கோ நீங்கள் பட்ட துன்பத்தைச் சொல்லுங்கோ" என்றாள்.

கமலிக்கு என்ன சொல்வது, எப்படிச் சொல்வது என்பது புரியவில்லை. ஆனால் ஏதோ ஒருவித உணர்வால் தான் ஆட்கொள்ளப்படுவதை மட்டும் உணர முடிந்தது. அவள் திடீரென சொர்ணமோ, குடியரசாரோ எதிர்பாராத விதமாகக் கத்த ஆரம்பித்தாள். "நான் சிங்களவனைக் காதலிச்சன். அவரும் என்னைக் காதலிச்சார். காதலிச்சம். கலியாணம் கட்டினம். மூண்டாம் நாள் சுட்டுப் போட்டாங்கள். சுட்டுக் கொண்டு போட்டாங்கள். இப்ப நான் பதினெட்டு வயதிலை விதவை. இனி என்ரை மிச்ச வயதெல்லாம் எனக்கு பாலைவனம். பாலைவனம்." அவளால் மேற்கொண்டு எதுவும் பேச முடியவில்லை. விம்மியழுது கொண்டே இறங்கி ஓடிவிட்டாள். குடியரசு கந்தப்பர் மெல்ல அணைத்து காருக்குள் கொண்டு போய் அமர்த்தினார். ஆனால் கமலியின் வார்த்தைகளும் இனி தனது எதிர்காலம் பாலைவனம் எனக் கூறி குமுறி அழுதமையும் அந்தப் பெரும் மக்கள் வெள்ளத்தையே சில நிமிடங்கள் உறைய வைத்து விட்டன. அவளின் வார்த்தைகளும் கண்ணீரும் ஏதோ ஒரு விதத்தில் எல்லோரையுமே குற்றம் சுமத்துவது போல் தோன்றியது.

அதேவேளையில், சொர்ணமும் கூட குடியரசார் எழுதிக் கொடுத்ததை மறந்துவிட்டாள். ஆனால் அதைவிட சிறப்பாகத் தன்னைக் கமலி பேச வைத்து விட்டாள் என்றே அவளுக்குத் தோன்றியது. அவள் கமலியின் நிலையை எடுத்துக் கூறி அதற்கு சமூக ஏற்றத்தாழ்வு எப்படிக் காரணமாய் அமைந்தது என்று விளக்கி இன, மத, சாதி ஒடுக்குமுறைகள் இல்லாமற் போக பொதுவுடமைக் கொள்கைகள் ஏற்கப்பட வேண்டும் எனவும் கூறி தனது பேச்சை நிறைவுசெய்தாள். குடியரசு கந்தப்பர் சொர்ணத்தையும், கமலியையும் மேடையில் ஏற்றியதால் எதிர்பார்த்த பலனை விடப் பலமடங்கு கிடைத்ததாக எண்ணி மகிழ்ச்சியடைந்தார். அந்தச் சம்பவம் பலரின் மனமாற்றத்திற்கான கதவுகளைத் திறக்கும் என்றே அவர் நம்பினார்.

எனினும், காருக்குள் இருந்த கமலியின் அழுகையை எப்படி நிறுத்துவது என்பது மட்டும் அவருக்குப் புரியவில்லை.

"அழாதை பிள்ளை.. காலம் எல்லாக் கவலையையும் கழுவிவிடும்" என்றார்.

அவள் கண்களைத் துடைத்து விட்டுச் சொன்னாள். "காலத்தாலை என்ரை அழுகையை மாத்த ஏலாது. அதை சிங்களனைக் கொண்டவங்களின்ரை இரத்தத்தாலை தான் கழுவ முடியும்." அவளின் குரலில் ஒரு அசைக்க முடியாத உறுதி இருந்ததை அவரால் உணர முடிந்தது.

சிறிது நேரத்தில் கூட்டம் முடிவடையவே சொர்ணமும் வந்து காரில் ஏறிக் கொண்டாள். அவள் மெல்ல கமலியின் நாடியைப் பிடித்து முகத்தைத் தன் பக்கம் திருப்பி விட்டவாறே "சரியாய் உனக்குக் கோபம் வந்திட்டுது என்ன?" எனக் கேட்டாள்.

கமலி இறுக்கமாகவே சொன்னாள். "அது எனக்கு வரத் தேவையில்லை. உள்ளையே இருக்குது."

சொர்ணத்தைப் பொறுத்தவரையில் அவளின் வார்த்தைகள் பயமூட்டுவனவாக இருந்த போதும் அவற்றில் உள்ள நியாயங்களை அவள் மனமார ஏற்றுக் கொண்டாள்.


பீட்டர் கெனமன், விக்கிரமசிங்க ஆகியோரும் கூடக் காரின் அருகில் வந்து கமலிக்கு ஆறுதல் கூறினர். கார்த்திகேயன் அவர்கள் சொன்னவற்றை மொழி பெயர்த்துக் கூறிவிட்டு "மகள் நீங்கள் மட்டுமில்லை சமூகத்திலை உள்ள மூடப் பழக்கவழக்கங்களை மீறத் துணியிற ஆக்களுக்குப் பலவிதமான கஷ்டங்கள் வரும். அதை எதிர்கொண்டு நிமிர்ந்து நின்றால் சமுதாயத்தையே மாத்திவிடலாம்" என்றார். அந்த வார்த்தைகளுக்கு ஏதோ ஒரு மந்திரசக்தி இருப்பது போலவே கமலிக்குத் தோன்றியது. அவரைக் காலில் தொட்டு வணங்க வேண்டும் போல அவளுக்கு ஒரு உணர்வு ஏற்பட்ட போதும் அவர் அப்படியான பழக்கங்களை விரும்பமாட்டார் என அறிந்திருந்ததால் அவள் அப்படிச் செய்யவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்புறக்கணிப்பும் பாதிப்புறும் கல்வியும்

**கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள இத்தகைய கொதிநிலை இன்னும் சில நாட்களில் மேலும் மோசமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக நியமனங்கள் மற்றும் சம்பள உயர்வு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர் சங்கங்களும் எதிர்காலத்தில் போராட்டத்தில் குதித்தால் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி மேலும் சிக்கலுக்குள் தள்ளப்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவ, மாணவிகள் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் குழப்பங்கள், தாமதங்கள் நேர்ந்தால் முடிவுகள் வெளியிடுதலிலும் தாமதங்கள் ஏற்படலாம் என இவர்கள் அச்சம் கொள்கின்றனர்.**




இலங்கைத் திருநாட்டின் இன்றைய கல்விப் போக்கில் இலவசக் கல்வி ஆட்டங்கண்டு வருகின்றது. கல்வித்துறையில் அதிகாரிகளின் போக்கும் அரசின் சில வேலைத்திட்டங்களும் இலவசக் கல்விக்கு சாவுமணி அடிக்கும் முயற்சியாகவே அமைந்து வருகின்றது. மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தில் கல்வித்துறை அபிவிருத்தி பற்றி ஜனாதிபதி கோடிட்டு குறிப்பிட்டிருந்தாலும் நடைமுறையில் ஆட்சியாளர்களின் செயல்கள் அனைத்தும் படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் என்ற கதையாகவே இருக்கிறது. 3ம் தரக் கல்வியை இலவசமாக வழங்கும் நாடுகளின் பட்டியலில் தாமே முன்னணி வகிப்பதாக அதிகாரபீடமும் ஆட்சியாளர்களும் தமக்குத் தாமே புகழ் மாலை சூட்டிக் கொண்டாலும் 3ம் தரக் கல்வித்துறை இன்று சீர்குலைவதற்கு தெரிந்தோ தெரியாமலோ ஆட்சியாளர்களே காரணமாகி வருகின்றார்கள். இதற்கு கடந்த வருட காலப்பகுதியில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள் சான்றாதாரமாக உள்ளது.

இஸட் புள்ளிப் பிரச்சினை, உயர்தரப் பரீட்சை வினாத்தாள் குளறுபடி, பரீட்சைகள் பிற்போடப்படல், பல்கலைக்கழகங்கள் காலவரையறையின்றி மூடப்படல், விரிவுரையாளர்களின் சம்பள உயர்வு கோரிய பணிப்புறக்கணிப்புப் போராட்டம், நடந்து முடிந்த உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல், தனியார் பல்கலைக்கழக உருவாக்கம் என பல சம்பவங்கள் இதற்கு சிறந்த சான்றாதாரமாக உள்ளன.

குறிப்பாக நடந்து முடிந்த உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள்களில் குளறுபடிகள் இருப்பதாகவும் இதனால் தாம் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் மாணவர்கள் பலர் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றனர். தமது பாடத்திட்டத்திற்கு அப்பாலான கேள்விகள் வினாத்தாள்களில் தயார் செய்யப்பட்டிருப்பதாகவும் வினாக்களின் அமைப்பு முறையில் வழமைக்கு மீறிய சில குறைபாடுகள் இருப்பதாகவும் மாணவர்களின் சுட்டுவிரல்கள் பரீட்சைத் திணைக்களம் நோக்கியும் கல்வித் திணைக்களம் நோக்கியும் நீண்டு வருகின்றன. ஆனால் சில பாடத்திட்டங்களில் சில குறைபாடுகள் இருந்ததை இலங்கைப் பரீட்சைத் திணைக்களமும் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளது. குறித்த விடயம் சம்பந்தமாக குறித்த வினாத்தாள்களை தயார் செய்த பேராசிரியர்களிடம் விளக்கங்கள் கோரப்பட்டிருப்பதாக பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் ஏற்கனவே ஒப்புதல் வாக்குமூலங்கள் அளித்திருந்தன. இதேவேளை கொழும்பில் உள்ள பிரபல பாடசாலையொன்றில் பரீட்சை தொடர்பான திருத்தத்தை வழங்காத பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் ஒருவர் பணி நீக்கமும் செய்யப்பட்டிருந்தார். இந்த சில குழப்பங்களுக்கு மத்தியிலும் அரசு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை திரும்ப நடத்தி முடித்திருந்தது.

இதேவேளை, கடந்த உயர்தர பரீட்சையின் முடிவுகள் வெளியிடுதல் சம்பந்தமான குழப்பங்களின் சூடு தணிவதற்கிடையில் அடுத்த உயர்தரப் பரீட்சை நடந்து முடிந்துள்ளது. குறிப்பாக கடந்த உயர்தரப் பரீட்சையில் இஸட் புள்ளி கணித்தல் தொடர்பான குழப்பங்கள் இன்னும் ஓய்ந்ததாகத் தெரியவில்லை. இதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளோம் என பல மாணவர்களின் அவலக்குரல்களும், மனுக்களும் மனித உரிமை ஆணைக்குழுக்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பனவற்றிற்கு வந்தடைந்த வண்ணமே இருக்கின்றன. பழைய பாடத்திட்டம், புதிய பாடத்திட்டம் என்பவற்றிற்கான இஸட் புள்ளிகளினைக் கணிப்பதிலேயே குழப்பங்கள் ஏற்பட்டிருப்பதான குற்றச்சாட்டுகள் தொடர்ந்து நீண்டவண்ணம் இருக்கின்றன. இந்தக் குழப்பங்கள் தீரும்வரை பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்கனவே தெரிவித்திருந்தது. இந்நிலையில் நடந்து முடிந்த உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களை திருத்தும் பணியும் குழப்பத்தில் முடிவடையலாம் என கல்வியியலாளர்களால் தொடர்ந்து ஆருடம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்பள உயர்வு கோரிய போராட்டம் நாடு முழுவதும் மும்முரமாக இடம்பெற்று வரும் நிலையில் நடந்து முடிந்த உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணியிலும் சிக்கல் ஏற்படலாம் என்ற கருத்துக்கள் தொடர்ந்து வெளிவந்த வண்ணமிருக்கின்றன. பரீட்சை வினாத்தாள்களைத் தயார்செய்த பேராசிரியர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் விடைத்தாள் பணி சாத்தியமற்றது என சில ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்து வருகின்றன.

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள இத்தகைய கொதிநிலை இன்னும் சில நாட்களில் மேலும் மோசமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக நியமனங்கள் மற்றும் சம்பள உயர்வு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர் சங்கங்களும் எதிர்காலத்தில் போராட்டத்தில் குதித்தால் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி மேலும் சிக்கலுக்குள் தள்ளப்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவ மாணவிகள் விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் குழப்பங்கள் தாமதங்கள் நேர்ந்தால் முடிவுகள் வெளியிடுதலிலும் தாமதங்கள் ஏற்படலாம் என இவர்கள் அச்சம் கொள்கின்றனர்.

ஆனால் அரசும் அதனை வழிநடத்தும் அதிகாரபீடமும் ஏற்றுக் கொள்வ[illegible]பதாகத் தெரியவில்லை. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கடந்த ஒரு மாதமாக தொடர்ந்துவரும் சம்பள உயர்வுகோரிய வேலை நிறுத்தப் போராட்டம் எந்தவித பதிலும் இன்றித் தொடர்கிறது. இதனால் நாட்டில் உள்ள 16 பல்கலைக்கழகங்களில் 13 பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகள் முற்றாக செயலிழந்துள்ளன. இலங்கையில் எல்லா உத்தியோகத்தர்களையும் விட பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கே அதிக சம்பளம் வழங்கப்படுவதால் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவோ பரிசீலிக்கவோ தாம் தயாராக இல்லை என உயர்கல்வி அமைச்சு ஏற்கனவே தெரிவித்துள்ளது.

அத்தோடு உயர்கல்வி அமைச்சிற்கும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் இலங்கை இனப்பிரச்சினைக்காக நடாத்தப்படும் பேச்சு வார்த்தைகளைப் போல எந்தத் தீர்வையும் பெற்றுத் தராமல் வெறும் கால இழுத்தடிப்பாகவே தொடர்கிறது. இத்தகைய பேச்சுவார்த்தைகள், தோல்விகள் பல்கலைக்கழக கல்விசார் நடவடிக்கைகளில் குழப்பங்களை விளைவிப்பனவாக தெரிகிறது. ஏற்கனவே நாட்டில் உள்ள மருத்துவ பீடங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து கலை, வர்த்தக, விஞ்ஞான, விவசாய பீடங்கள் அடங்கிய பல்கலைக்கழகங்கள் காலவரையறையின்றி மூடப்படுவதாக தெரிவித்து, நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் மூடுவிழா நடாத்தியிருக்கிறது உயர்கல்வி அமைச்சு. எந்த அழுத்தத்திற்கும் அடிபணிய தயார் இல்லை என உயர்கல்வி அமைச்சு வெட்டு ஒன்று துண்டு இரண்டாக கூறி விட்டது.

இந்நிலையில், இருதரப்புக்கும் இடையில் நடந்துவரும் பனிப்போர் மாணவர்களின் கல்வியையே முற்றாக சீர்குலைத்து வருகிறது. அதாவது உயர்கல்வி அமைச்சின் விடாப்பிடிப் போக்கும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் தொடர்ச்சியான போராட்டங்கள் மாணவர்களின் கல்வியையே இருள் மிகுந்த சூழல் ஒன்றுக்குள் தள்ளி வருகின்றது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் தெரிந்தோ, தெரியாமலோ மாணவர்களை மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். 2011 ஆம் ஆண்டு, 2012 ஆண்டு நடைபெறவிருந்த வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கான பரீட்சைகள் கூட எப்போது இடம்பெறும் என்ற எதிர்பார்ப்புடன் மாணவர்கள் தினம் தினம் தவித்து வருகின்றனர். அத்தோடு பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரிப் பரீட்சைகள் தொடரும் போராட்டம் காரணமாக பிற்போடப்பட்டே வருகின்றது. அதை நடத்தி முடிக்கும் பொறுப்பிலிருக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், உயர்கல்வி அமைச்சு என்பன இதை தமது கௌரவத்திற்கான போராட்டமாக கருதி அதை இழுத்தடிப்பதிலேயே அக்கறை காட்டி வருவதாகத் தெரிகிறது.

அத்துடன் தனியார் பல்கலைக்கழக உருவாக்கம் பற்றிய செயற்திட்டமும் இலங்கை உயர்கல்வி அமைச்சால் மறைமுகமாக நடாத்தப்பட்டு வருவதான குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வெளிவந்த வண்ணமுள்ளன. கடந்த வருட நடுப்பகுதியில் இது தொடர்பான குரல்கள் அரச மட்டத்திலிருந்து கிளம்பியிருந்தன. யார் தடுத்தாலும் தனியார் பல்கலைக்கழகம் உருவாகும். முடிந்தால் தடுத்துப் பாருங்கள் என உயர்கல்வி அமைச்சர் தெரிவித்திருந்தார். இந்நிலையில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் தூக்கிய போர்க்கொடி காரணமாகவும், அடையாள வேலை நிறுத்தங்கள் காரணமாகவும் அது ஓரளவுக்கு அடங்கிப் போயுள்ளது. குறித்த பிரச்சினையும் சம்பள உயர்வுப் பிரச்சினைக்கு நிகராக எதிர்காலத்தில் தலைதூக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. குறித்த தனியார் பல்கலைக்கழக உருவாக்கல் சம்பந்தமான பிரச்சினையும் எதிர்காலத்தில் சூடுபிடிக்குமாக இருந்தால் போராட்டங்கள் பகிஷ்கரிப்புகள் முற்றி 3ம் தர கல்வி என்பது எட்டாக்கனியாகவே போய்விடும் சூழ்நிலை தவிர்க்க முடியாமல் ஏற்பட்டுவிடும் அபாயம் உண்டு.

இத்தகைய கொதிநிலையில் கடந்த வாரம் புதன்கிழமை பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறு கோரியும் அரசு தமது விடாப்பிடிக் கொள்கையை தவிர்த்து கற்றல் செயற்பாடுகளுக்கு அனுசரணை வழங்குமாறு கோரியும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் போராட்டம் ஒன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றிருந்தது. குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் 'இலவசக் கல்விக்கு சாவு மணி அடிக்காதே', 'கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்குக' போன்ற பதாகைகளை ஏந்தியதுடன் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர். குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் பல்கலைக்கழக ஆசிரியர்களின் போராட்டம் காலவரையறையின்றி நீண்டகாலத்திற்கு தொடருமாக இருந்தால் தாங்கள் நான்கு வருடங்களில் முடிக்க வேண்டிய பட்டப்படிப்பு பின்தள்ளி மேலும் சில வருடங்களை விழுங்குவதுடன் தமது கல்வியிலும் எதிர்காலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என கண்ணீர் விட்டு ஆறாத குறையாகத் தெரிவித்திருந்தனர். இந்தப் போராட்டம் இடம்பெற்று சில நாட்களுக்குள்ளேயே பல்கலைக்கழகங்கள் காலவரையறையின்றி மூடப்படும் என்ற செய்தி உயர்கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. இது, குறித்த மாணவர்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகவே அமைந்துள்ளது.

இந்நிலையில், அரசினதும் உயர்கல்வி அமைச்சினதும் அடுத்த செயற்பாடு என்ன என்பது தான் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கேள்வி. எனவே, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் உயர்கல்வி அமைச்சும் தமக்கிடையிலான பனிப்போரை கைவிட்டு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு தோள்கொடுக்க வேண்டும். மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கல்வியை வியாபாரமாக்காமல் பல்கலைக்கழக ஆசிரியர் கடமைக்கு திரும்பி கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் இலங்கையின் இலவசக் கல்வி செயலிழப்பதை யாராலும் தடுக்க முடியாது போய்விடும்.

**ஹரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் தேர்தல் முன்கூட்டியே நடக்கலாம்!

**2014 தேர்தலில் திமுக ஒருவேளை தோற்றாலும் கூட அதிமுகவின் தலைவி பிரதமராக உயருவதற்கு இடமளியாத வகையில் தேர்தல் முடிவுகள் அமைந்தாலே போதும் என்பதே திமுகவின் நிலைப்பாடு எனலாம். தப்பித் தவறி 30-35 தொகுதிகளில் அதிமுக வென்றுவிட்டால் தேசிய அரசியலில் ஜெயலலிதாவின் கை ஓங்குவது தவிர்க்க முடியாததாகி விடும்.**

இந்தியாவின் ஆளும் கட்சியை பல முனைகளிலும் தள்ளாடுவதால் எதிர்க்கட்சிகள் குறித்த காலத்துக்கு முன்பே அதாவது 2014ற்கு முன்பே தேர்தல் வரலாம் என்ற எதிர்பார்ப்பில் நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளன. ஆளும் காங்கிரஸ் கட்சியுமே கூட தேர்தல் முனைப்பில் இறங்கியுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா தனது சகல மாநிலக் கிளைகளுக்கும் அடுத்த ஆண்டே (அதாவது 2013ல்) தேர்தலுக்கு தயாராகும்படி உத்தரவிட்டுள்ளது. ஆளும் கூட்டணியிலுள்ள திமுக தமிழ்நாட்டில் விஜயகாந்தை கூட்டணிக்கு இழுக்க முயன்றும் அவரோ பிடிகொடாமல் அதிமுக, திமுக இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்று டாணியில் தொடர்ந்து திமுகவை தாக்கி வருகிறார். எனினும் விஜயகாந்தின் எந்தச் சீண்டலுக்கும் பதிலடி கொடாது திமுக தலைமை தேமுதிகவுடன் ஒருதலைப்பட்ச போல் திருந்தும் போலக் கடைப் பிடித்து வருவது குறிப்பிடத்தக்கது. தேமுதிக - காங்கிரஸ் - திமுக - திருமா கட்சி என பலமான கூட்டணியை கலைஞர் விரும்புகிறார். ஒருவேளை காங்கிரஸ் பிசகினால் தேமுதிக - பிஜேபி - திருமா திமுக என கூட்டணிக் கணக்கை மாற்றிப் போடவும் திமுக தலைமை தயாராகி வருகிறது. ஆனால், திமுகவுடனோ பிஜேபியுடனோ பல்வேறு காரணங்கள் பற்றி கூட்டணி வைக்க விஜயகாந்த் விரும்பவில்லை. அப்படியே விஜயகாந்த் திமுகவை







உதறினால் இருக்கவே இருக்கிறது பாமக. அந்தக் கட்சியை பிஜேபியுடன் சேர்த்து கூட்டணியைக் கட்டியமைக்கலாம் என்பதும் கலைஞர் எண்ணமாகும். மத்திய அரசில் திமுக அமைச்சர்கள் செய்த 2G ஸ்பெக்ட்ரம் ஊழல் வானளவில் 'புகழ்பெற்ற' நிலையில் சிபிஐ என்ற மத்திய புலனாய்வுப் பணியகத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்த சிதம்பரம் இருக்கும் வரை திமுக அரசியல்வாதிகள் அனைக்குமிஞ்சி அந்த வழக்கில் மாட்டிவிடாதபடி சிபிஐ மூலம் காவல்காத்து வந்தார். இப்போது சிதம்பரம் உள்துறை அமைச்சிலிருந்து நிதியமைச்சுக்கு மாற்றப்பட்டு விட்டதால் திமுக பாடு சற்றே தர்மசங்கடமாக மாறியுள்ளது. சிதம்பரம் திமுகவின் மிகநம்பகமான கூட்டாளி என்பது உலகறிந்த விடயமாகும். சிதம்பரத்திற்கும் ஜெயலலிதாவுக்கும் ஜென்மப் பகை என்பதால் அந்தப் பகையிலிருந்து உச்ச பயனடைந்த கட்சி திமுகவே. அரசியலில் நிரந்தரப் பகையாளியுமில்லை நண்பனுமில்லை என்ற தீர்க்கமான விதிக்கு முழு விதிவிலக்கு சிதம்பரம் - ஜெயலலிதா பகை ஆகும். அவ்வகையில் உள்துறை அமைச்சராக சிதம்பரம் மூலம் திமுக பெற்ற நன்மைகள் கொஞ்சநஞ்சமல்ல. திமுகவுக்கே மூன்று மத்திய அமைச்சர் பதவிகள் கிடைத்தபோதும் அவற்றின் வாயிலாக அடைந்த நன்மையை விட சிதம்பரம் மூலம் பின்கதவால் திமுக அனுபவித்த நன்மைகளே அதிகமாகும். 2G ஸ்பெக்ட்ரம் ஊழல் விடயத்தில் திமுகவை இயலுமானவரை சிக்க வைக்காமல் சிதம்பரம் காத்துக் கொண்டார். இந்த நன்மைகளை இழக்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளதால் திமுக கலக்கமடைந்துள்ளது. எனினும், பல தசாப்தங்களாக அரசியல் செய்துவரும் கலைஞர் ஜெயலலிதாவின் புத்திக்கூர்மைக்கு ஈடுகொடுத்து திட்டங்களை செயற்படுத்தி வருகிறார். டெசோ மாநாடு சென்னையில் அதன் பிறகு வெளிநாடுகளில் என ஈழத்தமிழர் விடயத்தில் ஜெயலலிதாவை மடக்க கலைஞர் முயல்வது கண்கூடு. தமிழ் ஈழத்துக்கு ஜெயலலிதா ஆதரவளிக்கமாட்டார்; ஆனால் ஒன்றிணைந்த இலங்கைக்குள் ஈழத் தமிழருக்கு நியாயமான தீர்வு என்பதே ஜெயலலிதாவின் உறுதியான நிலைப்பாடாகும். இதை வைத்து 'ஈழம்' என்ற வார்த்தைஜாலத்தால் ஜெயலலிதாவை திக்குமுக்காட வைப்பதே கலைஞரின் வியூகம். மறுபுறம் ஜெயலலிதாவோ மத்திய அரசில் பங்கு வகிக்கும் திமுக ஈழத்தமிழருக்கு ஒன்றுமே செய்யவில்லை என்பதான கோஷத்தை எடுத்து விட்டுள்ளார். மொத்தத்தில் ஈழம், ஈழத்தமிழர் என்ற வார்த்தைப் போர் சதுரங்கமே இரு தரப்பினரிடையே அரங்கேறி வருகிறது. இதையே எதிர்வரும் லோக்சபா தேர்தலின் தொனிப்பொருளாக்க இருதரப்பும் முயன்று வருகின்றன.

2014 தேர்தலில் திமுக ஒருவேளை தோற்றாலும் கூட அதிமுகவின் தலைவி பிரதமராக உயருவதற்கு இடமளியாத வகையில் தேர்தல் முடிவுகள் அமைந்தாலே போதும் என்பதே திமுகவின் நிலைப்பாடு எனலாம். தப்பித்தவறி 30-35 தொகுதிகளில் அதிமுக வென்றுவிட்டால் தேசிய அரசியலில் ஜெயலலிதாவே கை ஓங்குவது தவிர்க்க முடியாததாகிவிடும். அப்போது சிபிஐ மூலம் திமுக தலைவர்கள் மீது சரமாரியாக வழக்குகளைத் தொடுக்க ஜெயலலிதாவை முயல்வார். எனவே, இவ்வாறான பொறிக்குள் அகப்படுவது போன்ற நிலையில் இருந்து தப்புவதே இன்றைய தேதிக்கு திமுகவின் முன்னுரிமையாக இருக்கும். இதுதவிர 2014 வரை கலைஞர் கருணாநிதியின் உடல்நிலை தாக்குப்பிடிக்குமா அல்லது அவ்வாறு ஏதாவது அவருக்கு உயிராபத்து வந்தால் கட்சி மூன்றாக உடையுமா என்பது வேறுவிடயம். அந்தளவுக்கு இன்னும் கலைஞர் சிந்திக்கத் தலைப்படவில்லை. இப்போதைக்கு 2014 தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றிபெறாத வகையில் தடுத்துவிட்டால் அதுவே போதும். மீதியைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்பது திமுக தலைமையின் எண்ணமாகும். இந்தத் திட்டத்தில் வெல்ல வேண்டுமாயின் வலுவான கூட்டாளி திமுகவுக்கு மிகவும் அவசியமாகிறது. விஜயகாந்த் கட்சி பாட்டாளி மக்கள் கட்சியை விட வலுவாக இருப்பதால் அவரை வளைக்க திமுக முயல்வது இயல்பானதே. பாட்டாளி மக்கள் கட்சி 1990களின் பிற்பகுதியில் வலுவடைய பிரதான காரணம் காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சியாகும். ராஜீவ் மரணம், தேசிய அரசியலில் இனிமேல் காங்கிரஸ் ஆட்சிக்கு வரவே முடியாது என்பதான தோற்றம் முதலிய காரணிகளால் தமிழகத்தில் காங்கிரஸ் வழுவதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் அப்போது இருந்தது. மூப்பனாரின் தனிக் கட்சியான தமிழ் மாநில காங்கிரஸ் ஒருபுறம் பிரிந்தும் சென்றது. தமிழ்நாட்டின் ஜனத்தொகையில் தனிப்பெரும் சாதியினரான வன்னிய சாதியினர் தான் சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், சேலம், தர்மபுரி மாவட்டங்களில் பெரும்பான்மையாக வாழ்பவர்கள். இவர்கள் பாரம்பரியமாக காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்களே ஆவர். காங்கிரஸ் வீழ்ச்சியுறவும் அந்த இடைவெளியில் பாட்டாளி மக்கள் கட்சி வளர்ந்து கொள்ளவும் ஏரியாக இருந்தது. அந்தச் சூட்டோடு ஆளும் பிஜேபி கூட்டணியிலும் பாட்டாளி மக்கள் கட்சி சேர்ந்து மத்திய அமைச்சர் பதவிகளையும் பெற்றுக் கொண்டது. கடந்த 2009 லோக்சபா தேர்தலில் காங்கிரஸ் தோற்குமென ராமதாஸ் போட்ட ஒரே ஒரு தப்புக் கணக்கால் அந்தக் கட்சி இன்று அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ளது. வன்னியர்கள் மீண்டும் காங்கிரஸ், அதிமுக, திமுக என பிரிந்து நிற்கத் தலைப்பட்டுள்ளனர். இதனால் பாமகவை சேர்த்துக் கொள்வதைக் காட்டிலும் விஜயகாந்துடன் அணி சேர்வதுதான் சரியாக இருக்குமென காங்கிரசும் திமுகவும் கருதுகின்றன. ஜெயலலிதா தொடர்ச்சியாக ராமதாஸை அவமானப்படுத்தி வருவதால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி சேர்வது டொக்டரான ராமதாஸுக்கு விருப்பமில்லை. எனவே திமுக அணியில் கிடைத்ததைப் பெற்றுக் கொண்டு கௌரவமாக அடைக்கலம் பெறுவதைத் தவிர வேறு வழி இல்லை. ஆனாலும் இன்னொருபுறம் பிஜேபியுடன் இணைந்து மூன்றாவது அணியை தமிழ்நாட்டில் அமைத்தால் அது தேசிய அளவில் முதலாவது அணியாக அமையலாம் என்ற எண்ணவோட்டமும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவரிடம் உள்ளதாம். அந்த அணியில் வைகோவையும் சேர்க்கலாம் என்ற கருத்தும் உள்ளது. தமிழக வாக்காளர்களைப் பொறுத்தவரை தேசிய தேர்தலான லோக்சபா தேர்தலில் தேசியக்கட்சி ஒன்றுக்கு அல்லது அதன் சார்பான கூட்டணிக் கட்சிக்கே தமிழக வாக்காளர்கள் வாக்களித்து வந்துள்ளனர். விதிவிலக்காக 1996ல் மட்டும் தேசியக் கட்சி எதற்கும் வாக்களியாது முற்றிலும் மாநில அளவில் மட்டும் செல்வாக்குள்ள கட்சிக்கு வெற்றி கிடைத்தது. ஆனால் 1996ல் இருந்த நிலை சற்றே வித்தியாசமானது. அதிமுக தலைவி முதன்முதல் முதலமைச்சரான போது போட்ட ஆட்டம் காரணமாக வழமையை மீறி ஜெயலலிதாவை வீட்டுக்கு அனுப்பும் ஒரே நோக்குடன் வாக்களித்திருந்தனர். தவிரவும் 1996ல் தேசிய கட்சியான காங்கிரசில் பெரு குழப்பம் பங்கேற்று இருக்கவில்லை.


எனவே, பாரதிய ஜனதா - பாட்டாளி மக்கள் கட்சி - மதிமுக என வேறு அணி அமைந்தால் அது வெற்றி பெறவும் வாய்ப்புகள் அதிகமுள்ளன. குறிப்பாக காங்கிரஸ் ஆட்சி மீது நாடளாவிய ரீதியில் மக்கள் வெறுப்பு அதிகமிருப்பதால் பிஜேபி தலைமையிலான அணி தமிழகத்தில் 25 இடங்கள் வரை வெல்லக் கூடும். இங்கே ஜெயலலிதாவின் தப்புக் கணக்கு அவரை பெரும் சிக்கலில் மாட்டிவிடக் கூடும். அதாவது தேசிய தேர்தலில் தேசியக் கட்சி ஒன்றுடன் இணையாது தனது செல்வாக்கை தனித்து நிரூபிக்கும் விஷப் பரீட்சையில் இறங்க ஜெயலலிதா தயாராகி வருகிறார். இதில் அவர் மூக்குடைபட்டால் அவரது அரசியல் எதிர்காலம் - அதுவும் தேசிய அரசியலில் அவரது அபிலாஷைகளுக்கு அடிமேல் அடிவிழுவதன் தொடக்கமாக அது இருக்கக் கூடும். பிஜேபியுடன் ஜெயலலிதா கூட்டணி அமைத்தால் அது அமோகமாக வெற்றிபெறும் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது. ஆனால் இதை ஜெயலலிதா விரும்பவேயில்லை. 1998ல் இவ்வாறு பிஜேபி அணியில் வென்றபின் தான் நினைத்ததை அந்த ஆட்சியில் சாதிக்க முடியவில்லை என்பது அவருக்கு நன்றாக நினைவிருக்கிறது.

எனவே, இன்றைய சூழலில் தமிழகத்தில் பலமான மும்முனைப் போட்டி இருக்கக் கூடுமென்றே தெரிகிறது. அதிமுக தனித்தும் திமுக - தேமுதிக - காங்கிரஸ் ஓரணியிலும் பிஜேபி - பாமக - மதிமுக ஓரணியிலும் இருக்கக் கூடும். அன்றேல் பிஜேபி - பாமக - திமுக ஓரணியிலும் காங்கிரஸ் - தேமுதிக இன்னொரு அணியிலும் அதிமுக தனித்தும் களமிறங்கலாம். இதுதவிர மூன்றாவதொரு சாத்தியப்பாடும் உள்ளது. அதுதான் தேமுதிக - காங்கிரஸ் ஓரணியிலும், திமுக - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஓரணியிலும், அதிமுக தனித்தும், பிஜேபி - பாமக - மதிமுக நான்காவது ஒரு அணியிலும் போட்டியிடக் கூடும். இந்த மூன்று சமன்பாடுகளில் எது வேண்டுமானாலும் நடக்கலாம். தேர்தலுக்கு சட்டப்படி இன்னும் 2 வருட காலப்பகுதி இருப்பதால் இவ்வாறு மாற்றம் ஏற்பட கால அவகாசமும் உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

**-அபிஜித்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகம் கனவா இல்லை நனவா?



நடப்பது கனவு இல்லை! நனவுதான்!! மலையக மக்கள் முன்னணியும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் சேவல் கொடியின் கீழே அணிவகுக்கின்றன. அதாவது கண்டியில் போட்டியிட்ட திரு. மனோகணேசனை தோல்வியடையச் செய்த சக்தியுடன் சேர்ந்து நடக்கும் நிலை உருவாகியுள்ளது. அதேநேரம் கொழும்பு மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இடுப்பை முறித்துப்போட்ட மனோகணேசனை தோளில் கைப்போட்டு இ.தொ.கா. வரவேற்று வருகிறது. இவ்விரு கட்சிகளும் ஐ.தே.க. சந்தையில் பொருள் விரித்து இருந்தமையும் இம்முறை அவர்கள் இடம் தர மறுத்த காரணத்தால் எம்வழி தனிவழி என தோட்டங்களைத் தனிமைப்படுத்தி மீண்டும் இரத்தினபுரியும், கேகாலையும் எரிய எண்ணெய் வார்த்து வருகின்றனர்.

பாராளுமன்றத்திலும், மாகாணசபையிலும் பெரும்பான்மை தலைவர்களிடம் உறவும், நட்பும் கொண்டுள்ள மலையகத் தலைவர்கள், தமது வயிறு வளர்க்க மட்டும் சப்ரகமுவயில் கூடுகின்றனர்.

இங்கே கொழுக்கறி தின்ற நுவரெலியா மாவட்ட பெ. இராதாகிருஸ்ணனும் தமது ஆதரவை இ.தொ.கா கூட்டணிக்கு வழங்கி வருகிறார். தன்னை தலைமை மதிக்கவில்லை எனக்கூறி வெளியேறிய தலைவர் இந்த தலைவர்கள் தோட்டத்தொழிலாளியை மதிக்கிறார்களென எப்படி கூறுவார்? நாளை ஊவா மாகாணத்திலும், மேல் மாகாணத்திலும் தேர்தல்கள் நடந்தால் இவர்களின் கூட்டணி தொடருமா? அதுதான் இல்லவே இல்லை. நாளை ஊவா மாகாணம் மாகாண சபைக்காகத் தயாராகும் போது இதே கூட்டணி இயங்குமா? மத்திய மாகாண சபைத்தேர்தலில் எம்வழி தனிவழி என கூறுவரைப்பார்களா? மலையக மக்கள் முன்னணி இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு மேல்மாகாணத்தில் வெற்றி கிடைக்கப் பிரசாரம் செய்யுமா? இவை எவையும் நடக்கப்போவதுமில்லை! கனவு முடிந்து நனவு நிலைக்கு வருவார்கள்.

சப்ரகமுவ மாகாணச் சபைத் தேர்தலில் எவர் வெல்வார்? அது இ.தொ.கா. மட்டுமே என்பது அரசியல் தந்திரம். ஆயிரம், ஐநூறு என தனிப்பட்ட வேட்பாளர் வாக்குகள் சேர்க்கப்பட்டு ஒருவர் வெற்றிபெற்றதாக அறிவிப்பு வந்தால், அவர் யாரென இ. தொ. கா. தலைமை முடிவு செய்யும். ஊவா மாகாணத்தில் தனித்து போட்டியிட்ட திரு. அ. அரவிந்தகுமார் வெற்றி பெற்றதாக அறிவித்தபோது பல கட்சி வேட்பாளர்கள் கட்சியிலிருந்து வெளியே சென்றார்கள்.

இங்கே அரசாங்கத்தை எதிர்க்கவில்லை! எதிர்க் கட்சியை வெல்ல விடாத கூட்டணி உள்ளது. சம்பள ஒப்பந்தம் செய்து தொழிலாளியை நிர்கதிக்கு ஆளாக்கிய தலைவர் முத்துசிவலிங்கத்தின் துரோகம் பற்றி பேசிய மனோ கணேசன் ஒன்றாகச் சேர்வது வெட்கப்பட வேண்டிய நிலையே! ஏன் ஹெல உறுமய கூறுவதில் தப்பில்லை. யுத்தகாலத்தில் நடந்தவைகளை இந்தியத் தூதுவர்களிடம் நியாயப்படுத்திய மலையகத் தலைவர்களுக்கு எதுவுமே இல்லை என பேரினவாதிகள் கூறுவதிலும் அர்த்தங்கள் காணப்படுவதாகவே தெரிகிறது.



■ நீதிவர்மன்

# காணிகள் கிடைக்குமா?




பாடசாலை காணிகளை பெற்றுத்தாருங்கள் திரு. வடிவேல் சுரேஷிடம் ஐம்பது தமிழ் அதிபர்கள் கூட்டாக விண்ணப்பம் செய்துள்ளனர்.


பண்டாரவளை கல்வி வலயத்திற்கு கடந்த 26.07.2012ம் திகதி விஜயம் செய்த முன்னாள் பிரதி சுகாதார கட்சி அமைச்சரும், பசறைத் தொகுதி சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் ஜனாதிபதி செயலகத்தில் ஊவாமாகாண இணைப்பதிகாரியுமாக செயற்படும் திரு.வடிவேல் சுரேஷ் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

குறிப்பாக வியன்காவெல, தமிழ் வித்தியாலயம் இவ்வருடம் சுமார் 15 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டிடம் ஒன்றை பெறவுள்ளதாகக் கூறப்பட்டது. அது எவ்வாறான கட்டடம் என கற்பனை செய்துபார்க்க வேண்டும். இப்பாடசாலை காணியை சிங்கள கிராமவாசிகள் அபகரித்து வருவதாக புகார்கள் செய்யப்பட்டன. அதனை மாகாண சபையோ, பிரதேச சபையோ கண்டு கொள்ளவில்லை. அதேபோல ஐஸ்லேபி மகா வித்தியாலயம் வெறும் 40பேர்ச் காணியில் காணப்படுவதாக விமர்சனம் செய்யப்பட்டது. இந்தகலை தமிழ் வித்தியாலயம், காகெல்ல தமிழ் வித்தியாலயம் என்பன காணிப் பிரச்சினையால் பல்வேறு தடைகளைச் சந்தித்து வருவதாக பாடசாலை பொறுப்பு ஆசிரியர்கள் உரைகளை நிகழ்த்தியுள்ளார்கள்.

அங்கு பதிலளித்த முன்னாள் அமைச்சர் இன்று பதுளை மாவட்டத்தில் பாராளுமன்றத்தில் எமது பிரதிநிதிகள் இல்லை. மாகாண சபையிலோ உங்கள் பாடசாலை பிரச்சினைகளை முன்வைத்து பேசி தீர்வுகாண, விடயம் அறிந்த தலைவர்கள் இல்லை. அதிபர்களை மதித்து சேர் என மரியாதை செய்யும் வழக்கம் மறைந்துள்ளது, மக்களின் தேவைகள் தெரிந்த பிரதிநிதிகளை இம்மாவட்டம் இழந்துவிட்டதா என வினவப்பட்டார். தமிழ் பாடசாலை அதிபர்களின் கோரிக்கைகளை மேன்மைதங்கிய ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்று பாடசாலை காணிகளுக்கு உறுதி கிடைக்கவும், பாதுகாப்பு வேலி அமைக்கவும் நடவடிக்கைகளை எடுப்பதாகவும் கூறிச் சென்றார்.

# வெப்பத்தைத் தணிக்க சிறந்த வழிகள்





கோடை காலங்களில் வெயிலின் தாக்கத்தை தணிக்க பொதுவாக மோர், குளிர்பானங்களைத் தேடுகின்றோம். இதில் தர்பூசணி, எலுமிச்சை சாறு சர்பத் ஆகியவையும் அடங்கும்.

இதோடு வெள்ளரிக்காய், தண்டுக்கீரை மிகவும் சிறப்பு வாய்ந்தது என அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இந்த வெள்ளரிக்காய் துண்டுகளை ரொட்டியில் வைத்து 'சாண்விச்' போன்று சாப்பிட்டு ஒரு கப் ரீ குடித்தால் உடலுக்கு மிகுந்த குளிர்ச்சியைத் தரும் என்பது இவர்கள் கருத்தாகும்.

தண்டுக் கீரையை சமைத்து சாப்பிடுவதும் உஷ்ணத்தைக் குறைக்கும், பழங்கள், காய்கறிகளில் நீர்ச்சத்து அதிகம் இருப்பதால் இவற்றை கோடை காலத்தில் அதிகம் பயன்படுத்த வேண்டும் என்றும் யோசனை தெரிவிக்கின்றனர்.

ஆனால், ஐஸ்கிரீம் சாப்பிடுவதும், நிறைய தண்ணீர் குடிப்பதும் பயன் தராது என்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பம்பல் பரமசிவம்

## புத்திமான் பலவான்!

என்ன இருந்தாலும் வேலைக்கு வெளிக்கிட்டுப் போறதா வேலையாலை களைச்சு விழுந்து வீட்டுக்கு வாறதும் ஒரு சுகந்தமான நிகழ்வு கண்டியளோ. நான் வேலைக்கு வெளிக்கிடேக்கை மனைவி "கை தும்புத் தடியோடை" நிற்பா. வேலையாலை திரும்பி வரேக்கை விளக்குமாறோடை நிற்பா. தாக்குதல் அதுக்கு இருக்கெண்டு நினையாதை யுங்கோ. அது ஒரு வழக்கம். வீடு கூட்டி வாசலுக்கு வரவும் நான் அவசரப்பட்டு வெளிக்கிட்டு வேலைக்குப் புறப்படவும் சரியாய் இருக்கும். அதுபோலை மாலையில தூர்ப்புத்தா, மாலையில வீடு திரும்பேக்கை முன் முற்றம் எல்லாம் கூட்டி ஒழுங்குபடுத்திக் கொண்டு விளக்குமாற்றுக் கையோடை நிற்பா.

காலை எழுந்தால் ஒரே 'மியூசிக்'. கிணற்றடியில பாத்திரங்களைப் போட்டு கழுவுற சவுண்ட் டமார், டமார் கிறீச்.... கிறீச்.... என்று. சரியான துப்பரவு பாருங்கோ. பாத்திரம் தேய்க்கக் கழுவுற கழுவில நாலு வருசம் பாவிக்கிற பாத்திரங்கள் ரெண்டு வருசத்தில அவுட். ஏ.ஆர்.ரகுமான் இந்த ஒலியளைக் கேட்டால் படங்களில புது மியூசிக் இன்ஸ்ருமென்ற்ஸ் எண்டு கொண்டு போய் இறக்கிப் போடுவார். அப்பிடி ஒரு வித்தியாசமான ஒலிகள் பாத்திரம் தேய்த்துக் கழுவும் போது எழும். விரத காலத்தில கண்டால் இன்னும் கொஞ்சம் ஸ்பெசல் சவுண்ட் 'எபக்ராக' இருக்கும். அதிகாலை துயிலெழும் போதே சட்டி, பானைகள் தாக்குதல்களுக்கு உள்ளாவதும் அவை தாங்க முடியாது. ஙய்....ஙய் எனத் தேய்க்கும் பொழுது எழும் ஒலியும் ஒரு வித்தியாசமான அனுபவம் பாருங்கோ.... எல்லோருக்கும் இந்த அனுபவம் கிடைக்காது.

ஒரு நாள் நானும் மகனும் ஒன்றாய் மேசையில இருந்து சாப்பிட்டுக் கொண்டு இருந்தம். சாப்பிட்டு முடிஞ்ச உடனை அப்புராசா இதையும் ஒருக்கா கழுவு என்று எனது கோப்பையையும் குடுத்தன். "அப்பா நான் நான் சாப்பிட்ட கோப்பையை கழுவுறதில்லை. உங்கட கோப்பையையும் கழுவச் சொல்லிக் கேக்கிறியளோ? இது எந்த வகையில நியாயம்?" என்று கேட்டான். ஒரு பொறுப்புள்ள பிள்ளைதான்.

என்னத்தில தொடங்கினனான்? ஆ! விளக்குமாற்றில முடிக்கிறதைப் பற்றிச் சொல்லிப் போட்டு விட்டிட்டன். வீடு வளவு துப்பரவாக்கி தூசி கொஞ்சம் ஓய்ஞ்ச பிறகு வீட்டுக்குப் போவம் எண்டு சில நாளில் பொழுதுபட்டதுக்குப் பிறகு வீட்டுக்குப் போறனான். பிந்திப் போனால் அவவுக்குக் கோவம் வந்திடும். இப்பிடிக் கஸ்டப்பட்டு நான் வேலை செய்யிறது எனக்குத் தெரியாமற் போய்விடும் என்ற ஆதங்கம் தான் அப்படிக் கோவிக்கிறதுக்குக் காரணம்.

அப்ப வாசலாலை படியேறுறத்துக் கண்டு "என்னப்பா...? லேற்றாய்ப் போச்சுது எண்டு கோவமோ?" எண்டு கேப்பன். "இல்லை" என்று சொல்லி ஒரு வெட்டு வெட்டிக் கொண்டு பாத்திரங்களை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குப் போனால் பிறகென்ன மியூசிக் தான்.

"என்னப்பா கோபிக்கிறாய் போல இருக்கு" என்று திருப்பிக் கேட்டால் பல்லை நெருமியவாறு "இல்லை எண்டு எத்தினை தரம் சொல்லுறன் பேந்தும்" என்று முறைச்சுப் பார்க்கவே விளங்கிவிடும். பேசாமல் அந்த இடத்தை விட்டுப் போயிடுவன்.

அப்படி ஒரு தைரியசாலியான ஆள் நான் கண்டியளோ?

என்ரை தைரியத்தை நீங்கள் தெரிஞ்சு கொள்ள வேணும் எண்டுறதுக்காக ஒரு கதை சொல்லுறன். கதை என்ன? நடந்த சம்பவம். உப்பிடித்தான் நல்லூர் கோயில் திருவிழாக்காலம். அரசடி றோட், முடிவுற பருத்தித்துறை றோட் நல்லூர் பின்பக்கம் பாரதியார் சிலையடியில ஒரு போக்குவரத்துத் தடை. அங்காலை சயிக்கிள் வாகனங்கள் போக ஏலாது. கைலன்றோட்டால போய் அங்காலை போகலாம்.

நான் மகனை சயிக்கிள் பாரில முன்னுக்கும் மகளைக் கரியரில பின்னுக்கும் ஏற்றிக் கொண்டு வந்தனான். அவை பொஸ்கோவில படிச்சுக் கொண்டு இருந்தவை. பள்ளிக்கூடத்துக்குத்தான் ஏற்றிக் கொண்டு வந்தனான்.

அரசடி வாசிகசாலைக்கு முன்னாலை கொஞ்சப்பேர் மறிச்சு "பக்தர்கள் போய் வருகின்றனர். சைக்கிளை இறக்கி உருட்டிக் கொண்டு போங்கோ" என்றார்கள். அவர்களுக்கு பக்தர்களில கரிசனை இல்லை. இதில இறங்கி உருட்டச் சொன்னால் பக்கத்தில இருக்கிற தங்கட சயிக்கிள் பார்க்கில சயிக்கிளை நிற்பாட்டி விட்டு கோவிலுக்குப் போறவர்கள் போவார்கள் என்பது அவர்களது எதிர்பார்ப்பு.

நான் "பிள்ளையளுக்குச் சோதினை லேற்றாய்ப் போச்சு. இறங்கி ஏறுறதும் கஸ்டம்" என்று சயிக்கிளை நிறுத்தி சயிக்கிளில் இருந்தவாறே கூறினேன்.

தூரத்தில் பார்த்துக் கொண்டிருந்த ஒரு மீசைக்காரத் தடியாசாமி ஓடிவந்து காலரில் பிடித்து உலுக்கியவாறு "எல்லோரும் இறங்கித் தான் போக வேணும்" என்று தனது வீரத்தைக் காட்டினார்.

மெதுவாக பின்னாலிருந்த மகளைச் சயிக்கிளால் இறக்கினேன். அதை இறக்கினால்தான் நான் மெதுவாகக் காலைத் தூக்கி சயிக்கிளால் இறங்கலாம். இந்தப்



பரிதாபத்தைப் பார்த்து அந்த வீரன் எங்களைச் சயிக்கிளில் ஏறி ஓடிச் செல்ல அனுமதிப்பார் என்று எதிர்பார்த்தேன். ம்கும்.

"ம்.. ம்..பென்று இறங்கும். இங்கை உம்மோடை விளக்கேட மற்றவங்கள் எல்லாம் சயிக்கிளை ஓடிய போறாங்கள்..." என்று ஆவேசமாகக் காலரைப் பிடித்து உலுக்கினார். மௌனமென்று மகனையும் இறக்கிவிட்டு சயிக்கிளை உருட்டிச் சென்றேன். கைலன் வீதியால் திரும்பி மீண்டும் பிள்ளைகளைச் சயிக்கிளில் ஏற்றினேன். கைலன் றோட்டால் சயிக்கிளில் செல்லும் போது மகள் கேட்டாள் "ஏனப்பா நீங்கள் சயிக்கிளை நிப்பாட்டினனீங்கள்? மறிக்க மறிக்க ஓடியிருக்க வேணும்" என்றாள்.

மகன் கேட்டான் "ஏன் அப்பா அவர் சைக்கிளால விழுத்துற மாதிரி காண்டில அசைக்க ஏன் அவருக்கு அடிக்காமல் விட்டனீங்கள்" என்று கேட்டான்.

வீட்டில என்ரை சண்டித்தனத்தைக் கண்ட பிள்ளைகள் இப்படிக் கேட்டதில் வியப்பில்லை.

"பள்ளிக்கூடம் போற நேரம் சும்மா நடுரோட்டில சண்டித்தனம் செய்து கொண்டிருக்கிறது சரியில்லை. 'மைன்ற்ரான' ஆக்கள் அப்பிடி அடிபாட்டுக்குப் போகமாட்டினம். இல்லையோடி அப்பா விடுவனே?" என்று மீசையை ஒருக்கா முறுக்கினேன். எனினும் என்ரை பதிலில் பிள்ளையளுக்குத் திருப்தி இல்லை.

"அப்பா தனிய வரேக்கை இப்பிடிச் செய்திருந்தால், மறிச்சிருந்தால் நிலமையே வேறைதான். ஹா.... ஹா....." என்றேன்.

"பேசாமல் சயிக்கிளை உழக்குங்கோ அப்பா" என்றாள் மகள்.

அடுத்த நாளும் அதே பள்ளிக்கூடம், அதே பாதை, அதே சயிக்கிள், அதே பிள்ளைகள், அதே இடம். அங்கும் இங்கும் பார்த்தேன் நேற்றையவர் மீசையர் தென்படுகிறாரா என்று. அவரைக் காணவேயில்லை. சந்தோசமாக இருந்தது.

திடீரென்று மகள் "அப்பா அப்பா சயிக்கிளை நிப்பாட்டுங்கோ" என்று அவசரப்படுத்தினாள்.

நிறுத்தி "என்னம்மா?" என்றேன். "சயிக்கிளைக் கொஞ்சம் பின்னுக்கு எடுங்கோ அப்பா அங்கை நேற்று எங்களை வெருட்டின மீசைக்கார மாமா இருக்கிறார்" மகள் காட்டிய திசையில் பார்த்தேன்.

சயிக்கிள் பார்க் எனின்றள் முன் தினம் எம்மை மிரட்டிய ஆசாமி ஈசிச் சேரில் படுத்திருந்தார். அவரின் முகம் வீங்கியிருந்தது. ஒரிரு பிளாஸ்டரும் முகத்தில் காணப்பட்டது. கை பத்துப் போடப்பட்டு கழுத்தில் ஒரு துணி போடப்பட்டு அதில் தொங்க விடப்பட்டிருந்தது. "என்ன அப்பா நடந்தது?" என்று மகள் கேட்டாள். "நேற்று எங்களுக்குக் காட்டிய சண்டித்தனத்தை வேறு ஆருக்கோ காட்டியிருக்கிறார் போல இருக்கு. ஆட்கள் என்ன பேயரே? விட்டிருக்கிறாங்கள் அடி. உடைஞ்சிருக்கு எலும்பு... படுத்திருக்கிறார் கட்டிலிலை" என்றேன்.

"நீங்களும் இருக்கிறியளே அப்பா?" என்று சலித்துக் கொண்டாள் மகள்.

"மகள்! நேற்று நாங்கள் பயந்தது மாதிரி இறங்கிப் போனதாகத் தான் அவருக்கு உசார் வந்திருக்கு. நாங்கள் எதிர்த்துக் கதைச்சு எச்சரிக்கை செய்திருந்தால் அவர் அடங்கிப் போயிருப்பார். இன்றைக்கு அடிவாங்கியிருக்க மாட்டார். எப்பிடி அப்பாவின்ரை ஐடியா? அதுதானம்மா சொல்லுறது 'புத்திமான் பலவான்' எண்டு" எனக் கூறி முடித்தேன்.

முதல் நாள் நான் முரண்டாய் நின்று ஏதாவது பிரச்சினைப்பட்டிருந்தால் அந்த மீசைக்காரன் மாதிரி என்ரை கையைத் தொங்கப் போட்டுக் கொண்டு பிளாஸ்ரரோட மறுநாள் பிள்ளையள் பள்ளிக்கூடம் இல்லாமல் இருந்திருக்குங்கள் என்ற விசயத்தை நான் பிள்ளையளுக்குச் சொல்லேல்லை.

## தலையில் விழுந்த பழம்

நமது நாட்டு ஆலமரம் போல துருக்கி நாட்டில் மல்பெரி என்ற ஒரு மரம் உண்டு. நீண்ட கிளைகளுடன் உயர்ந்து அடர்ந்து செழித்து அந்த மரம் காணப்படும். ஆனால் அந்த மரத்தின் பழமோ சிறிய கோலிக் குண்டு அளவுக்கு மிகச் சிறியதாக இருக்கும்.

ஒருநாள் முல்லா அந்த மல்பெரி மரத்தின் நிழலில் அமர்ந்து களைப் பாறிக் கொண்டிருந்தார். அப்போது வழிப்போக்கனான ஓர் இளைஞன் அங்கே வந்து சேர்ந்தான். நீண்ட தூரத்திலிருந்து வெயிலில் அவன் நடந்து வந்திருக்க வேண்டும். நிழலைக் கண்டதும் அவனுக்குப் பேரானந்தமாய் இருந்தது.

மரத்திலிருந்த வேரின் மீது தலையை வைத்துப் படுத்துச் சற்று நேரம் களைப்பாறினான்.

அவன் பார்வை முல்லாவின் மீது விழுந்தது. பிறகு அண்ணாந்து மரத்தைப் பார்த்தான். மரத்தின் சின்னஞ்சிறு பழங்கள் அவன் கண்களில் பட்டன.

அவன் உரக்கச் சிரித்தான்.

முல்லா அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு "என்ன சிரிக்கிறீர்?" என்று கேட்டார்.

"கடவுளின் முட்டாள்தனத்தை எண்ணிச் சிரிக்கிறேன்" என்றான் அந்த வழிப்போக்கன்.

"கடவுள் அப்படி என்ன முட்டாள்தனம் செய்து விட்டார்"



என்று முல்லா ஆச்சரியத்துடன் கேட்டார்.

"இந்த மரத்தைப் பாருங்கள் ஒரு பெரிய கூடாரத்தைப்போல எவ்வளவு பெரிதாக இருக்கிறது. இந்த மரத்தின் பழங்களைப் பாருங்கள் எவ்வளவு சிறியனவாக நுண்ணியனவாக உள்ளன. இவ்வளவு பெரிய மரத்தின் பழங்கள் எவ்வளவு பெரியனவாக இருக்கவேண்டும் என்று கூட தீர்மானிக்க முடியாத கடவுளை முட்டாள் என்று கூறுவதில் என்ன தவறு இருக்க முடியும்?" என்றான் வழிப்போக்கன்.

முல்லா பதில் ஒன்றும் பேசாமல் வாயை மூடிக் கொண்டார்.

சற்று நேரம் கழித்து காற்று பலமாக அடித்தது. மரத்தின் கிளைகள் வேகமாக அசைந்தாடிக் கிளைகளில் இருந்த சின்னஞ்சிறு பழங்கள் பொலபொலவெனக் கொட்டின.

சில பழங்கள் வழிப்போக்கனின் தலையிலும் விழுந்தன.

முல்லா அவனைப் பார்த்து "நண்பரே உமது தலைமீது ஏராளமான பழங்கள் விழுந்தன போலிருக்கிறதே!" என்று கேட்டார்.

"ஆமாம் காற்றில் அவை உதிர்ந்துவிட்டன" என்றான் வழிப்போக்கன்.

"கடவுள் முட்டாளாக இல்லாமலிருந்து புத்திசாலியாக இருந்து பெரிய பாறைக்கல்லைப் போன்ற பெரிய பழங்களை இந்த மரத்திலே உற்பத்தி செய்திருந்தாரானால் என்ன ஆகியிருக்கும். உமது தலை நொறுங்கிப் போயிருக்குமல்லவா?" என்று கேட்டார் முல்லா.

வழிப்போக்கன் யோசித்தான்.

"நண்பரே, கடவுள் சிருஷ்டியில் அனாவசியமானதும் அர்த்தமற்றதும் எதுவும் இல்லை. எதையும் ஒரு காரணத்தோடுதான் இறைவன் சிருஷ்டித்திருக்கிறார்"

"இவ்வளவு விசாலமான மரக்கிளைகளின் நிழலில் நிறைய மனிதர்களும் விலங்குகளும் நிழலுக்காக வந்து அண்டும் என்று கடவுளுக்குத் தெரியும். இதனால்தான் கடவுள் நிழல் தரும் பெரிய மரத்தின் பழங்களை மிகவும் சிறியனவாகப் படைத்திருக்கிறார்" என்றார் முல்லா.

"ஐயா தாங்கள் யார் என்று தெரியவில்லையே ஒரு மகான் போல் பேசுகிறீர்களே" என்று பயபக்தியுடன் கேட்டான் வழிப்போக்கன்.

"கடவுள் மகான்களை சிருஷ்டிப்பதில்லை மற்ற உயிர்களைப் போல மனிதர்களையும் சிருஷ்டிக்கிறார். நான் உம்மைப்போல ஒரு மனிதன்தான்" என்றார் முல்லா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பித்தன் பதில்கள்

# சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் பெண்கள் குறித்து...





**செல்வி.அ.சசிகலா, மட்டக்களப்பு**
கே: பித்தரே; நீர் கஷ்டப்படுபவர்களுக்கு உதவும் மனம் கொண்டவரா? அல்லது கஞ்சத்தனம் கொண்டவரா?
ப: கஷ்டப்படுவோருக்கு உதவ வேண்டும் என்ற நல்ல மனது எனக்கு இல்லாமலில்லை. ஆனாலும் என்ன செய்வது? யாராவது எனக்கு உதவ மாட்டார்களா என்ற நிலையில் தான் இருக்கிறேனே?

**வே.கணபதிப்பிள்ளை, கோண்டாவில்**
கே: மன்னிக்கும் பண்பு குறித்து என்ன நினைக்கிறீர்?
ப: தவறுகள் குற்றங்களாகக் கொள்ளப்பட முடியாதவை. பிழையெனப் புரிந்து கொள்ளாது செய்யப்படுபவை தவறுகள்; தெரிந்து கொண்டே செய்வது குற்றம். தவறுகள் மன்னிக்கப்படலாம். குற்றத்திற்குத் தண்டனை அவசியமே.



**பு.மதிவதனா, கண்டி**
கே: பித்தரே, எல்லோருக்கும் போலவே திருமணமான புதிதில் உமது வாழ்க்கை கலகலப்பாகத்தான் இருந்திருக்கும். இப்போது எப்படி?
ப: ஒரே கைகலப்பாகத் தான் போய்க் கொண்டிருக்கிறது.

**மு.திருச்செல்வம், வவுனியா**
கே: பத்திரிகாதர்மம் என்பதன் வரைவிலக்கணம் என்ன பித்தரே?
ப: உண்மை; அஞ்சாமை; நடுநிலை நின்று செயற்படல், இவற்றைக் கடைப்பிடிப்பதே பத்திரிகாதர்மம். அப்போது தான் பத்திரிகை மதிப்பை எட்ட இயலும்.

**வை.பிரியந்தினி, கிளிநொச்சி**
கே: எவ்வளவுதான் உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்தாலும் பலன் எப்போதும் பூஜ்யமாகத் தானே இருக்கிறது. இது ஏன் பித்தரே.
ப: அதனால் தான் உண்மையாகவும் நேர்மையாகவும் நடக்க நம்மில் பலரும் தயக்கம் காட்டுகிறார்களோ?



**எஸ்.விவேகானந்தன், மட்டக்களப்பு**
கே: சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் பெண்கள் குறித்து என்ன நினைக்கிறீர்?
ப: குடும்பத்தில் ஒரு பெண் சிக்கனமாக நடந்து கொள்வதால் குடும்பத் தலைவனுக்குச் சிரமம் ஏற்படாது குடும்பத்தைச் சிறக்கச் செய்கிறாள். இதைத் தவறாகப் புரிந்து கொண்டு இன்று பல பெண்கள் தாம் அணியும் ஆடை விடயத்திலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க ஆரம்பித்து விட்டார்களே. அதுதான் பரிதாபம்.


**தி.இந்திரா, மன்னார்**
கே: நாட்டில் இனப் பிரச்சினைக்கு சகலரும் ஏற்கத் தக்க தீர்வு காணப்பட்டு விட்டதாக கனவு கண்டேன். இது நற்கால அறிகுறி பித்தரே?
ப: கனவுகள் ஒருபோதும் பலிப்பதில்லை என்று எத்தனை முறைதான் திரும்பத் திரும்பக் கூறினாலும் தாம் கண்ட கனவுகள் குறித்து அச்சப்படுவோருக்கு இதுவோர் எடுத்துக் காட்டு; இனப்பிரச்சினையாவது இப்போதைக்குத் தீர்வு காணப்படுவதாவது... உமது கனவை பகற்கனவு வரிசையில் சேர்த்துக் கொள்ளும். ஏனென்றால் பகற்கனவு என்றுமே பலிப்பதில்லையாம்.

**மு.அகிலன், யாழ்ப்பாணம்.**
கே: ஒருதரம் சூடு கண்ட பூனை ஒருபோதுமே அடுப்பங்கரை நாடாதாமே? உண்மையா பித்தரே?
ப: எதை மனதில் வைத்துக் கொண்டு இந்தக் கேள்வியைப் போடுகிறீரோ நானறியேன். ஆனால் இரண்டாம் தடவையும் திருமணம் செய்து கொள்பவர்கள் எண்ணிக்கையில் இருப்பதைப் பார்க்கும் போது உமது கூற்றுப் பொருந்தும் போல் தெரியவில்லையே?

**எம்.பிரேமா, கொழும்பு-06**
கே: நவீன விஞ்ஞான யுகத்தில் பூகம்பம் ஏற்படப் போவதை முற்கூட்டியே உணர்ந்து அதைத் தடுத்து நிறுத்த மனிதனால் இயலுமா பித்தரே?
ப: ஒரு மரத்திலுள்ள பெரிய கிளையொன்று திடீரென முறிந்து விழுகிறது. இந்தச் சின்ன விசயத்தையே முற்கூட்டியே உணர முடியாத நிலையில், நிகழப்போகும் பூகம்பத்தை முற்கூட்டியே உணர்வதாவது; தடுத்து நிறுத்துவதாவது. வேண்டுமானால் குடும்பத்துள் ஏற்படப் போகும் பூகம்பத்தை முற்கூட்டியே உணர்ந்து தகுந்த முற்பாதுகாப்புத் தேடிக் கொள்ளலாம் சமயோசிதம் இருக்குமானால்.

**சிவநேசன் இராதாகிருஷ்ணன், பதுளை.**
கே: எனது நண்பனொருவன் எப்போதுமே அளவுக்கு அதிகமாகச் சிரிக்கும் இயல்பு கொண்டவனாய் இருக்கிறான். இதனைத் தடுத்து நிறுத்த வழி என்ன பித்தரே?
ப: அவனைத் திருமண பந்தத்தில் இணைத்து விடுங்களேன். ஆக மிஞ்சி ஒரு ஆறு மாதமோ, ஒரு வருடமோ ஆரம்பத்தில் சிரித்துப் பேசிக் கலகலப்பாய் இருப்பான். பின்னால் சிரிப்பின் ரேகையையே அவன் முகத்தில் காண இயலாது போய்விடும் கவலை விடும்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 536



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### மேலிருந்து கீழ்

01. கொடுமையானது அல்லது அநீதியான செயல்
02. நிலவாற்றல்
03. புண்ணிய இடம்
04. நீர் நிலை
05. நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம்.
07. மயில் அகவும்; சேவல்...?
09. ரசிக்கும் தன்மை
11. மரத்தில் சிற்பம் செதுக்குபவர்
13. தாய், தந்தை, பிள்ளைகள் சேர்ந்த அலகு
15. சில அல்ல
16. கிடைத்தற்கரிய என்பதைக் குறிக்கும்
17. நெருப்பில்லாமல் இது வராதாமே
18. பசு-எருமை ஆகியவற்றின் குட்டி
19. பெருக்கல்குறி
21. வாழ்

### இடமிருந்து வலம்

01. கரந்துறைதல்
06. ஒன்றுக்கு மேற்பட்ட ரக
08. கோள்
10. மொசவில் இருக்கும்
12. சோற்றோடு சேர்த்து சாப்பிடலாம்
13. ஓர் இராசி
14. வீடு
15. துயில் கொள்
16. அடைட்டு
19. மரம
20. எதிரி
22. தொடக்கம்
23. சிறிய

## சொற்சிலம்பம் போட்டி இல. 536

சொற்சிலம்பம் 536 போட்டிக்கான விடைகளை அனுப்ப வேண்டிய இறுதி தினம் 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் 12 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றியாளர்களின் பெயர்கள் செப்டெம்பர் 26 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசு ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். சரி விடைகளைச் சரியாக எழுதியோர் பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

அனுப்பவேண்டிய முகவரி:
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 533 விடைகள்

**மேலிருந்து கீழ்**
01.பாதகம், 02.தூவணி, 03.வைகுண்டம், 04.ரணம், 05.எலை, 08.தூரமகம், 09.தம், 11.மலைமலை, 12.விருது, 13.இடுக்கண், 14.தராக்கு, 15.பரு, 17.குதம், 18.உபரி, 19.குன்று, 21.சரி.

**இடமிருந்து வலம்**
01.பாதுகாப்பு, 06.எது, 07.துணிவு, 09.மைதானம், 10.துகளம், 12.விசுவாசம், 13.இலம், 14.பரு, 15.பதி, 16.முறுகு, 18.உருக்கு, 20.தசமி, 22.கண்டி, 23.குடும்பி, 24.தண்டு.

## போட்டி இல. 536 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — செ.விக்ரர் ஜெயபாலன், பறுனாந்து, சென்மேரிஸ் வீதி 06 ம் வட்டாரம் பேசாலை.

**2 ஆம் பரிசு** — செல்வி.க.ஷண்முகஹரி, இல.67 செட்டித்தெரு, நல்லூர். யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** — ஜெ.யோகேஸ்வரி, சமகிமாவத்தை, பேராதனை வீதி கண்டி.

## பாராட்டுப் பெறுவோர்

(1) கனகசபை சிவபாலசிங்கம்,
இல-40/2 கலைமகள் வீதி,
அரியாலை யாழ்ப்பாணம்.
(2) எஸ்.மோகனதாசன்,
சஞ்ஜீவன் ரயர் வேக்ஸ், திருமுறிகண்டி.
(3) ரி.செல்வதுரை,
இல.11-5/1 சென் லோறன்ஸ் வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
(4) ம.தில்லைநாதர்,
சிறுப்பிட்டி, நீர்வேலி.
(5) திருமதி.வா.ஜெயசந்திரலானி,
இல.18 ஐயனார் வீதி,
வண். மேற்கு வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
(6) செல்வன்.ந.பானுஜன்,
மே/பா திருமதி சத்தியவதி(எஸ்.எம்.ஓ)
விவசாய திணைக்களம்,
கிளிநொச்சி.
(7) வி.காஞ்சனாதேவி,
இல-341/17 சுதும்பொல, கண்டி.
(8) நிரோஜன் சஞ்சீபா,
ஒழுவில் வீதி, கீரிமலை/காங்கேசன்துறை.
(9) செ.சரோஜா,
சில்லாலை, வல்வெட்டித்துறை.
(10) பா.நாகேஸ்வரி
ஞானவைரவ கோயில் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிக்பாஷ் தொடரில் லசித் மலிங்க

அவுஸ்திரேலியாவின் டுவெண்டி டுவெண்டி தொடராக பிக்பாஷ் தொடரில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க சேர்க்கப்பட்டுள்ளார். அவர் மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணிக்காக விளையாடவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணியின் தலைவராக ஷேன் வோண் நியமிக்கப்பட்டுள்ளதோடு, அந்த அணியிலேயே லசித் மலிங்க சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த பருவகாலத்தில் மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணியின் தலைவராகச் செயற்பட்ட போதிலும், கடந்த மாதத்தில் அப்பதவியிலிருந்து விலகியிருந்தார்.

2011ஆம் ஆண்டு ஐ.பி.எல்லின் பின்னர் ஐ.பி.எல். போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற ஷேன் வோண், 2011ஆம் ஆண்டு பிக்பாஷ் லீக் தொடரில் பங்குபற்றியிருந்தார். அதன் பின்னர் இதுவரை எந்தப் போட்டிகளிலும் பங்குபற்றியிருக்காத நிலையிலும் அவருக்கு அணித்தலைமை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை லசித் மலிங்கவின் ஒப்பந்தம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணியின் பிரதம தேர்வாளர் இயன் சப்பல், கடந்த சில வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் லசித் மலிங்கவே முதல் நிலைப் பந்துவீச்சாளராகக் காணப்படுகிறார் எனத் தெரிவித்ததோடு, அவரை ஒப்பந்தம் செய்வதில் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

விக்கெட்டுக்களைக் கைப்பற்றுதல், இறுதி நேர ஓவர்களில் ஓட்டங்களைக் கட்டுப்படுத்துதல் ஆகிய இரண்டு பணிகளையும் மிகச்சிறப்பாகச் செய்யக்கூடிய ஒருவர் எனத் தெரிவித்த இயன் சப்பல், லசித் மலிங்க எப்போதும் அவுஸ்திரேலியாவில் மிகப்பிரபலமான ஒரு வீரர் எனவும், விக்டோரியாவில் அதிகளவில் இலங்கையர்கள் வசிக்கும் நிலையில் அவர் மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணிக்காகப் போட்டிகளில் பங்குபற்றுவது மிகச்சிறப்பானதாக அமையும் எனவும் தெரிவித்தார்.

## நாவலப்பிட்டி அப்கன்றி லயன்ஸ் கழகம் வெற்றி

நாவலப்பிட்டி ஜயதிலக்க விளையாட்டு இடம் பெற்ற டயலொக் லீக் ரக்பி சுற்றுப்போட்டியில் நாவலப்பிட்டி அப்கன்றி லயன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் கடற்படை விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இடம்பெற்ற போட்டியொன்றில் நாவலப்பிட்டி அப்கன்றி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது. 46க்கு 38 என்ற புள்ளி அடிப்படையில் நாவலப்பிட்டி அப்கன்றி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ள கடற்படை விளையாட்டுக்கழக ரக்பி அணியில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உட்பட ஜனாதிபதியின் ஏனைய இரண்டு புதல்வர்களும் விளையாடியமை குறிப்பிடத்தக்கது.



## சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் சம்பியன் பட்டம் வென்றார் பெடரர்

சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடரின் இறுதிப்போட்டியில் உலகின் முதல்நிலை வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், இரண்டாம்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சுடன் மோதினார். இப்போட்டியின் முதல் செட்டை 6-0 என எளிதாகக் கைப்பற்றிய பெடரர், இரண்டாவது செட்டை கடுமையாகப் போராடி 7-6 (9/7) என்ற கணக்கில் கைப்பற்றினார். இதன்மூலம் 6-0, 7-6 என்ற செட் கணக்கில் ஜோகோவிச்சை வீழ்த்தி பெடரர் சம்பியன் பட்டம் வென்றார்.

31 வயதான பெடரர் சின்சினாட்டி ஓபன் சம்பியன் பட்டத்தை இத்துடன் 5 முறை வென்றுள்ளார். மேலும் ஒட்டு மொத்தமாக அவர் வென்றுள்ள 76-வது சர்வதேச பட்டம் இதுவாகும். இந்த வெற்றியால் பெடரர் 292-வது வாரமாக தற்போது முதலிடத்தில் நீடிக்கிறார்.



மேலும், அடுத்து நடக்க இருக்கும் அமெரிக்க ஓபன் தொடரிலும் அவர் முதலிடத்தில் நீடிப்பார். இந்த வெற்றியால் கிடத்துள்ள உற்சாகத்தால் பெடரர் 6 -வது முறையாக அமெரிக்க ஓபன் பட்டத்தை வெல்லும் முனைப்பில் உள்ளார்.

## இங்கிலாந்து அணியில் கெவின் பீட்டர்சனுக்கு இடமில்லை

அடுத்த மாதம் இல்ங்கையில் நடக்க இருக்கும் 20 ஓவர் உலககோப்பை கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் இங்கிலாந்து அணி லண்டனில் அறிவிக்கப்பட்டுள்ளது. 15 வீரர்கள் கொண்ட இங்கிலாந்து அணியில் அதிரடி ஓல்ரவுண்டரான பீட்டர்சன் சேர்க்கப்படவில்லை. கடந்த 2010-ம் ஆண்டு 20 ஓவர் உலகக் கோப்பையை இங்கிலாந்து அணி கைப்பற்ற முக்கியக் காரணமாக இருந்த பீட்டர்சன், அப்போது தொடர்நாயகன் விருது பெற்றிருந்தார்.



கடந்த வாரம், இங்கிலாந்து அணியின் டெஸ்ட் கேப்டனான ஸ்டிராசை விமர்சித்து, தென்னாப்பிரிக்க வீரர்களுக்கு பீட்டர்சன் அனுப்பிய எஸ்.எம்.எஸ் சர்ச்சையைக் கிளப்பியது. இவ்விவகாரத்தால் இங்கிலாந்து வீரர்களிடையே ஒற்றுமையின்மை நிலவியது. அதனைத் தொடர்ந்து நடந்த தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான 3-வது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி, நேற்று 51 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இத்தோல்வியால் டெஸ்ட் தொடரை இழந்த இங்கிலாந்து அணி, டெஸ்ட் அரங்கில் தான் வகித்துவந்த முதலிடத்தை தென்னாப்பிரிக்காவிடம் இழந்தது.

இச்சம்பவங்களால் ஆத்திரமடைந்த இங்கிலாந்து தேர்வுக்குழுவினர் தற்போது உலகக்கோப்பைக்கான அணியில் பீட்டர்சனைப் புறக்கணித்துள்ளனர். தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் 20 ஓவர் தொடர்களில் ஆடும் இங்கிலாந்து அணியிலும் பீட்டர்சன் சேர்க்கப்படவில்லை. ஒருநாள் போட்டிகளிலிருந்து ஏற்கனவே ஓய்வு பெற்றுவிட்ட பீட்டர்சன், 20 ஓவர் உலகக்கோப்பையில் ஆடும் ஆர்வத்தில்தான் சமீபத்தில் தனது ஓய்வு அறிவிப்பை திரும்பப் பெற்றுக்கொண்டு, சர்வதேச போட்டிகளுக்கு மீண்டும் திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகக்கோப்பையில் ஆடும் 15 வீரர்கள் கொண்ட இங்கிலாந்து அணிக்கு ஸ்டுவர்ட் பிராட் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த முறை இங்கிலாந்து அணி உலகக்கோப்பையை வென்றபோது, அந்த அணியில் இடம்பெற்றிருந்த 8 வீரர்கள் தற்போதைய அணியிலும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். எனினும் 20 ஓவர் போட்டிகளில் இங்கிலாந்தின் வெற்றிக்கு ஆணிவேராக விளங்கிவந்த பீட்டர்சன் உலகக்கோப்பைக்கான அணியில் சேர்க்கப்படாததால் அந்த அணியின் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படலாம் என கிரிக்கெட் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

15 வீரர்கள் கொண்ட இங்கிலாந்து அணி விவரம் வருமாறு:

பிராட் (கேப்டன்), பேர்ஸ்டோ, ரவி போபரா, பிரெஸ்னன், பிரிக்ஸ், பட்லர், டெர்ன்பா, பின், ஹேல்ஸ், கீஸ்வெட்டர், லம்ப், மோர்கன், சமித் படேல், ஸ்வான் மற்றும் லூக் ரைட்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க உளவுத் துறை எச்சரிக்கை




எப்.பி.ஐ. என (FBI Federal Bureau of Investigation) அழைக்கப்படும் அமெரிக்க உளவுத்துறை, அண்மையில் பரவி வரும் வைரஸ் குறித்த எச்சரிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. இந்த வைரஸ் பாதித்த கம்ப்யூட்டர் இயக்கம் முடக்கப்பட்டு, திரைக்காட்சி நிறுத்தப்பட்டு நீங்கள் தவறான தளத்தைப் பார்க்க முயற்சிக்கிறீர்கள். எனவே உங்கள் கம்ப்யூட்டர் இயக்கம் முடக்கப்பட்டுள்ளது. இது நீக்கப்பட வேண்டுமானால், குறிப்பிட்ட கட்டணத்தை அபராதமாகச் செலுத்த வேண்டும்" என அறிவிப்பும், அபராதத் தொகை செலுத்துவதற்கான லிங்க்கும் தரப்படுகிறது. இது போல நிகழ்வுகள் அமெரிக்க நாட்டில் மட்டுமின்றி, பன்னாட்டளவிலும் ஏற்பட்டுள்ளன.

இது குறித்து எப்.பி.ஐ. அமைப்பின் இன்டர்நெட் குற்றப் பிரிவு அதிகாரி டோன்னா கிரிகோரி வெளியிட்டுள்ள அறிக்கையில், இது Reveton ransomware என்னும் வைரஸால் ஏற்படுகிறது. பலர் எங்களுக்கு இது குறித்து புகார் அனுப்பி உள்ளனர். பலர் அபராதத் தொகையையும் செலுத்தி உள்ளனர். இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையினை எப்.பி.ஐ. எடுக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். இந்த வைரஸ் பாதிப்பிலிருந்து வெளியேற இதுவரை எந்த ஆண்ட்டி வைரஸ் தொகுப்பிற்கும் அப்டேட் பைல் வெளியிடப்படவில்லை. கம்ப்யூட்டரைப் பயன்படுத்தும் சாதாரணப் பயனாளரால், இந்த வைரஸ் தாக்குதலில் இருந்து மீள முடியவில்லை. விரைவில் தீர்வு கிடைக்கலாம்.

# ஒரு கோடி சாம்சங் காலக்ஸி எஸ் 3 விற்பனை

ஸ்மார்ட் போன் விற்பனையில் சாம்சங் காலக்ஸி எஸ் 3 மற்றவற்றைக் காட்டிலும் மிக வேகமாக விற்பனை செய்து வரப்படுகிறது என்பதைப் பற்றி யாருக்கேனும் சந்தேகம் இருந்தால், அதனை அவர்கள் நீக்கிவிடலாம். அண்மையில் வெளியான ஸ்மார்ட் போன் விற்பனை குறித்த தகவல்கள் இதனை உறுதி செய்துள்ளன.

சாம்சங் நிறுவனத்திற்கெதிரான அப்பிள் நிறுவனத்தின் வழக்கு, அப்பிள் நிறுவனத்தின் அடுத்த புதிய ஐபோன் வர இருப்பது குறித்த தகவல் என எத்தனை இடைஞ்சல்கள் இருந்தாலும், சாம்சங் காலக்ஸி எஸ் 3 தன் விற்பனையில் புதிய இலக்குகளை எட்டியுள்ளது.



நாளொன்றுக்கு ஏறத்தாழ ஒரு லட்சத்து 90 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் காலக்ஸி எஸ் 3 விற்பனையாகிறது. மே29ல் அறிமுகமாகி, பன்னாட்டளவில் இரண்டே மாதங்களில், ஒரு கோடி என்ற இலக்கினை எளிதாக அடைந்து தொடர்ந்து இதன் விற்பனை உயர்ந்து வருகிறது. அடுத்த அப்பிள் ஐ போன் வர குறைந்தது ஒரு மாதம் ஆகும் என்பதால், இதன் விற்பனை பல புதிய இலக்குகளை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த எண்ணிக்கையை அடைய சாம்சங் கேலக்ஸி எஸ்2 ஸ்மார்ட் போனுக்கு ஐந்து மாதங்கள் ஆயின. சாம்சங் நிறுவனத்தின் மொபைல் கம்யூனிகேஷன் பிரிவின் தலைவர் அண்மையில் இதனைத் தெரிவித்தார்.

# முப்பரிமாண காட்சிகளை ஐபோனில் எடுத்து மகிழ ஓர் புதிய சாதனம் அறிமுகம்



பிரபல கைப்பேசி வகைகளுள் ஒன்றான ஐபோன்களில் காணப்படும் கேமரா மூலம் இதுவரை காலமும் இருபரிமாணமுடைய புகைப்படங்களையும், வீடியோக்களையுமே எடுக்கக்கூடியதாக காணப்பட்டது. எனினும் தற்போது அறிமுகமாக்கப்பட்டுள்ள ஐபோன்களில் இணைத்துப் பயன்படுத்தக்கூடிய 3ம்Cone எனும் பிரத்தியேக சாதனம் ஒன்றின் மூலம் முப்பரிமாணம் கொண்ட புகைப்படங்களையும், வீடியோக்களையும் எடுத்து மகிழ முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கருவியில் காணப்படும் கண்ணாடி ஒன்றின் மூலம் ஒரே நேரத்தில் இரண்டு வகையான காட்சிகள் எடுக்கப்பட்டு பின்னர் இணைக்கப்படுவதன் மூலம் குறித்த காட்சியானது முப்பரிமாணமுள்ளதாக தோற்றமளிக்கின்றது. இக்கருவியினை ஐபோன் 4, ஐபோன் 4எஸ் ஆகியவற்றில் இணைத்து பயன்படுத்த முடியும்.

# முக்காடு போட்டது போன்ற புதிய ஹெல்மெட் வடிவமைப்பு



பைக்கில் செல்பவர்களின் பாது காப்பை கருதி ஹெல்மெட் அணிவது அவசியம் என்பதை உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. பல நாடுகள் இதை கட்டாயமாக்கி உள்ளன. எனினும் தலை முடி உதிர்கிறது, வியர்வை பாதிப்பு, தலைவலி போன்ற பல காரணங்களை கூறி ஹெல்மெட் அணிவதை பைக் ஓட்டிகள் தவிர்க்கின்றனர்.

இதனால் விபத்துகளில் உயிரிழப்பு ஏற்படுகிறது. இந்நிலையில், ஹெல்மெட் வடிவத்தை மாற்றி புதிய தலை கவசத்தை அனாஹப்ட் மற்றும் டெர்சி அல்ஸ்டின் என்ற சுவீடனை சேர்ந்த பெண்கள் கண்டுபிடித்துள்ளனர். விரைவில் அறிமுகமாக உள்ள இந்த ஹெல்மெட்டின் சிறப்பம்சம் குறித்து அவர்கள் கூறியதாவது :

அபராதம், தண்டனைக்கு பயந்து ஹெல்மெட் அணிவதற்கு பதில், தங்கள் பாதுகாப்புக்கு கட்டாயம் அணிய வேண்டும் என்ற எண்ணத்தை மக்களிடம் உருவாக்குவதை குறிக்கோளாக கொண்டு ஹோவ்டிங் ஹெல்மெட் தயாரிக்கப் பட்டுள்ளது. இதை அணிந்தால், பார்ப்பவர்களுக்கு ஹெல்மெட் அணிந்து இருப் பது போல் தெரியாது. சட்டை காலர் அல்லது துப்பட்டாவில் முக்காடு போட்டது போல் இருக்கும். இன்ஃப்ளேட்டர் பொருத்தப்பட்டு காற்று வசதியுடன் கூடிய இதை அணிந்தால் முடி உதிரும் பிரச்னை, வியர்வை தொல்லை இருக்காது. விமானத்தில் உள்ள கருப்பு பெட்டி (ப்ளாக் பாக்ஸ்) வசதியும் இதில் உள்ளது. இதை அணிந்து கொண்டு பயணம் செய்பவரின் முழு விவரத்தையும் தன்னுள் பதிவு செய்து கொள்ளும்.

இதில் ஆக்சிலரோமீட்டர் மற்றும் கைரோஸ்கோப்ஸ் பொருத்தப்பட்டு சென் சார்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் ஓட்டுநரின் வழித்தடம், விபத்துகள் குறித்து அறிந்து கொள்ள முடியும். இதில் உள்ள பவர் பட்டன் மூலம் அவ்வப்போது சார்ஜ் செய்து கொள்ளலாம். எல்இடி விளக்கு பொருத்தப் பட்டுள்ளது. ஒரு முறை முழுமையாக சார்ஜ் செய்தால் ஒரு மாதம் வரை தாக்கு பிடிக்கும். நுண்ணிய யுஎஸ்பி போர்ட் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது விரைவில் விற்பனைக்கு வரும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# விண்டோஸ் 8 டேப்ளட் பிசி

மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள கம்ப்யூட்டர் தயாரிக்கும் நிறுவனமான லெனோவா, வரும் அக்டோபரில் விண்டோஸ் 8 வெளியாகும்போதே, அந்த ஒப்பரேட்டிங் சிஸ்டத்தில் இயங்கும் டேப்ளட் பிசிக்களை விற்பனைக்கு அறிமுகப்படுத்துகிறது. திங்க்பேட் (Thinkpad) லேப்டாப் கம்ப்யூட்டர்களை வெளியிட்டு 20 ஆண்டுகள் ஆனதைக் கொண்டாடும் வகையில் மேற்கொள்ளப்பட்ட விழா ஒன்றில், லெனோவா இதனை அறிவித்துள்ளது. வெளியிடப்பட இருக்கும் டேப்ளட் பிசி Thinkpad Tablet 2 என அழைக்கப்படும். இன்டெல் சிப்புடன், விண்டோஸ் 8 ஆப்பரேட்டிங் சிஸ்டம் இதில் இயங்கும். தற்போது திங்க்பேட் டேப்ளட் பிசிக்களில், ஆண்ட்ராய்ட் சிஸ்டம் பதிந்து தரப்படுகிறது. விண்டோஸ் சிஸ்டத்துடன் டேப்ளட் பிசிக்களைப் பலரும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் வேளையில் இந்த அறிவிப்பினை, லெனோவா வெளியிட்டுள்ளது.



இன்டெல் நிறுவனத்தின் Clover Trail ப்ராசசர், 1,366 மு 768 ஐ.பி.எஸ். பேனல் டிஸ்பிளே, 10 மணி [illegible]

அடிப்படையில் 3ஜி அல்லது 4ஜி, மைக்ரோ எச்.டி.எம்.ஐ. அவுட்புட், யு.எஸ்.பி. போர்ட், 2 எம்பி திறனுடன் முன் பக்க கேமராவும், 8 எம்பி திறனுடன் பின்பக்க கேமரா,விருப்பப்பட்டால் என்.எப்.சி., மற்றும் கைரேகை ரீடர் ஆகியவை இதில் தரப்படுகின்றன. இதன் ஓரத்தில் செருகி வைத்துப் பயன்படுத்த ஸ்டைலஸ் ஒன்றும் கிடைக்கிறது.

இதன் எடை 1 பவுண்டுக்கும் சற்று அதிகமாக உள்ளது. தடிமன் 9.4 மிமீ. விருப்பப்பட்டால், இதனுடன் கீ போர்ட், மூன்று யு.எஸ்.பி. போர்ட், எச்.டி.எம்.ஐ. போர்ட் மற்றும் ஈதர்நெட் ஜாக் கொண்ட ஹப் தனியே தரப்படுகிறது.

மைக்ரோசாப்ட் தன்னுடைய சர்பேஸ் ப்ரோ டேப்ளட் பிசியை விற்பனைக்குக் கொண்டு வருகையில், மேலே சொல்லப்பட்ட லெனோவா டேப்ளட் பிசி போட்டியாக இருக்கும். இவற்றின் விலை இனிமேல் தான் தெரிய வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ட்டிக் பனி 10 ஆண்டுகளில் மறையும் அபாயம்!

ஆர்ட்டிக் கடலில் காணப்படும் பனிப்படிவுகள் அடுத்த 10 ஆண்டுகளில் முற்றிலுமாக மறைந்து போகும் என்று பயமுறுத்துகிறார்கள் விஞ்ஞானிகள். உலக வெப்பமயமாதல் காரணமாக, பனிக் கண்டங்களில் பனி உருகிவருவது ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட ஒன்று என்றாலும், 10 ஆண்டுகளில் முற்றிலுமாக 'ஒன்றுமில்லாமல்' போகும் என்பது, முன்பு கணிக்கப்பட்டதையும் விட விரைவானது. சரியாகச் சொல்வதென்றால், 50 சதவீத அதிக வேகம்.

விஞ்ஞானிகள் ஒரு குத்துமதிப்பான கணிப்பின்படி இப்படிக் கூறிவிடவில்லை. ஐரோப்பிய விண் வெளி ஆய்வு அமைப்பின் 'கிரையோசாட்-2' என்ற செயற்கைக்கோள் எடுத்து அனுப்பியிருக்கும் புகைப்படங்களின்படி, ஆர்ட்டிக் கடலில் கடந்த ஓராண்டில் மட்டும் 900 கன அடி கிலோமீற்றர் பரப்பளவுக்கு பனிப்படிவுகள் காணாமல் போயிருக்கின்றன.

பூமியின் இரு பனிக் கண்டங்களில் பனி அடுக்குகளின் தடிமனை அளவிடுவதற்கு என்றே விசேஷமாக அனுப்பப்பட்ட செயற்கைக்கோளாகும் கிரை யோசாட்-2. தற்போது, ஆர்ட்டிக் பகுதியில் பனிப் படிவுகள் முன்பு கணிக்கப்பட்டதை விட வேகமாகக் கரைந்து வருவதையும், உலக வெப்பமயமாதல் இப்பகுதியில் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளது என்றும் காட்டுகிறது.

இதே நிலை தொடர்ந்தால், குறிப்பிட்ட ஆண்டுகளில் இங்கு கோடை காலத்தில் பனிப் படிவே இல்லாமல் போகும். அப்போது, பனியால் மூடப்பட்ட ஆர்ட்டிக் பெருங்கடல் 'பளிச்'சென்று வெளிப்படும் என்பதால், இங்குள்ள மீன் வளம், எண்ணை, தாது வளங்களை அள்ளிச் செல்லவும், புதிய கடல் வழிகளைக் கண்டுபிடிக்கவும் மனிதர்கள் இங்கு படையெடுப்பார்கள். அது புதிய பிரச்சி னைகளுக்கு வழிவகுக்கக் கூடும் என்ற கவலையும் விஞ்ஞானிகளால் தெரிவிக்கப் படுகிறது.



# 350கிலோ மீற்றர் சென்று தாக்கும் இந்தியா ஏவுகணை சோதனை வெற்றி !



இந்தியாவில் கடந்த 25ஆம் திகதி காலை 10.00 மணியளவில் Chandipur - ஓடிஸ கடல் பகுதியில் வைத்து பிரிதிவி இரண்டு ஏவுகணை சோதனை வெற்றி பெற்றுள்ளது . அணுகுண்டுகளை தாங்கி சென்று தாக்கும் திறன் கொண்ட குறித்த ஏவுகணையே இந்த மீள் புதிய தொழில் நுட்பத்துடன் வானில் ஏவ பட்டு சோதனை வெற்றியாக




# செவ்வாய் கிரகத்தில் அங்குமிங்கும் அசைந்தாடும் மர்மப்பொருள்.

செவ்வாய் கிரகத்தில் காணப்படும் மர்மமான பொருள் குறித்து, விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தி வருகின்றனர். பூமியில் இருந்து, 57 கோடி கி.மீ. தொலைவில் உள்ள செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்குரிய சூழல் குறித்து ஆராய, அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா சார்பில் கியுரியாசிட்டி ரோவர் விண்கலம் அனுப்பப்பட்டது.

செவ்வாயின் சுற்றுச்சூழல் அமைப்பு, பாறைகள் மற்றும் மண்ணுக்கு அடியில் ஹைட்ரஜன் அளவு போன்ற பல்வேறு அம்சங்களை ஆராய, 10 உபகரணங்களுடன் கடந்த, 6ம் தேதி செவ்வாயில் தரையிறங்கிய கியுரியாசிட்டி திட்டமிட்டபடி, தனது பணிகளை மேற்கொண்டு வருகிறது. முதல் கட்டமாக, செவ்வாயின் நிலப்பரப்பை பல்வேறு திசைகளில் இருந்து படம் பிடித்து, பூமிக்கு அனுப்பியது. செவ்வாய் கிரகத்தின் அடிவானத்தில், மர்மமான யு.எப்.ஓ. எனப்படும் அடையாளம் காண முடியாத புதிரான பொருள், அங்குமிங்கும் அசைந்தாடுவதை, கியுரியாசிட்டி படம் பிடித்துள்ளது.

வேற்று கிரகவாசிகள்தான், செவ்வாயில் மனிதனின் நடவடிக்கைகளை வேவு பார்ப்பதாக, யு.எப்.ஓ. ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால், இது, வழக்கமாக கிராபிக் தொழில்நுட்பத்தில் காணப்படும் டெட் பிக்சல்கள் என, விஞ்ஞானிகள் விளக்கம் தருகின்றனர். வேற்று கிரகவாசிகள் மற்றும் விண்வெளியில் உள்ள அடையாளம் கண்டுபிடிக்க முடியாத பொருட்கள் குறித்து ஆய்வு செய்து வரும் பிரிட்டனைச் சேர்ந்த, அலீன் டிஸ்க்ளோசர் அமைப்பின் ஸ்டீபன் ஹன்னார்ட் என்பவர், கியுரியாசிட்டி அனுப்பிய வீடியோ படங்களை தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்.

சமீபத்தில், கியுரியாசிட்டி அனுப்பிய படத்தில், செவ்வாயின் அடிவானத்தில் அடையாளம் காணமுடியாத, பறக்கும் தட்டு போன்ற ஒரு மர்மப் பொருள், வெள்ளை நிறத்தில் அங்குமிங்கும் பறந்து திரிவதை ஹன்னார்ட் கண்டுபிடித்துள்ளார். அவர் கூறுகையில், கியுரியாசிட்டி அனுப்பிய வீடியோவில், செவ்வாய் கிரகத்து வானில் நான்கு பொருட்களைக் காண முடிகிறது. அவை என்ன? அடையாளம் தெரியாத பறக்கும் பொருட்களா, துகிள்களா? எனத் தெரியவில்லை என்றார்.




ஆனால், செவ்வாயில், புவிக்கிரகவாசிகளின் நடவடிக்கைகளை வேற்று கிரக சக்திகள், பறக்கும் தட்டுகளின் மூலம் வேவு பார்ப்பதையே கியுரியாசிட்டியின் வீடியோப் பதிவுகள் காட்டுவதாக, யு.எப்.ஓ. ஆய்வாளர்கள் தரப்பில் கூறப்படுகிறது. இதற்கிடையே, செவ்வாயில் தரையிறங்கிய இடத்தில் இருந்து, ஆறு மீற்றர் தூரத்துக்கு, கியுரியாசிட்டி ரோவர் நகர்ந்து சென்று, ஆய்வுகளை மேற்கொண்டிருப்பதாக, நாசா வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# நிலவில் முதல் கால் பதித்த நீல் ஆம்ஸ்ரோங் காலமானார்



நிலவில் முதன் முதலாக 1969ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி கால் பதித்த அமெரிக்காவின் விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ரோங் தனது 82ஆவது வயதில் கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை காலமானார். உடல்நலக் குறைவால் பாதிக்கப் பட்டிருந்த நீல் ஆம்ஸ்ரோங், இயற்கை மரணம் எய்தியதாக அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர். இவரது இழப்பிற்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உட்பட உலகின் முன்னணி தலைவர்கள் பலரும் ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2012 ஒகஸ்ட் 29 ஆம் திகதி வெளியிடப்பட்டது.